ആനകുളത്തെ എൽ.പി. സ്ക്കൂൾ അപ് ഗ്രേഡ് ചെയ്യുക. ചിക്കണംകുടി, വിരിപാറ, പെരിമ്പൻക
എന്നിവിടങ്ങളിൽ എൽ.പി. സ്ക്കൂൾ ആരംഭിക്കുക.
മാങ്കുളത്തു നിലവിലുള്ള ഹൈസ്ക്കൂളിനോട് ചേർത്തു ഒരു ട്രൈബൽ ഹോസ്റ്റൽ ആരംഭിക്കണം.
1. കമ്പനിക്കുടി, കോഴിയിലക്കുടി എന്നിവിടങ്ങളിൽ അംഗനവാടികൾ സ്ഥാപിക്കുക.
2. മുനിപാറയിൽ നിന്നും താളുംകണ്ടം, വേലിയാംപാറകുടിയിലേക്ക് പോകുന്നതിനു മാങ്കുളത്ത് പുഴയിൽ
നിർമ്മിക്കുക.
2. എസ്.സി., എസ്.റ്റി. വിഭാഗത്തിലെ 350 കുടുംബങ്ങൾക്കു മിച്ചഭൂമി വിതരണത്തിൽ മുൻഗണന കൊടുക

മൂന്നാർ ഗ്രാമപഞ്ചായത്ത് മാങ്കുളത്തെ പട്ടികവർഗ്ഗകോളനിയുടെ വിവരങ്ങൾ

നമ്പർ	കോളനിയുടെ പേര്	കുടുംബങ്ങളുടെ എണ്ണം	ജനസംഖ
1.	കമ്പനിക്കുടി	42	199
2.	കണ്ടത്തിക്കുടി	7	26
3.	താളുകണ്ടം	150	700
4.	വേലിയാംപാറ	37	100
5.	വേലിയാംപാറ	55	269
6.	ചിക്കണംകുടി	40	180
7.	പെരുമാൾകുടി	6	32
8.	പാറക്കുടി	13	70
9.	സിങ്കുകുടി	38	226
10.	കള്ളക്കുട്ടികുടി	15	75
11.	ശേവൽകുടി	46	182
12.	കോഴിവിളക്കുടി	30	126
13.	മാങ്ങാപാറക്കുടി	13	62
14.	കോഴിയിള മന്നാം കുടി	20	96
	ആകെ	512	2343

താളും കണ്ടം കേന്ദ്രമാക്കി ആയുർവ്വേദ ആശുപത്രി സ്ഥാപിക്കണം.
ആദിവാസി വീടുകൾക്ക്, വീട്, കക്കൂസ് നിർമ്മിച്ചുനൽകണം.
മാങ്കുളത്ത് പോലീസ് സ്റ്റേഷൻ ആരംഭിക്കണം.
എസ്.സി./എസ്.റ്റി. വിഭാഗങ്ങൾക്കു കോഴിവളർത്തൽ, പന്നിവളർത്തൽ, കന്നുകാലിവളർത്തൽ ഇവയ്ക്ക
ധനസഹായം ചെയ്യണം.
അനർട്ടിന്റെ ഒരു ശാഖ മാങ്കുളത്തു ആരംഭിക്കണം.
മാങ്കുളം കേന്ദ്രമാക്കി പുതിയ പഞ്ചായത്തു രൂപികരണം.
ചിക്കണംകുടി, പാറക്കുട, ശിങ്കുകുടി, ശേവൽക്കുടി, കോഴിയളക്കുടി, വേലിയാംപാറക്കുടി, താളും കണ്ടംകു
തുടങ്ങി എല്ലാകുടികളിലേക്കും റോഡുകളും പാലങ്ങളും നിർമ്മിക്കണം.
എല്ലാ ആദിവാസികുടികളിലും സൗരവിളക്കുകൾ സ്ഥാപിക്കണം.
ഇടമലക്കുടിയിൽ വനവിഭവങ്ങളായ ഔഷധങ്ങൾ. തേൻ, ലവണ പട്ട മുതലായവ ന്യായമായ വിലയി
ശേഖരിക്കുവാനും, ഔഷധിയ്ക്ക് അവ വിതരണം ചെയ്യുന്നതിനും നടപടി സ്വീകരിക്കണം.

വിഭവസമാഹരണം

മൂന്നാർ പഞ്ചായത്ത് വിസ്തൃതിയിൽ ഏറ്റവും മുന്നിൽ നിൽക്കുന്നുവെങ്കിലും പഞ്ചായത്തിന്റെ വരുമാനം വളരെ പിന്നിലാണ് നിൽക്കുന്നതെന്നാണ് പഞ്ചായത്തിന്റെ വരുമാന സ്ഥിതി വിവരക്കണക്കുകൾ ചൂണ്ടിക്കാട്ടുന്നത്.

മൂന്നാർ ഗ്രാമ പഞ്ചായത്ത് വരവ് സംബന്ധിച്ച വിവരങ്ങൾ

ഇനം	ധനാഭ്യർത്ഥന	പിരിച്ചത്	ബാക്കി
കെട്ടിട നികുതി	981280	624631	356649
തൊഴിൽ നികുതി	942413	584293	353120
വിനോദ നികുതി	72796	72796	72796
അഡി: വിനോദ നികുതി	44093	44093	44093
പ്രദർശന നികുതി	2786	2786	2786
പ്രദർശന നികുതിയിന്മേൽ സർ ചാർജ്	702	702	702
ചന്തവരവ്	12425	12425	12425
ലാൻറ് സെസ്സ്	97602	97602	97602
ലൈസൻസ് ഫീസ്	8078	8078	8078
കെട്ടിട നികുതി സർ ചാർജ്	164201	164201	164201
വസ്തു കൈമാറ്റ നികുതി	120990	120990	120990
സർക്കാർ ഗ്രാൻറുകളും മറ്റും ഒഴികെയുള്ള മറ്റു വരവുകൾ	1314010	1314010	1314010
ഡെപ്പോസിറ്റ്	221185	221185	221185
ആകെ	3982561	3267792	414769

നികുതി പിരിവിലും സമ്പ്രദായങ്ങളിലും കാലാകാലങ്ങളിൽ മാറ്റം വരുത്താത്തതു മൂലം വരുമാനം മെച്ചപ്പെടുന്നതിനുള്ള സാധ്യത ഇല്ലാതാകുന്നു. വരുമാനം കുറയുന്നതിന് മറ്റൊരു കാരണം ടാറ്റാ ടീ കമ്പനിയുടെ അധീനതയിലാണ് പ്രധാന ടൗണും മാർക്കറ്റും, എസ്റ്റേറ്റ് മേഖലകളും എന്നതാണ്. പഞ്ചായത്തിലെ പ്രധാന കച്ചവട കേന്ദ്രമായ മൂന്നാർ ഡെയ്ലി മാർക്കറ്റ് ശുചീകരിക്കുന്നതും പരിപാലിക്കുന്നതും പഞ്ചായത്താണെങ്കിലും മാർക്കറ്റിൽ നിന്നുള്ള വരുമാനം കൈപ്പറ്റുന്നത് ടാറ്റാ ടീ കമ്പനിയാണ്. പഞ്ചായത്തിന്റെ നടത്തിപ്പ്, ബസ് സ്റ്റാൻഡ്, കംഫർട്ട് സ്റ്റേഷനുകൾ, വഴിവിളക്കുകൾ, ജീവനക്കാരുടെ ശമ്പളം, മറ്റല

വൻസുകൾ, ആംബുലൻസ്, ജീപ്പ്, ലോറി എന്നീ വാഹനങ്ങളുടെ അറ്റകുറ്റപ്പണിയും, പരിപാലനവും എന്നിവയ്ക്കാവശ്യമായി വരുന്ന ഭാരിച്ച ചെലവ് വഹിക്കുവാൻ പഞ്ചായത്തിന് ഇപ്പോഴുള്ള വരുമാനം തികയാറില്ല.

തോട്ടം തൊഴിലാളി മേഖലയിൽ ജനസാന്ദ്രത ഏറെയുണ്ടെങ്കിലും കൂട്ടായി ലയങ്ങളിലുള്ള ജീവിതമാണ്. പത്തും ഇരുപതും കുടുംബങ്ങൾ ഓരോ ലയങ്ങളിലും താമസിക്കുന്നു. അത്തരം ലയങ്ങൾ ഓരോ എസ്റ്റേറ്റിലും വിവിധ ഡിവിഷനുകളിലായി ക്രമീകരിക്കപ്പെട്ടിരിക്കുന്നു. ഈ ലയങ്ങൾക്ക് കെട്ടിട നികുതി വളരെ കുറവാണ്. വ്യവസായ കേന്ദ്രങ്ങളായ ഫാക്ടറികളിൽ നിന്നും അതിനോടനുബന്ധിച്ച ഓഫീസുകളിൽ നിന്നും നാമമാത്രമായ തുക മാത്രമാണ് കെട്ടിട നികുതിയായി പഞ്ചായത്തിന് ലഭിക്കുന്നത് പഞ്ചായത്ത് ജീവനക്കാർക്ക് വേതനം കൊടുക്കുന്നതിനു പോലും ഓരോ മാസവും ബുദ്ധിമുട്ട് നേരിടുന്നുണ്ട്. പഞ്ചായത്തിന്റെ ദൈനംദിന ചെലവുകൾക്ക് പോലും വകയില്ലാത്ത പ്രതിസന്ധിക്ക് ഒരു പരിഹാരം കാണുന്നതിന് ഗ്രാമസഭകളിൽ ഉയർന്ന വന്ന പല അഭിപ്രായങ്ങളും വളരെ ഫലപ്രദമായി കാണുന്നു.

മൂന്നാർ ഗ്രാമ പഞ്ചായത്ത് ചെലവ് സംബന്ധിച്ച വിവരങ്ങൾ

ഇനം	തുക
ഭരണം പൊതുമരാമത്ത്	1279862.00 634097.00
വിദ്യാഭ്യാസം	20088.00
ജലവിതരണം, ഓടകൾ; പൊതുജനാരോഗ്യം	90958.00
തെരുവിളക്കുകൾ കത്തിക്കുന്നത്	174032.00
മറ്റുള്ളവ	811498.00
ആകെ	3010535.00

പരിഹാരമാർഗ്ഗങ്ങൾ

1. എസ്റ്റേറ്റ് ലയങ്ങൾ ഫാക്ടറികൾ, ഓഫീസുകൾ, ഉദ്യോഗസ്ഥന്മാരുടെ ക്വാർട്ടേഴ്സുകൾ മുതലായവയുടെ കെട്ടിട നികുതി പുനർനിർണയം ചെയ്യുക.
2. വ്യാവസായികാടിസ്ഥാനത്തിൽ നടത്തപ്പെടുന്ന തേയിലകൃഷി നിലങ്ങളുടെ നികുതി (ലാൻഡ് സെസ്) പിരിച്ചെടുക്കുക.
3. മൂന്നാർ മാർക്കറ്റ് പഞ്ചായത്ത് ഏറ്റെടുക്കുകയും വായ്പാ സാധ്യതകൾ കണ്ടുപിടിച്ച് മൂന്ന് നില ഷോപ്പിങ് കോംപ്ലക്സ് പണിയുകയും ന്യായമായ വാടകയും കച്ചവട നികുതിയും ഈടാക്കുക.
4. ദേവികുളം 'ഇറച്ചിപാറ' ജംഗ്ഷനിൽ ഷോപ്പിംഗ് കോംപ്ലക്സും മിനി ബസ് സ്റ്റാൻഡും നിർമ്മിക്കുക.

5. വഴിയോര വാണിഭക്കാരെ ഷോപ്പിംഗ് കോംപ്ലക്സുകൾ നിർമ്മിച്ച് അധിവസിപ്പിക്കുകയും വാടക ഈടാക്കുകയും ചെയ്യുക.
6. വരുമാനമുള്ള മുഴുവൻ ആളുകളിൽ നിന്നും ന്യായമായ നികുതി വസൂലാക്കുകയും, കാർഷിക നികുതി, വിനോദ നികുതി എന്നിവ കൃത്യമായി പിരിച്ചെടുക്കുകയും ചെയ്യുക.
7. പഞ്ചായത്തിൽ കമ്പോസ്റ്റ് വളം നിർമ്മാണ കേന്ദ്രം ആരംഭിക്കുക.
8. പഞ്ചായത്തുക റോപ് വേ നിർമ്മിച്ച് വരുമാനം വർദ്ധിപ്പിക്കുക.
9. ടൂറിസ്റ്റ് ഇൻഫർമേഷൻ സെൻററുമായി ബന്ധപ്പെടുത്തി വാഹനം, ഗൈഡ്, ബോട്ട്, കുതിര, ട്രക്കിംഗ്, ഫിഷിംഗ് എന്നിവയ്ക്കുള്ള സൗകര്യങ്ങൾ ഏർപ്പെടുത്തുക.
10. ജലസംഭരണികളിൽ മിനി വൈദ്യുതി പദ്ധതികൾ നടപ്പിലാക്കി വൈദ്യുതിയിൽ സ്വയം പര്യാപ്തതരാവുക.
11. പഞ്ചായത്തു തലത്തിൽ വിവിധ സഹകരണ സംഘങ്ങൾ രൂപപ്പെടുത്തി വരുമാനം നേടാം. (ഉദാ: കൃഷി, കൂൺകൃഷി, ഡയറി ഫാം etc)
12. പഞ്ചായത്തുക ഗ്രാം സ്ലാൻറ് പൊതുശ്മശാനം വൈദ്യുതി ശ്മശാനമാക്കി മാറ്റി ഫീസ് ഈടാക്കുക.
13. ഖാദി, അനർട്ട് എന്നിവയുമായി ബന്ധപ്പെട്ട് പഞ്ചായത്തുതലത്തിൽ ബയോഗ്യാസ് പ്ലാൻറുകൾ സ്ഥാപിച്ച് ഇന്ധന നികുതി ഈടാക്കുക.
14. മൂന്നാർ പഞ്ചായത്ത് ബസ് സ്റ്റാൻഡിനോടനുബന്ധിച്ച് ചിലവ് കുറഞ്ഞ ടൂറിസ്റ്റ് ലോഡ്ജുകൾ പണിയുക.
15. റോഡുകളുടെ മൺവേല, ആശുപത്രി നിർമ്മാണം, സ്കൂൾ നിർമ്മാണം, കിണർ നിർമ്മാണം ഇവയ്ക്ക് സന്നദ്ധ സംഘടനകളുടെ സേവനം ലഭ്യമാക്കുക.
16. കയ്യാല നിർമ്മാണം, തോടുകൾക്ക് സംരക്ഷണഭിത്തി, കുളങ്ങൾ ഇവയുടെ നിർമ്മാണത്തിന് സർക്കാർ ഗ്രാൻറുകളോടൊപ്പം പൊതുജന പങ്കാളിത്തവും ഉറപ്പുവരുത്തുക.
17. പഞ്ചായത്തുതലത്തിൽ ക്രെഡിറ്റ് യൂണിയൻ ഉണ്ടാക്കി വാർഡുകൾ തോറും ശാഖകൾ നടപ്പിലാക്കി ജനങ്ങളിൽ സമ്പാദ്യശീലം വർദ്ധിപ്പിക്കുകയും പണയ വസ്തുവിന്മേൽ ലോണുകൾ നൽകി ചെറിയ പലിശകൾ ഈടാക്കുകയും ചെയ്യാം.
18. കോൺട്രാക്ടർമാരെയും മറ്റിടത്തട്ടുകാരെയും ഒഴിവാക്കി പൊതുമരാമത്തു പണികൾ ലാഭകരമാക്കുന്നതിന് പദ്ധതി ആസൂത്രണം ചെയ്യുക.
19. പഞ്ചായത്തു കമ്മ്യൂണിറ്റി ഹാളിനോടനുബന്ധിച്ച് അടുക്കളയും ഊട്ടുപുരയും നിർമ്മിച്ച് ഓരോ പരിപാടിയ്ക്കും ന്യായമായ വാടക ഈടാക്കുക.

മൂന്നാർ ഗ്രാമ പഞ്ചായത്ത് പ്രവർത്തന രേഖ

മൂന്നാർ ഗ്രാമ പഞ്ചായത്ത് ഭരണസമിതി 1995 ഒക്ടോബർ മാസം 2-ാം തീയതി വിവിധ രാഷ്ട്രീയ പാർട്ടി പ്രവർത്തകരുടെയും സാംസ്കാരിക നായകന്മാരുടെയും സാന്നിദ്ധ്യത്തിൽ മൂന്നാർ പഞ്ചായത്ത് കമ്മ്യൂണിറ്റി ഹാളിൽ വച്ച് സത്യപ്രതിജ്ഞ ചെയ്ത് അധികാരമേറ്റെടുത്ത് അഴിമതി രഹിതവും, വികസന പ്രവർത്തനങ്ങൾക്ക് രാഷ്ട്രീയമോ പ്രാദേശികമോ ആയ തരം തിരിവുകൾ കൂടാതെയും നിർവഹിക്കും എന്ന ഏക ലക്ഷ്യത്തോടെ തുടങ്ങിയ ഈ ഭരണസമിതി ചർച്ചകളും, സെമിനാറുകളു സംഘടിപ്പിക്കുകയും പല വികസന പ്രവർത്തനങ്ങൾക്ക് തുടക്കം കുറിക്കുകയും ചെയ്തു.

9-ാം പഞ്ചവൽസര പദ്ധതി ജനകീയ പദ്ധതി എന്ന പുത്തൻ ആശയം ഉടലെടുക്കുകയും ജനപ്രതിനിധികളിലും പൊതുജനങ്ങളിലും വളരെ ഉത്സാഹവും ഉണർവും നേടി ജൈത്രയാത്ര തുടങ്ങിയിരിക്കുന്നു.

വളരെയേറെ പദ്ധതികൾ ഗ്രാമസഭകളിൽ ഉയർന്നു വന്നിരിക്കുന്നു. ജനപങ്കാളിത്തത്തോടെ വളരെയേറെ ചെയ്യുവാനും കഴിയും എന്ന്. ഈ കാലയളവിൽ കഴിഞ്ഞതും. തുടർന്നു കൊണ്ടിരിക്കുന്നതുമായ പദ്ധതികൾ ചൂണ്ടിക്കാട്ടുന്നു.

1995 ഒക്ടോബർ 2നുശേഷം മൂന്നാർ പഞ്ചായത്തിൽ നടത്തിയ എടുത്തു പറയേണ്ട ചില വികസന പ്രവർത്തനങ്ങൾ താഴെ ചേർക്കുന്നു.

1. 9-ാം വാർഡിൽ മൂന്നാർ കോളനിയിൽ 150 അടി അകലത്തിൽ ഓസ് സ്ഥാപിച്ച് ശുദ്ധ ജല വിതരണം
2. 9-ാം വാർഡിൽ മൂന്നാർ കോളനിയിൽ ഒരു ലക്ഷം രൂപാ ചിലവിൽ വാട്ടർ ടാങ്ക്, മോട്ടോർ പുറ, കിണറുമൂടി, ജല ശുദ്ധീകരണം തുടങ്ങിയ പദ്ധതി നിർമ്മാണം തുടങ്ങി.
3. ഇക്കാ നഗർ കിണർ, സാസ്റ്റോസ് കോളനി കിണർ, മാങ്കുളം ടാങ്ക്, ഇടമലക്കുടി ടാങ്ക്, ന്യൂ കോളനി ടാങ്ക് തുടങ്ങിയവ വൃത്തിയാക്കി ഉപയോഗപ്രദമാക്കുകയും ഇടമലക്കുടി, അന്തോണിയാർ കോളനി, കാപ്പി സ്റ്റോർ, ചട്ടമൂന്നാർ തുടങ്ങിയ ഭാഗങ്ങളിൽ പൈപ്പ് അറ്റ കുറ്റപണികൾ നടത്തുകയും ചെയ്തു.
4. രാത്തുപ്പാറ, ചീറ്റിവരൈ, ലക്ഷ്മി, നാഗർമുടി, ചോലൈ മലൈ തുടങ്ങിയ മേഖലകളിൽ പുതിയ വൈദ്യുതി കണക്ഷൻ നൽകി.
5. മൂന്നാർ ടൗൺ ടാക്സി സ്റ്റാൻറ് സോളിംഗ് ആൻറ് മെറ്റലിംഗ് നടത്തി.
6. മൂന്നാർ ടൗൺ കംഫർട്ട് സ്റ്റേഷൻ നിർമ്മിച്ചു.
7. 3-ാം വാർഡിൽ അടിമാലിക്കാട് റോഡ് ടാറിംഗ്
8. 6-ാം വാർഡിനും 5-ാം വാർഡിനും ചേർന്ന് ODIC റോഡിന് ടാറിംഗ്
9. മൂന്നാർ കോളനിയിൽ ബ്ലോക്ക് പഞ്ചായത്ത് വഴി 18 കക്കൂസുകൾ നിർമ്മിച്ചു.
10. മൂന്നാർ ടൗണിൽ ഇറച്ചികടയോട് ചേർന്ന ഭാഗത്ത് മാട്ടുപ്പെട്ടി റോഡുമായി ബന്ധിപ്പിച്ച് നടപ്പാലം നിർമ്മിക്കുന്നതിന് തറക്കല്ലിട്ടു.
11. അൺറ്റെഡ് ഫണ്ട് ഉപയോഗിച്ച് എല്ലാ വാർഡുകളിലും വൈദ്യുതി വിതരണം ചെയ്യുന്നതിന് മൂന്നാർ ടൗണിൽ 25 പോസ്റ്റുകൾ നിർമ്മിക്കുന്നതിനും തീരുമാനിച്ചു.
12. അൺനെയ്ഡ് ഫണ്ട് ഉപയോഗിച്ച് പഞ്ചായത്ത് ബിൽഡിംഗിനോട് അനുബന്ധിച്ച് വെഹിക്കിൾ ഷെഡ് നിർമ്മിച്ചു.
13. ജെ.ആർ.വൈ. സ്കീമിൽ ടൗണിലും മറ്റു ഭാഗങ്ങളിലുമായി വികസന പ്രവർത്തനത്തിന് പദ്ധതി തയ്യാറാക്കി.

നവംബർ 1-ാം തീയതി കേരള പിറവി ദിനത്തോട് അനുബന്ധിച്ച് ജനകീയ പങ്കാളിത്തത്തോടെ ആരംഭിച്ച വികസന പ്രവർത്തനങ്ങൾ

വാർഡ്	പദ്ധതി വിവരം	ഉൽഘാടകൻ
1.	എസ്.പി. പുരം മുതൽ ചെണ്ടുവരെ വരെ റോഡു നിർമ്മാണം	വാർഡു മെമ്പർ ശ്രീ. ഗാന്ധി മുത്തയ്യ
2.	ചിട്ടിവരൈ OC ഡിവിഷൻ മുതൽ പഴതോട്ടം നോർത്തുഡിൻ വരെ റോഡു നിർമ്മാണം	വൈസ് പ്രസിഡൻറ് എ.പി. ചാർലി.
3.	8-ാം മൈൽ മുതൽ അരിവക്കാട് ടോപ്പ് ഡിവിഷൻ വരെ റോഡ് അറ്റകുറ്റ പണികൾ .	വാർഡു മെമ്പർ രാധാകൃഷ്ണൻ
4.	ആശുപത്രി മുതൽ 1-ാം ഡിവിഷൻ ക്യാൻറീൻ വരെ റോഡ് അറ്റകുറ്റപണികൾ	വാർഡു മെമ്പർ ആർ.വി. പഴനി.
5.	എ.എൽ.പി. സ്കൂൾ ചുറ്റുപാട് വൃത്തിയാക്കി	വാർഡു മെമ്പർ സരോജ നടരാജൻ
6.	ദേവികുളം ഹൈസ്കൂൾ ചുറ്റുപാട് വൃത്തിയാക്കി	വാർഡു മെമ്പർ സുശീല മനോകരൻ
7.	ലൈബ്രറി, സ്കൂൾ, പരിസരം ശുചീകരണം	വാർഡു മെമ്പർ എം.വൈ. ഔസേഫ്.
8.	ശിവൻമല- ലക്ഷ്മി റോഡ് അറ്റകുറ്റപണികൾ	വാർഡു മെമ്പർ വിജയലക്ഷ്മി
9.	1) മൂന്നാർ ടൗൺ കംഫർട്ട് സ്റ്റേഷൻ ഉൽഘാടനം ചെയ്തു. 2) സോഡിയം വേപ്പർ ലാമ്പ് സ്ഥാപിക്കൽ 3) മൂന്നാർ കോളനി ശുദ്ധജല വിതരണ പദ്ധതിക്ക് തറക്കല്ലിട്ടു 4)മൂന്നാർ കോളനി- ഇക്കാ മെമ്മോറിയൽ നഴ്സറി സ്കൂൾ റോഡ് സോളിംഗ് ആൻറ് മെറ്റലിംഗ്	പ്രസിഡൻറ് ജി. സോലൈസാമി ബ്ലോക്ക് പ്രസിഡൻറ് ജി. മോഹൻ കുഹർ പ്രസിഡൻറ് ജി. സോലൈസാമി. വാർഡു മെമ്പർ ആനി
10	കിൻറർ ഗാർഡൻ സ്കൂൾ ഉൽഘാടനം	പ്രസിഡൻറ് ജി. സോലൈസാമി
11.	പച്ചക്കറി വിത്ത് വിതരണവും അടുക്കള തോട്ടം ഉത്ഘാടനവും	ജിയാ പഞ്ചായത്ത് പ്രസിഡൻറ് ഷീലാ സ്റ്റീഫൻ
12.	ഇടമലക്കുടി നടപാത നിർമ്മാണം	വാർഡു മെമ്പർ അർജുൻ ജെയ്സിംഗ്
13.	സ്റ്റേഡിയം റോഡ് അറ്റകുറ്റപണികൾ	വാർഡു മെമ്പർ സീവല മുത്ത്
14.	ലക്കംകുടി നടപാത റോഡായി നിർമ്മിച്ചു	പ്രസിഡൻറ് ജി. സോലൈസാമി.
15.	ചോത്തുപാറ സ്കൂൾ ചുറ്റുപാട് വൃത്തിയാക്കി	വാർഡു മെമ്പർ ചുരുബി.

ഉപസംഹാരം

കഴിഞ്ഞ കാല വികസന പ്രവർത്തനങ്ങളിൽ വന്നുപെട്ട പിഴവുകൾ പരിഹരിക്കുന്നതിനും ലഭിക്കാനിരിക്കുന്ന ഫണ്ടുകളുടെ ശരിയായ വിനിയോഗവും ഇവയുടെ പ്രയോജനം മുഴുവനായി പൊതുജനങ്ങളിൽ എത്തിക്കുന്നതിനും ലക്ഷ്യമിട്ടിരിക്കുന്ന ജനകീയാസൂത്ര പദ്ധതിയുടെ പ്രാരംഭജില്ലാതല പരിശീലന ക്ലാസുകൾ വളരെ വിജയപ്രദമായി സംഘടിപ്പിക്കുവാൻ കഴിഞ്ഞു.

പ്രഗൽഭരും പരിചയസമ്പന്നരുമായ വ്യക്തികളെ ലോക്കൽ ട്രെയിനിങ് ക്യാമ്പിലേയ്ക്ക് തിരഞ്ഞെടുക്കുന്നതിനും ഫലവത്തായ ഗ്രാമസഭകൾ വിളിച്ചു കൂട്ടുന്നതിനും കഴിഞ്ഞിട്ടുണ്ട്. വാർഡുകൾ തോറും നടത്തപ്പെട്ട ഈ ഗ്രാമസഭകളിൽ ജനകീയ കാര്യങ്ങൾ വളരെ ഏറെ കണ്ടെത്തുന്നതിനും അവ രേഖപ്പെടുത്തുന്നതിനും സാധിച്ചിട്ടുണ്ട്.

ഗ്രാമസഭകൾക്കുശേഷം ജില്ലാതല രണ്ടാംഘട്ട സെമിനാർ സംഘടിപ്പിക്കുകയും വികസന റിപ്പോർട്ട് തയ്യാറാക്കുന്നതിനുള്ള പ്രയോഗിക പരിജ്ഞാനം നേടുകയും ചെയ്തു. ശേഷം നടത്തപ്പെട്ട D.R.P, L.R.P യോഗങ്ങളിലൂടെ കൺവീനർമാരെ തിരഞ്ഞെടുക്കുകയും വാർഡുതോറുമുള്ള പഠനപര്യാടനങ്ങളും സ്ഥിതി വിവരണകണക്കുകളുടെ ശേഖരണവും തുടർന്ന് വികസന റിപ്പോർട്ട് തയ്യാറാക്കുന്നതിനുള്ള മുന്നൊരുക്കങ്ങളും വളരെ പ്രതീക്ഷാനിർഭരരായി എൽ.ആർ.പി. കൺവീനർമാർ നടത്തുകയുണ്ടായി. അവരുടെ സ്തുത്യർഹമായ സേവനങ്ങൾ തങ്കലിപികളിൽ ആലേഖനം ചെയ്യപ്പെടേണ്ടതുണ്ട്.

സംസ്ഥാന ബോർഡ് പ്ലാനിങ് ബോർഡ്- ജനകീയ ആസൂത്രണ പ്രസ്ഥാനം- പഞ്ചായത്ത് വിലയിരുത്തൽ - റിപ്പോർട്ട്

ജില്ല : ഇടുക്കി ബ്ലോക്ക് : ദേവികുളം ഗ്രാമം : മൂന്നാർ

വാർഡ് നമ്പർ	ഗ്രാമസഭാ തീയതി	പങ്കെടുത്തവർ		മൊത്തം	പങ്കെടുത്ത ഉദ്യോഗസ്ഥരുടെ കണക്ക്	എസ്.സി./എസ്.ടി. പങ്കെടുത്തവർ
		ആൺ	പെൺ			
1.	25-9-96	30	82	112	7	76
2.	23-8-96	34	71	105	3	35
3.	24-8-96	28	89	117	2	80
4.	29-8-96	57	94	151	3	120
5.	28-9-96	37	68	105	4	81
6.	30-9-96	30	72	102	10	78
7.	1-10-96	30	78	108	3	69
8.	22-9-96	34	72	106	4	92
9.	2-10-96	141	167	308	6	183
10.	2-10-96	200	250	450	4	120
11.	21-9-96	32	102	134	2	90
12.	30-9-96	51	82	133	3	110
13.	29-9-96	45	65	110	2	90
14.	30-9-96	60	124	184	2	161
15.	6-10-96	30	73	103	3	82
		870	1537	2407	58	1550

ചരിത്രം, പ്രകൃതിവിഭവങ്ങൾ, ജലസ്രോതസുകൾ, ഊർജസ്രോതസുകൾ, മണ്ണിനെ പൊന്നാക്കുന്ന കൃഷി വൈഭവത്തിന്റെ സവിശേഷതകൾ, പൊൻമഴ പൊഴിക്കും ടൂറിസം വ്യവസായ സാധ്യത, ജനവിഭാഗം വനങ്ങളും അവയുടെ സമ്പത്തും തുടങ്ങിയ വിഷയങ്ങൾ വിശദമായി പഠിക്കുകയും യോഗം ചേർന്ന് വിശകലനം ചെയ്യപ്പെടുകയും ചെയ്തു.

രണ്ടാംഘട്ട പരിശീലനം

82	52	30	11-11-96 മുതൽ 13-11-96 വരെ	15	13	20 DRP 4 KRP	10 AM മുതൽ 5 വരെ

വികസന റിപ്പോർട്ടിന്റെ വിവിധഭാഗങ്ങളിൽ കണ്ണോടിച്ചു നോക്കുമ്പോൾ ഒരു കാര്യം വ്യക്തമാകുന്നു. "ഇത് ഭൂമിയെ സ്വർഗമാക്കുന്ന ഒരു ഇന്ദ്രജാലം." പക്ഷെ മറ്റൊരു മറുവശം ഈ പദ്ധതികളുടെ നടത്തിപ്പിനായി വലിയ ഒരു ഒരു മുതൽ മുടക്കു തന്നെ വേണ്ടിയിരിക്കുന്നു. അനുവദിച്ചുകിട്ടുന്ന ഫണ്ടുകൾക്കൊപ്പം, ജനപങ്കാളിത്തവും, വൻകിട വായ്പാ സമാഹരണവും അവ വിനിയോഗിക്കേണ്ട രീതിയും അടിസ്ഥാനമാക്കിയായിരിക്കും വിജയവും.

9-ാം ജനകീയ ആസൂത്രണം
ഒന്നാം പഞ്ചായത്തുതല പരിശീലനം

പങ്കെടുത്തവർ	പങ്കെടുത്തവർ		തീയതി	ജന പ്രതിനിധി	ഉദ്യോഗസ്ഥന്മാർ	DRP/LRP മാരുടെ എണ്ണം	സമയം
	ആൺ	പെൺ					
72	37	35	14-10-96 മുതൽ 16-10-96	15	28	26 + 126	10.30 AM മുതൽ 8.30 PM

ഉദാഹരണം പരിശോധിച്ചാൽ മൂന്നാർ പഞ്ചായത്തിന്റെ വികസന റിപ്പോർട്ടിൽ പക്കറി, പഴം കൃഷിയും അതുവഴിയുള്ള വൻസാമ്പത്തിക നേട്ടം പ്രഥമപ്രധാനമായി കാണുന്നു. അതുപോലെ വ്യാവസായിക മേഖലയിൽ ടൂറിസം വികസനവും പ്രധാന പദ്ധതിയായ റോപ്പ്വേ നിർമ്മാണം സർക്കാരേതര വൻകിട വായ്പാസമാഹരണത്തിലൂടെ നടപ്പിലാക്കുകയും ഇരുവഴി നേടുന്ന പണം വായ്പാ തിരിച്ചടയുകയും ശേഷം പഞ്ചായത്തിന്റെ ഇതര വികസന പ്രവർത്തനങ്ങൾക്ക് വിനിയോഗിക്കാവുന്നതാണ്. ആയതിനാൽ ഇത്തരം പദ്ധതികൾക്ക് പ്രാധാന്യം കൊടുക്കുകയും പ്രോൽസാഹിപ്പിച്ച് പദ്ധതി നടപ്പിലാക്കേണ്ടതുമാണ്.

ഈ വികസന റിപ്പോർട്ട് തയ്യാറാക്കുന്നതിന് സഹകരിച്ച മൂന്നാർ പഞ്ചായത്ത് ഡി.ആർ.പി.മാർ എൽ.ആർ.പി.മാർ പഞ്ചായത്ത് ജീവനക്കാർ, ഗ്രാമപഞ്ചായത്ത് ഭരണസമിതി അംഗങ്ങൾ, ബ്ലോക്ക് പഞ്ചായത്ത് കമ്മിറ്റി അംഗങ്ങൾ, ജില്ലാ പഞ്ചായത്ത് കമ്മിറ്റി അംഗങ്ങൾ കൂടാതെ വിവിധ വകുപ്പുകളിലെ സർക്കാർ ഉദ്യോഗസ്ഥർ, അധ്യാപകർ തുടങ്ങിയ സകലർക്കും ജനകീയാസൂത്രണ പ്രക്രിയയിൽ പങ്കാളികളായ സകല നാട്ടുകാരോടും മൂന്നാർ പഞ്ചായത്തിന്റെ ഭരണസമിതിയ്ക്കുവേണ്ടി ഹൃദയം നിറഞ്ഞ നന്ദി രേഖപ്പെടുത്തിക്കൊള്ളുന്നു.

MATTUPETTY DAM

MATTUPETTY DAM

MUNNAR VIEWS



MUNNAR VIEWS

RAJAMALA

A SCENE IN MUNNAR (KASHMIR OF SOUTH INDIA)

With Best Compliments

URVASI STUDIO

Munnar's one and only Colour Lab
Prop: C. KUTTIAPILLAI

A Hide -away in Munnar
To make sure of your Retreat, Contact

ROYAL RETREAT

KANNAN DEVAN HILLS, MUNNAR, KERALA
Phone: 04865- 30240,
Fax: 30440, Cable - RETREAT

மூணார் கிராம பஞ்சாயத்து

மக்கள் திட்டம்

வளர்ச்சி திட்ட அறிக்கை

PRESIDENT

G. SOLAI SAMY



Y. SETHUNATH
Panchayath Secretary



A. P. CHARLY
Vice-President

M. Y. OUSEPH. M. A
Standing committee Chairm

K. SANOJA NATAR
V Ward

G. GANDHI MUTHAIAH
I st Ward

GANAMMA .V
XI Ward

VIJAYALAKSHMI
VII Ward

M. SUSEELA
VI Ward

R. RADHAKRISHANAN
III Ward

SELVAMUTHU
XIII Ward

ANNIE RICHARD
IX th Ward



THOMAS JOSEPH PAT
X Ward

R. V PALANI



UNA[illegible]VNG

SUBULSANNA[illegible]

வளர்ச்சி திட்ட அறிக்கை தயார் செய்தவர்கள்

1. ஆனிஜோஸ் 9ம் வார்டு மெம்பரி மூணார் கிராம பஞ்சாயத்து.
2. V.மூக்கையா-ஆசிரியர், ALP ஸ்கூல் அரிவிக்காடு
3. S. இளங்கோவன். பார்மஸிஸ்ட். அரசு ஆயுர்வேத மருத்துவமனை. மூணார்
4. G. மோகன் குமார். உபதலைவர். பிளாக் பஞ்சாயத்து. தேவிகுளம்
5. R. இராமராஜ் ஆசிரியர் அரசு உயர்நிலைப்பள்ளி செண்டுவரை
6. ஹெப்ஸி பிரின்ஸ் (ஆசிரியை) DRP மூணார்
7. ஜ. யேசுதாஸ் L.D.கிளார்க் மூணார் பஞ்சாயத்து அலுவலகம்
8. வி.எம். பெரோஸ். L.D.கிளார்க். உதவி தொழிலாளர் நல அதிகார் அலுவலகம் மூணார்
9. மாத்யூஸ் DRP மாங்குளம்

പരിശ്രമം ചെയ്യുകിലെന്തിനേയും
വശത്തിലാക്കാൻ കഴിവുള്ളവണ്ണം
ദീർഘങ്ങളാം കൈകളെ നൽകിയത്രെ
മനുഷ്യനെ പ്പാരിലയച്ചതീശൻ.

റിപ്പോർട്ട് തയ്യാറാക്കിയവർ

ജയ ശക്തിവേലു
ഡി.ആർ.പി., ചൊക്കനാട്

വി. മുക്കയ്യ, ടീച്ചർ
A L P സ്കൂൾ, അറിവിക്കാട്.



എസ്. ഇളങ്കോവൻ,
ഫാർമസിസ്റ്റ്, ഗവ. ആയുർവേദ
ഡിസ്പെൻസറി, മൂന്നാർ.



മാത്യൂസ്, ഡി. ആർ. പി.



രാമരാജ് ആർ, ടീച്ചർ
ഗവ. ഹൈസ്കൂൾ ചെണ്ടുവരൈ.

ഹെപ്സി പ്രിൻസ്
ടീച്ചർ, ഡി. ആർ. പി. മൂന്നാർ.

വി. എം. ഫിറോസ്
എൽ. ഡി. ക്ലാർക്ക്,
അസി. ലേബർഓഫീസ്, മൂന്നാർ.

ജെ. യേശുദാസ്,
എൽ. ഡി. ക്ലാർക്ക്, മൂന്നാർ
ഗ്രാമ പഞ്ചായത്താഫീസ്.

ആനി ജോസ്
9-ാം വാർഡു മെമ്പർ.
മൂന്നാർ ഗ്രാമ പഞ്ചായത്ത്.

உள்ளடக்கம்

1. முன்னுரை

2. சரித்திரம்

3. வேளாண்மையும் நீர்ப்பாசனமும்

4. கால்நடை பராமரித்தலும-மீன்வளர்த்தலும்

5. தொழில்

6. கல்வி

7. குடிநீரும்-ஆரோக்கியமும்

8. போக்குவரத்து - எரிபொருள் - சந்தை

9. வீடுகட்டுதலும் சமூக நன்மையும்

10. கலாச்சாரம்

11. பெண்நலம்

12. கூட்டுறவுச் சங்கங்கள்

13. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் சமூக மேம்பாடு

14. வருமான மார்க்கம்

15. பஞ்சாயத்தின் செயல்முறை அறிக்கை

16. முடிவுரை.

(மூணார்) கிராமப் பஞ்சாயத்தின் பொது விபரம்

1. பஞ்சாயத்தின் பெயர் : மூணார் கிராமப்பஞ்சாயத்து (Special grade)
2. உள்ளடங்கிய கிராமங்கள் : 1. K.D.H கிராமம், 2. மாங்குளம்
3. வட்டாரப் பஞ்சாயத்து : தேவிகுளம்
4. தாலுகா : தேவிகுளம்
5. சட்டமன்றத்தொகுதி : தேவிகுளம் (S.C. தொகுதி)
6. பரப்பளவு : 525. சதுர கிலோமீட்டர்
7. எல்லைகள் : 1. வடக்கு : கோயம்புத்தூர் மாவட்டம்(தமிழ்நாடு)
   2. தெற்கு : பள்ளிவாசல் கிராமப்பஞ்சாயத்து
   3. கிழக்கு : வட்டவடை கிராமப்பஞ்சாயத்து
   4. மேற்கு : குட்டம் புழாக்கிராமப் பஞ்சாயத்து (மலையாற்றூர் டிவிசன் பாரஸ்ட்)
8. மக்கள் தொகை : மொத்தம் : 1,04,695
   ஆண்கள் : 53,199
   பெண்கள் : 51,496
   மக்கள்நெருக்கம் : 141-ஒரு சதுர கிலோமீட்டர்
   எழுத்தறிவுடையவர்கள் = 44,601
   தாழ்த்தப்பட்டவர்கள் (S.C) : 49,833
   மலைசாதிப்பழங்குடியினர்: 5,072
9. வார்டுகளின் எண்ணிக்கை: 15
10. கிராமப்பஞ்சாயத்துத் தலைவரின் பெயர் : திரு. G.சோலைச்சாமி
11. கிராமப்பஞ்சாயத்து உபதலைவரின் பெயர் : திரு. A.P. சார்லி
12. ஸ்டேண்டிங் கமிட்டிச் சேர்மன் பெயர் : திரு. M.Y. அவுசேப்
13. தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு அங்கத்தினர்கள்
   1-ம் வார்டு : திரு. காந்தி முத்தையா
   3-ம் வார்டு : திரு. ராதாகிருஷ்ணன் ராமசாமி
   4-ம் வார்டு : திரு. R.V. பழனி
   5-ம் வார்டு : திருமதி சரோஜா நடராஜ்
   6-ம் வார்டு : திருமதி சுசிலா மனோகரன்
   8-ம் வார்டு : திருமதி விஜயலெட்சும் சண்முகையா
   9-ம் வார்டு : திருமதி ஆனி ரிச்சர்ட்
   10-ம் வார்டு : திரு. தோமஸ் ஜோசப்
   11-ம் வார்டு : திருமதி ஞானம்மாள் வீரப்பன்
   12-ம் வார்டு : திரு. அர்ஜீன் டெய்சின்
   13-ம் வார்டு : திரு. சீவலமுத்து சீனியப்பன்
   15-ம் வார்டு : திரு. சுருளிசன்னாசி

குறிப்பு 2-ம் வார்டு, உபதலைவர், 7-ம் வார்டு ஸ்டேண்டிங் கமிட்டி சேர்மன், 14-ம் வார்டு, கிராமப்பஞ்சாயத்துத் தலைவர் பெயர்கள் மேலே கொடுக்கப்பட்டுள்ளன.

முன்னுரை

சகிய மலைத்தொடரில் அமைந்துள்ள "தென் இந்தியக் காஷ்மீர்" என்று பலராலும் போற்றப்படும் மூணார் பஞ்சாயத்திந் 9-வது ஐந்தாண்டுத்திட்டத்தின் அபிவிருத்திக்காக பல முகிகிய பிரச்சனைகளை எதிர் கொண்டுள்ளது. மஞ்சு நிறைந்த மலைகளின் அடிவாரத்தில் பனிப்பொழிவுளும், அழகிய வண்ண மலர்களும், கண்ணுக்கினிய பசுமையான இயற்கைக்காட்சிகளும் நிறைந்ததும், உலக மக்களின் தாகம் தீர்க்கச் சூடான தேநீர் வழங்கி மகிழ்விக்கும் உன்னத பூமியாகவும் திகழ்கிறது.

காட்டானைக் கூட்டங்களும், கரடி, கடுவாய், மான் கேழையோடு மந்தி, அழிந்து வரும் இனமாகிய வரையாடுகளும் வாழும் இம்மலைப் பிரதேசத்தில் இவற்றுடன் இணைந்து காட்டில் வாழும் மக்களின் துயர் கண்டு இயற்கை அன்னையே கண்ணீர் வடிப்பது போல மலை மீது உருண்டோடும் அருவிகளும், ஆறுகளும் அதன் குறுக்கே கட்டப்பட்ட அணைக் கட்டுகளும், சுற்றுலாப் பயணிகளின் கண்ணையும் கருத்தையும் கவரும் இடமாகவும் விளங்குகிறது என்றாலும் இதற்குப் பின்னாலும் ஒரு பெரிய சோகக் கதையும் உண்டு.

ஒரு நூறு ஆண்டுகளுக்கு மேலாக இருப்பது இப்பிரதேசத்தின் வளர்ச்சிக்காக உழைக்கும் உத்தமத் தொழிலாளிகளாம் தமிழ் மக்கள் டாடா டீ கம்பெனியின் வீடுகளில் வசித்தும், அவர்களின் மண்ணிலே உழைப்பு என்னும் வியர்வையைச் சிந்தி உருக்குலைந்துள்ளார்களே தவிர, அவர்களுக்கென்று உரிமை செலுத்த ஒரு பிடிமண் கூட இல்லை என்பது மிக வேதனைக்குரியதே! பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைத் தன் கைவசம் வைத்துள்ள டாடா டீ கம்பெனி ஒரு புறமும், தனக்கென ஒரு செண்டு நலங்கூட சொந்தமில்லாத மூணார் பஞ்சாயத்து மறுபுறமும் உண்டு. மொழி, பண்பாடு, கலாச்சாரம், காலநிலை, தொழில் இவற்றில் கேரளத்தின் இதர மாவட்டப் பஞ்சாயத்துக்களிலிருந்து மாறுபட்டு தனித்து நிற்பது தான். நமது பஞ்சாயத்து தேயிலைத் தோட்டங்களும், மாங்குகளும் என்னும் ஒரு பகுதியை சேர்த்து பதினைந்து வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு இருப்பதே இம்மூணார் பஞ்சாயத்து. இங்குள்ள மொத்த மக்கள் தொகையில் 72 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களும், மலைச்சாதி பழங்குடியினரும் அடங்கிய பஞ்சாயத்தும் இதுவே! மேற்கண்ட பல விசித்திரமான காரியங்களை உள்ளடக்கியது தான் இப்பஞ்சாயத்து.

இப்பஞ்சாயத்து துவங்கி 24 ஆண்டுகளைக் கடந்தும் அதற்கான சுய அதிகாரமின்றி எதையும் சுதந்திரமாகச் செய்ய இயலாமல் இருந்த கனவுகள் கலைந்து 1995 அக்டோபர் மாதத்தில் அமுலாக்கப்பட்ட பஞ்சாயத்து ராஜ் மூலம் நம் கனவு நனவாகும். நல்லதொரு தொடக்கமாகும். 9வது ஐந்தாண்டுத் திட்டத்தைக் கிராமசபைகளே தயாரித்து மக்கள் பிரதிநிதிகளால் அத்திட்டத்தைக் கிராம சபைகளே தயாரித்து மக்கள் பிரதிநிதிகளால் அத்திட்டதைச் செயல்படுத்தும் உரிமைகள் கிடைத்தற்காக இப்பஞ்சாயத்தும், பொது மக்களும், ஆட்சியாளர்களும் மகிழ்வோடு வரவேற்கிறது.

மூணார் கிராம பஞ்சாயத்து

மக்கள் தொகை

இடம்	வீடுகள்	ஆண்	பெண்	மொத்தம்	S.C.	S.T.
மாங்குளம்	2310	7065	6718	13,783	2030	2537
கடலார் 380	928	832	1760	895	---	
ராஜமலை576	778	762	1540	758	---	
நயமக்காடு	342	796	722	1518	716	---
தலையார்750	827	691	1518	832	---	
வாகுவாறை	930	2059	1952	4011	3710	135
சட்ட மூணார்	720	1028	1058	2086	1492	162
குண்டுமலை	620	1498	1505	3003	1210	---
சோத்துப்பாறை	330	754	768	1522	760	---
தென்மலை	530	1315	1299	2614	1189	---
கன்னிமலை	426	1152	1226	2378	1434	---
சோலைமலை	169	432	434	866	618	---
லட்சுமி 532	1298	1325	2623	1976	---	
கல்லார் 442	1080	1111	2191	1365		
நல்லதண்ணி	952	250	2248	4398	3452	23
பெரியவாறை	610	1582	1618	3200	1545	---
மாட்டுப்பெட்டி	618	1562	1612	3174	1583	---
மாட்டுப்பெட்டி டாம்	136	292	222	514	14	---
நெற்றிக்குடி	456	1020	1115	2135	988	---
அருவிக்காடு	556	1215	1359	2574	1080	---
குண்டளை452	1230	956	2186	985	189	
செண்டுவாறை	582	1483	1451	2934	1615	---
சிட்டிவாரை	513	1288	1399	2687	1955	---
சைலன்ட் வாலி	498	1188	1322	2510	1748	53
கடடாரவிளை	310	702	710	1412	832	---
தேவிகுளம் எஸ்டேட்	1010	2455	2350	4805	2038	---
கிராம்ஸ்லாண்ட்	433	1015	1077	2092	985	---
மூணார் 3283	6572	5476	12048	8035	58	
சிவன்மலை	848	2314	2116	4430	2583	38
மூணார் எஸ்டேட்	335	915	943	1858	894	12
சொக்க நாடு	732	1728	1871	3599	2553	---
தேவிகுளம் டவுண்	552	982	1033	2015	632	28
தேவிகுளம் ரேஞ்ச்	335	848	904	1752	15	1837
மொத்தம்	22,486	53,199	51,496	1,04,695	49,833	5,072

525 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பையும் ஒரு லட்சத்திற்கு மேல் மக்கள் தொகையைக் கொண்ட நமது பஞ்சாயத்திற்கு பலவிதப் பிரச்சனைகளும் அதை நிறைவேற்ற வித்தியாசமான செயல்களும் வேண்டியதிருக்கிறது. முன்கால ஐந்தாண்டுத் திட்டங்களைப் பொறுத்த வரை எப்பிரச்சனையையும் தீர்த்து விடவில்லை. ஆனால் 9-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலமாக நமக்காக ஒதுக்கீடு செய்யப்படும் தொகையுடன், பொது மக்களின் பங்கு, பஞ்சாயத்தின் வளங்களை இணைத்தும் இச்செயல் திட்டத்தை உருவாக்க வேண்டும். இத்திட்டத்திற்கு உதவும் வகையில் செப்டம்பர் மாதத்திலும், நவம்பர் 5,6,7 தேதிகளில் நடைபெற்ற மக்கள் நல்வாழ்வு அபிவிருத்தித் திட்டப் பயிற்சி முகாமின் மூலமாக இத்திட்டத்திற்கு பொதுமக்கள் ஆதரவு அதிகமாகியுள்ளது என்பதை உணர்கிறோம். நமது பஞ்சாயத்தின் கிராமசபைக் கூட்டங்களில் கூடுதலாக 560 பேர்களும், குறைவாக 275க்கு பேர்கள் வரையும் மகளிர் 300 பேர்கள் வரையும மங்கெடுத்துள்ளார்கள்.

இப்பஞ்சாயத்தின் முன்னேற்றத் திட்டங்களைத் தயாரிக்கும் போது பல இன்னல்களையும், இடர்பாடுகளையும் சந்திக்க வேண்டிய நிலை உருவாகியது. அதன் காரணம் பஞ்சாயத்தின் அதிகமான நிலங்களும் "டாடா-டீ" கம்பெனி, மலையாளம் பிளான் டேசன், தலையார் டீ கம்பெனி போன்ற தனி முதலாளிகளுக்குச் சொந்தமானதாகும். இதனால் 120 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டின் திருநெல்வேலி, மதுரை, செங்கல்பட்டு போன்ற மாவட்டங்களிலிருந்து இங்கு வந்து குடியேறிவர்களுக்காக பஞ்சாயத்தால் எந்தவிதமான முன்னேற்றத் திட்டகளையும் செயல்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. அவர்களின் நிலைமை அன்றும் இன்றும் ஒன்று போலவே இருப்பது அதற்கு உதாரணமாகும். மற்றொன்று மக்கள் தொகை மிக அதிகமாகும். ஆகவே நமது பஞ்சாயத்தை இரண்டு மூன்று பஞ்சாயத்துக்களாகப் பிரித்து விட விரும்பினாலும் நடைமுறைப் படுத்தப்படவில்லை. மாங்குளம் (10வது வார்டு) குறித்த தனியான விளக்கமும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது.

மேற்கூரிய பல பிரச்சனைகளை முன் நிறுத்திக் கொண்டு நம் பஞ்சாயத்தின் முன்னேற்றத் திட்டங்களைத் தீட்ட பெரிய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இதற்காகப் பல புள்ளி விபரக் கணக்குகளைச் சேகரிக்க தன் நலம் கருதா எல்லா அரசியல் கட்சித் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், K.R.P, D.R.P. அரசாங்க அலுவலர்கள், போது நல ஊழியர்கள் அனைவருக்கும் இதய பூர்வ நன்றியைக் காணிக்கையாக்குகிறது.

9-வது ஐந்தாண்டுத் திட்டங்களில் நடக்கும் முன்னேற்றத் திட்டங்கள் அனைத்தும் பொது மக்களின் ஆசைகளையும், கனவுகளையும் நிறைவேற்றக் கூடிய ஒன்றாகவே இருக்கும். கேரளத்தின் சரித்திரத்திலும், பஞ்சாயத்தின் சரித்திரத்திலும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய உன்னத நிகழ்ச்சி தான் "நாமே திட்டம் தீட்டி, செயல்பட இருக்கும் இத்திட்டம் என்பதில் ஒரு துளியளவும் ஐயமில்லை. இம்முன்னேற்றத் திட்டத்திந் அறிக்கையை அனைவரின் கவனத்திற்கும், ஆலோசனைக்கும், விவாதத்திற்கும், செயல்பாட்டிற்கும் சமர்பிக்கப்பட்டுள்ளது.

"சரித்திரம்"

உல்லாசப் பயணிகளின் உன்னத பூமிகளில் ஒன்றாக மாறி வரும் நமது மூணார் பல்வேறு சிறப்புக்களின் அடிப்படையில் இன்று உலகம் முழுவதும் அறியப்படுகிறது. நமது முன்னோர்கள் கால் பதித்த மற்றுமொரு சந்திரனே நமது மூணார் தியாகத்தின் அடிப்படையில் சொர்க்க பூமியாக மாற்றப்பட்ட எங்கள் உறவினர்களின் பூர்வாங்கமே நாளையே சரித்திரம் படைக்கும் மூணார்.

மனிதன் தோன்றினான் தங்குமிடம், உணவுக்காக பல இடங்களில் அலைந்து திரிந்தான். கூட்டமாக வாழ ஆரம்பித்தான். சண்டையிட்டான், புறக்கணிக்கப்பட்டான். பிரிந்து வேறு வேறாகச் சென்றான். பின்பு ஒன்று பட்டான். புரட்சி செய்தான். வளர்ந்தது நாகரீகம். திட்டமிட்டான் வளர்ந்தது நாடு. அதுபோல "வாருங்கள் திட்டமிடுவோம், செயல்படுவோம். நவரத்தினங்கள், நவதானியங்கள், நவக்கிரகங்கள் என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம். 'நவம்' என்றால் ஒன்பது என்று பொருள். அது போல 9வது ஐந்தாண்டுத் திட்டமும் 'நவத்திட்டமாக' அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

பலநாடுகள், அரசர்கள், ஆன்மீகங்கள் இவற்றின் சரித்திரங்களைக் கேட்டிருக்கிறோம், படித்திருக்கிறோம், அலசி ஆராய்ந்திருக்கிறோம். ஆனால் முதன் முதலில் இப்போது தான் ஒரு கிராமப் பஞ்சாயத்தின் சரித்திரத்தை ஆராயவும், ஆழ்ந்து சிந்திக்கவும், சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. சூரியனைச் சுற்றி வலம் வரும் நவக்கிரகங்களில் பூமியும் ஒன்று. மற்ற கிரகங்களுக்கு இல்லாத உயர்வும், உன்னதமும், ஒப்பற்ற பெருமையும் இதற்கு உண்டு. காரணம் இங்கு தான் மனிதன் வசிக்கிறான். இப்பூமியில் வல்லரசு நாடுகள், பொருளாதாரம், விஞ்ஞானம், கல்வி, கலாச்சாரம் ஆகியவைகளில் முன்னேறிய நாடுகள், முன்னேறத் துடிக்கும் நாடுகள், பின் நோக்க நாடுகள், எனப் பல தரத்தில் உண்டு. நம் பாரத நாடு அதில் எந்த நிலையில் என்பதை நாம் அறிவோம். நம் நாட்டிலுள்ள மற்ற மாநிலங்களுக்கு நடுவே பட்டொளி வீசிப் பரிமளித்துக் கொண்டிருப்பது தான் நம் கேரளம். மற்ற மாவட்டங்களை விட மிகவும் பின் தங்கிய மாவட்டம் தான் நம் 'இடுக்கி' மாவட்டம். சுதந்திரமடைந்து 50 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் அடிமை வாழ்வையே ஆதாரமாகக் கொண்டிருப்பது நமது 'மூணார்' கிராமப் பஞ்சாயத்து. ஒரு மிகப் பெரிய பஞ்சாயத்து என்று அழைக்கப்படுவதும் இதுவே!

அம்மா, அப்பா, அன்பு, அறிவு, வீரம், வெற்றி, கடமை, இனம், மதம் போன்ற சொற்களுக்கு மூன்றெழுத்து, அதே மாதிரி மூணாருக்கும் மூன்றெழுத்து. பாலாறு, கன்னியாறு, நல்லாறு எனமூன்று ஆறுகள் ஒன்று சேர்ந்து முதிரப்புழையாக ஒடி அரபிக் கடலில் கலப்பதால் இதற்கு "மூணார்" என்றும் பெயர் வழங்கி வருகிறது. 1877 ஆம் ஆண்டு திரு. J.D. முன்றோ என்னும் ஆங்கிலேயர் பூஞ்சார் என்னும் அரச வம்சத்திடமிருந்து சுமார் 588 சதுர கிலோமீட்டர் நிலங்களை வருடம் ஒன்றிற்கு ரூ5000/-க்கு குத்தகையாகப்

பெற்றார். இரண்டு ஆண்டுகள் கழித்து மேலும் 227 சதுர மைல் பரப்புள்ள நிலங்களைப் பெற்றார். திரு. J.D. முன்றோ என்பவரால் முதன் முதலில் வாங்கப்பட்டதால் இவ்விடத்திற்கு "முன்னார்" என்று பெயர் வழங்கப்பட்டதாகவும், அதுவே நாளடைவில் "மூணார்" என்று அழைக்கப்படுவதாகவும் சான்றுகள் கூறுகின்றன.

மேலே கூறப்பட்ட பூமியில் திரு. A.W. டர்னர் எந்பவர் தேவி குளத்தில் தற்போதுள்ள O.D.K. டிவிசனை மையமாகக் கொண்டு பயிர் செய்யத் தொடங்கினார். காப்பி, ஏலம், சின்கோனா, சிசால் போன்றவைகள் பயிரிடப்பட்டன. 1895-ல் திரு. ஒ.½. ஷார்ப் என்பவரால் சிவன்மலை எஸ்டேட் (பார்வதி டிவிசன்) பகுதியில் 20 ஏக்கரில் தேயிலை பயிர் செய்யப்பட்டது. மதுரை மாவட்டத்திலிருந்து இங்கு வந்த திரு. கண்ணன் தேவர் என்பவர் தான் ஆங்கிலேயர்களுக்கு இத்தேயிலைச் செடிகளைப் பயிர் செய்ய உதவியதாகவும், வழிகாட்டியாகவும் இருந்திருக்கிறார். அவரின் உண்மையான விசுவாசமான உழைப்புக்கு பரிசாகத் தான் அவர் பெயர் இத்தேயிலைத் தோட்டங்களுக்குச் சூட்டப்பட்டு "கண்ணன் தேவன் தேயிலைத் தோட்டம்" எனவும், இப்பகுதிக்கு "கண்ணன் தேவன் கிராமம்" எனவும் அழைக்கப்படுகிறது. கி.பி. 1888 இல் கண்ணன் தேவன் பிளான்டர்ஸ் அஸோஸியேசன் நிறுவப்பட்டது. 1894-ல் 26, எஸ்டேட்டுகள் அடங்கிய பின்லேமியர் அன் கம்பெனி என்றும், ஜோம்ஸ்பின்லே அன் கம்பெனி, டாடாபின்லே அன் கம்பெனி எனவும், 1983-ல் தான் டாடா-டீ-கம்பெனி லிமிடெட் (TATA TEA LIMITED) என்ற பெயர் நிலவிலுள்ளது.

கி.பி.1902-ல் தான் ஒரு சிறிய ரயில் பாதை (MONO RAIL) துவங்கப்பட்டு அவ்வண்டியை காளை மாடுகளைப் பயன்படுத்தி இழுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. 1908-ல் லைட் ரயில்வே (Light Railway) என்று ஒன்று இயங்கியது. 1920-ல் மேலும் சிறப்பாகச் சீரமைக்கப்பட்டு "ஆனைமுடி ரயில்" என்ற பெயருடன் இயங்கியது. 1924-ல் உண்டாகிய பெரும்புயலில் அப்பாதை மிகவும் சேதமடைந்தது. மீண்டும் செப்பனிடப்படாமல் அது அப்படியே மண்ணில் புதைந்து கிடக்கிறது என்று சான்றுகள் கூறுகின்றன. இங்கு தயாரிக்கப்பட்ட தேயிலைத்தூள்களைத் தமிழ்நாட்டிற்கும், அங்கிருந்து இங்குள்ளவர்களுக்கு தேவைப்படும் அத்தியாவசியமான பொருட்களை ஏற்றுமதி, இறக்குமதிக்காக அன்று "கண்ணன் தேவன் கம்பெனி" "ரோப் வே" முறையை 1926-ல் நிர்வகித்தது. அது குரங்கணி முதல் டாப்டேசன், குண்டு மலை, மாட்டுப்பட்டி, வழியாக மூணார் வரை (Central Store) அமைக்கப்பட்டிருந்தது. இந்த "ரோப்வே" பல ஆண்டுகள் சிறப்பாகச் செயல்பட்டது. நாளடைவில் போக்குவரத்திற்கு வசதியான சாலைகள் சீரமைக்கப்பட்டதாலும், 1965-ல் போடி மெட்டு சாலை திறக்கப்பட்டதாலும், ரோப்வேயின் அவசியம் தேவையற்றதாகவும், சாலைப்போக்குவரத்தைக் காட்டிலும் செலவு அதிகமானது எனக் கருதியும் "ரோப்வே" திட்டம் நிறுத்தப்பட்டது.

கி.பி.1961-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ம் நாள் இப்பஞ்சாயத்து துவங்கப்பட்டிருக்கிறது. பின்பு 1963-ல் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துச்

செயல்பட்டது. முதல் பஞ்சாயத்துத் தலைவராக திரு. K.M.தோமஸ், B.A. B.L. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 1985வரை பஞ்சாயத்துத் தலைவராக நீடித்துள்ளார். 1988 முதல் 1995 வரை திரு.M.Y.அவுசேப்M.A.அவர்கள் பஞ்சாயத்துத் தலைவராகத் தொடர்ந்துள்ளார். 1995 அக்டோபர் திரு. எ.சோலைச்சாமி அவர்கள் பஞ்சாயத்துத் தலைவராக இருக்கிறார். 15 வார்டுகளைக் கொண்ட இப்பெரிய பஞ்சாயத்தினுள் அடங்கிய கிராமங்களைப் பற்றிய பழங்கதைகளும், காரணப்பெயர்களும் உண்டு. அவற்றில் சிலவற்றைக் கீழே காணலாம்.

1ம் வார்டு செண்டுவரை குண்டளை:

கி.பி.1939-ல் குண்டளை அணைக்கட்டு கட்டப்பட்டிருக்கிறது. இது உலகத்திலேயே முதன்முதலில் கட்டப்பட்ட வளைவு அணைக்கட்டு (ஆர்ச் டாம்) ஆகும். ஒரு பல்பொருள் அங்காடியும் செயல்பட்டு வந்திருக்கிறது. 1942-ல் குண்டளை அணைக்கட்டு திறக்கப்பட்டது. அப்பல்பொருள் ஆங்காடி (சந்தை) செண்டு வரை எஸ்டேட்டிற்கு மாற்றப்பட்டது.

2ம் வார்டு: சிட்டிவரை எல்லைப்பட்டி:

கண்ணன் தேவன் தேயிலைத் தோட்டத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் எல்கையாக விளங்கியதால் "எல்லப்பட்டி" என்று பெயர் பெற்றது. இன்றும் அந்த எலகைக்கல் அங்கே காணப்படுகிறது. 1905-ஆம் ஆண்டு எல்லப்பட்டியில் தபால் நிலையம் துவங்கப்பட்டது. தந்தி வசதி இருந்தது. பின்பு 6 வருடங்களுக்கு முன்பு தந்தி வசதி நிறுத்தப்பட்டது.

3ம் வார்டு: அருவிக்காடு, மாட்டுப்பட்டி:

இரண்டு பெரிய அருவிகள் மலையிலிருந்து கீழே பாய்வதால் அருவிக்காடு என்றுப் பெயர் உண்டாகிறது. மாட்டுப்பட்டியில் கால்நடைகளை (பசுக்களை) வளர்த்தலில் மிகப்பெரிய பங்கு வகிக்கிறது. 1963-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ஆம் நாள் 'இண்டோ-சுவிஸ்-புராஜக்ட்' துவங்கப்பட்டது. இந்திய நிர்வாகிக டாக்டர் பத்மநாப சுவாமியும், சுவிஸ் டைரக்டராக டாக்டர் குன்ஷி என்பவரும் இருந்துள்ளனர். ஆரம்பத்தில் இந்திய அரசும், சுவிஸ் அரசும் இணைந்து நடத்திவந்தனர். 1976-ஆம் ஆண்டு முதல் நம் கேரள அரசின் மேற்பார்வையில் K.L.D.M.M. BOARD என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது.

4ம் வார்டு: கூடாரவளை, சைலண்டு வாலி:

தோட்டத்தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தின் (சம்பள உயர்வுக்காக கண்ணன் தேவன் கம்பெனியை எதிர்த்து) போது நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டில் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த உசிலம்பட்டிப்பகுதியை உடைய திருமதி. பாப்பம்மாள். திரு. ஹாசன் ராவுத்தர் என்பவர்கல் உயிரிழந்திருக்கிறார்கள். இது நடைபெற்ற இடம் கூடாரவளை எஸ்டேட்.

7ம் வார்டு: சொக்கநாடு:

இங்கு பஞ்சபாண்டவர்கள் வன வாசம் வந்ததாகவும், இங்கு சொக்கநாதர்மலை என்பது சொக்கநாடு என்று அழைக்கப்படுவதாகக் கூறுகின்றனர்.

8ம் வார்டு: சிவன்மலை லெட்சுமி:

சிவன், பார்வதி, லெட்சுமி ஆகிய தெய்வங்களை ஞாபகப்படுத்துவதாக இவை விளங்குகின்றன.

10ம் வார்டு: மாங்குளம், நல்லதண்ணீர், கல்லார்:

மாங்குளம் என்ற பகுதி பல ஆண்டுகளாக ஒரு தனி நபர் கையிலுந்தது. அதனால் அங்குயாரும் குடியேறவில்லை. பின்பு, 30 வருடங்களுக்கு முன்புதான் இந்த நிலங்கள் பிரித்துக்கொடுக்கப்பட்டு விவசாயம் செய்யப்பட்டது.

11ம் வார்டு: பெரியவரை, கன்னிமலை:

பெரியவரையில், ஆனைமுடியில் ஒரு பெரிய பாறையில் ஒரு கொடு காணப்படுகிறது. கோடு என்பதற்கு 'வரை' என்றும் பொருள் உண்டு.அதனால் பெரியவரை என்று பெயர் மாற்றப்பட்டது.

12ம் வார்டு: நயமக்காடு, ராஜமலை:

உலகத்திலேயே தனியாரிடம் இருக்கும் மிகப்பெரிய "நேஷனல் பார்க்" இங்கிருக்கிறது. இங்குதான் வரையாடுகள், குறிஞ்சி மலர்கள் உள்ளன. கண்ணன் தேவன் கிராமத்திலுள்ள மலைகளுக்கெல்லாம் இராஜாவாக இம்மலை இருப்பதால் "இராஜமலை" என்று பெயர் வழங்குகிறது.

13-ம் வார்டு: தலையார், தென்மலை:

நம் பஞ்சாயத்தின் தெற்கு பாகத்தில் அணைந்துள்ள மலை "தென்மலை" யாகும். 1945-ம் ஆண்டு மெக்கின்ஸ் என்ற ஆங்கிலேயரிடமிருந்து திரு. கிருஷ்ணசாமி ஐயர் என்பவரால் வாங்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. இங்குள்ள தொழிலாளர்களின் நிலை வேதனைக் குரியதாகவும், வெட்கித்தலைகுனியும் அளவிலேயே உள்ளது. அன்றுமுதல் இன்றுவரை பல போராட்டங்களை நடத்தியும் இன்றுவரை எந்த ஒரு விடிவுகாலமும் ஏற்படவில்லை. அங்குள்ள தொழிலாளர்களுக்குச் சம்பளம் ஒ]ங்காகக் கிடைப்பதில்லை. 5 மாதங்களுக்கு ஒருமுறை மட்டும் அதுவம் ஒருமாதச் சம்பளம் மட்டும் கிடைக்கிறது. இந்த அவலநிலை மாறவேண்டும். எல்லா உரிமைகளையும் பெற்றுவிட்டோம் என்று மார்தட்டிக் கோசமிடும் இவ்ரேலையில் இப்படியும் கேவலமாக மக்கள் வாழ்கிறார்கள் என்பதும் உண்மையே! தேயிலைத் தோட்டங்களிலேயே, நம் தேசத்தந்தை மகாத்மா காந்தியின் உருவச்சிலை நிறுவப்பட்டுள்ள இடம் "தலையார்" என்பதும் பெருமையே!

14ம் வார்டு: வாகுவரை, சட்டமூணார், காப்பி ஸ்டோர், பாம்பன்மலை:

கண்ணன் தேவன் தேயிலைத் தோட்டங்களில் மிகப்பெரியதில் வாகுவரையும் ஒன்று. சட்டமூணார், காப்பி ஸ்டோர், பாம்பன்மலை, தலையார் டீ கம்பெனியின் கூழும் இயங்குகிறது. இங்குள்ள பாம்பன்மலையைப் பற்றி ஒரு பழங்கதையுண்டு. பல நூறு

ஆண்டுகளுக்கு முன் இங்கு வந்து குடியேறிய தமிழ் வம்சத்தினர். ஒரு பெரியகரும் பாறைக் கண்டு அதன் மீது அடுப்புக்கூட்டி. தீமூட்டி சமைக்கத் தொடங்கினர். சிற்று நேரத்தில் அந்தப்பாறை அசையத் துவங்கியது. அதைக்கண்ட அவர்கள் ஓடத் தொடங்கினர். பின்புதான் அது பாறையல்ல, ஒரு மலைப்பாம்பு சுருண்டு படுத்திருந்தது என்பது புரிந்தது. பெரிய மலைப்பாம்பு இருந்ததால் இதற்கு பாம்பன் மலை எந்று பெயர் வளுங்கியதாகர் கூறுகின்றனர்.

15ம் வார்டு: குண்டுமலை சோத்துப்பாறை:

போக்குவரத்து வசதி குறைந்த இப்பகுதிகள் டாடாடி கம்பெனியின் கீழ் இயங்குகிறது. இங்குள்ள ஒரு மலை "குண்டு" போல் காணப்படுவதால் இதற்குக் "குண்டு மலை" என்று பெயர் பெற்றது.

அன்று 20 ஏக்கரில் பயிர் செய்யப்படுகிறது. அன்று அரையணா, ஒரு அணா, இரண்டு அணா, என்று தினக்கூலி பெற்ற தொழிலாளர்கள் இன்று ரூபாய் 55/- வரை திநக்கூலி பெறுகின்றனர். இம்முன்னேற்றத்திற்கு மூலகாரணம் இங்குள்ள தோட்டத் தொழிலாளிகளின் சங்கங்களாகும். ஆரம்ப காலங்களில் "சர்மா சாமி" டுப்பையா நாடார் போன்றவர்கள்தொழிற்சங்கங்களை நிறுவினர். அதன்பின்பு INTUC தொழிற்சங்கத்தின் கீழ் தென்னிந்தியத் தோட்டத் தொழிலாளர் சங்கம் (SIPWU) இயங்குகிறது. AITUC-யின்கீழ் இயங்கும் தேவிகுளம் தோட்டத்தொழிலாளர் சங்கம் (DEWU) இயங்குகிறது. CITU-யின் கீழ் DEEU என்ற ஒரு சங்கமும் இயங்குகிறது. தேவிகுளம் சட்டமன்றத் தலைவர்(M.L.A)களாக இருந்தவர்கள். திருவாளர்கள் தேவியப்பன் தங்கையா ரோஜம்மா புன்னூஸ், முருகேசன், N.கணபதி, N. கிட்டப்பன், சாட்டையப்பன் என்ற வரதன், S. சுந்தர மாணிக்கம், என்பவர்களும் தற்போது திரு. A.K. மணி அவர்கள் M.L.A ஆக இருக்கிறார். சுமார் 140 கி.மீ. பரந்து கிடக்கும் இப்பூமி கடல் மட்டத்திலிருந்து 4,300 அடி உயரத்திலிருந்து 6,200 அடி உயரம் வரையுண்டு. தென்இந்தியாவிலேயே மிக உயரமான மலை என அழைக்கப்படும் "ஆனைமுடி சிகரம்" (8841 அடி) இங்குள்ளது. இங்குள்ல காலநிலை (அட்டவனை சேர்க்கவேண்டும்)

1978-ல் "இரவிகுளம் நேசீயப் பூங்கா" (Eravikulam National Park) ஆரம்பிக்கப்பட்டது. இது டாடா டீ, கம்பெனியின் கீழ் இயங்குகிறது. உலகிலேயே மிகப்பெரிய தனியார் தேசீயப்பீங்காவாகும். இங்குப் பச்சைப்பசேலென புல்வெளிகளும், பூத்துக்குலுங்கும் வண்ணமலர்களும், 12 ஆண்டுக்கு ஒரு முறை மலரும், குறிஞ்சி மலரும் சுற்றுலாப்பயணிகளை கவரும் வண்ணம் அமைந்திருக்கிறது.

பஞ்சபாண்டவர்கள், ராமர் சீதா ஆகியோர் மகாபாரதம், இராமாயணம், ஆகிய காலங்களில், இங்கு அலைந்து திரிந்திருக்கிறார்கள் என்று சான்றுகள் கூறுகின்றன. அதனால் தான் என்னவோ நம்நாட்டில் இனக்கலவரம், மதக்கலவரம், அரசியல்கலகம் தீவிரவாதச் செயல்கள் மலிந்து கிடக்கும் போது, முருகன் கோவில், கிருஸ்தவ ஆலயம் முஸ்லீம் பள்ளி இவை மூன்றும் ஒங்கிவளர்ந்த மலைமீது நிறுவப்பட்டு சுடர்விட்டுப் பிரகாசிப்பதால் இங்கு மேற்கண்ட கலவரங்களின்றி, "எல்லோரும் ஓர்குலம், ஒருவனே தேவன் என்ற ஒருமைப்பாட்டின் உயர்வைப் பேணி வாழ்கின்றனர்.

3. வேளாண்மையும் நீர்ப்பாசனமும்

டாடா டி கம்பெனி, தலையார் டி கம்பெனி, மலையாளம் பிளாண்டேசன் போன்ற தேயிலைத் தோட்டங்களின் குடியிருப்புகளின் அருகே உள்ள காலிஇடங்களில் பயிர் செய்யும் காய்கறிகளே இப்பகுதியில் முக்கிய விவசாயமாகக் கருதப்படுகிறது. இதிலிருந்து மாறுபட்ட ஒரு பகுதிதான் "மாங்குளம்" கிராமம் ஆகும். மாங்குளம் பகுதியின் விவசாயமும் அதனுடைய பிரச்சனைகளையும் விரிவாகச்சேர்த்து தனியாக விவரிக்கப்பட்டுள்ளது.

மூணார் பஞ்சாயத்தில் உள்ளடங்கிய 'கண்ணன் தேவன்' தேயிலைத் தோட்டப்பகுதியும் வருவாய்த்துறை (Revenue) வனப்பகுதி இவைகளும் சேர்ந்த நிலப்பகுதியாகும். தாழ்த்தப்பட்டவர்கள். மலைஜாதி பழங்குடியினர் வசிக்கும் இடமலைக்குடி, வாகுவாரை, குண்டளை (சாண்டோஸ் காலனி) மூணார், தேவிகுளம், சட்ட மூணார், தலையார், அருவிக்காடு, எல்லப்பட்டி மாங்குளம் முதலிய இடங்களில் விவசாயத்திற்கு ஏற்ற இடங்கள் இருக்கிறது என்றாலும் இந்த மக்களுக்கு நல்ல விவசாயப் பயிற்சி அளிக்கப்படவில்லை. மேற்குறிப்பிட்டது போல் தோட்டத்தொழிலாளர்களின் முக்கிய விவசாயம் காய்கறி பயிரிடுவதாகும். இதற்கு உகந்த காலநிலையும் உண்டு. குளிர் பிரதேசங்களில் வளரும் முக்கிய விலைபொருட்களான பீன்ஸ், காலிஃபிளவர், வெள்ளைப்பூடு முதலியவை இங்கு நன்றாக விளையக் கூடியதாகும். இரண்டு மூன்று சென்ட் நிலங்களில் பயிர் செய்யப்படும் மேற்கண்ட காய்கறிகள் வீட்டுச் செலவுக்குப்போக மீதியை சந்தையில் சிறிய அளவிற்கே விற்க முடிகிறது.

விவசாயத்திற்குத் தேவையான பூமிகள் சொந்தமாக இல்லாததே இங்குள்ள முக்கிய பிரச்சினையாகும். நவீன விவசாய முறையும் மற்ற உதவிகளும் கிடைக்காததால் மலர்கள் பயிர் செய்தல், பழவகைகள், காளான், மூலிகைப் பயிர்கள், முதலியவை ஏற்ற காலநிலை இருந்தும் பயிர் செய்யமுடியாத சூழ்நிலை உள்ளது.

மூணார் கிராம பஞ்சாயத்து

காலநிலை அட்டவணை

அட்டவணை. 2

ஆண்டு	மழையளவு				வெப்பநிலை			
	மிகவும் கூடுதல்		மிகவும் குறைவு		கூடுதல் வெப்பநிலை		குறைந்த வெப்பநிலை	
	மாதம்	அளவு	மாதம்	அளவு	மாதம்	அளவு	மாதம்	அளவு
1994	ஜூலை	1354.8 M.M.	டிசம்பர்	இல்லை	மார்ச்	30°C	டிசம்பர்	-2°C
1995	,,	781.8 M.M.	,,	இல்லை	மார்ச்	30°C	ஜனவரி	-0°C
1996	,,	1503.6 M.M.	பெப்ரவரி	26.6 M.M.	மார்ச்	30°C	நவம்பர்	5.5°C

வாய்ப்புகள்

1. 9ம் வார்டில் காலனியோடு பரந்து கிடக்கும் சுமார் 260 ஏக்கர் ரெவின்யூ (வருவாய்த்துறை) இடத்தில் காய்கறிகளைக் கூட்டுறவு முறையில் பயிர் செய்வதற்கு ஒதுக்கீடு செய்துதரப் படவேண்டும். மரங்கள் அதிகமாக பயிரிடப்படவேண்டும். தரிசுநிலம், ரோட்டோரம், ஆற்றின் கரை இவற்றைப்பயன் படுத்துதல் (Lancluse)

2. காளான் உற்பத்திக்கு மூலப்பொருளாகப் பயன்படும் தேயிலையின் கழிவுப் பொருட்கள் (Waste) வைக்கோல் பயன்படுத்தி காலனிப்பகுதிகளிலும் மற்ற பகுதிகளிலும் உள்ள வேலையில்லாதவர்களுக்குப் பயிற்சியளிக்கவேண்டும்.

3. அந்தூரியம், ஓர்க்கிடு, பிச்சி, சிவந்தி முதலிய பூக்கள் வியாபார அடிப்படையில் உற்பத்தி செய்வதற்குள்ள சகல அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவேண்டும்.

4. பழங்கள் மிக அதிகமாக உற்பத்தியாகும், வாகுவாரை தலையார், காப்பி ஸ்டோர், சட்ட மூணார், அருவிக்காடு, நயமக்காடு எல்லப்பட்டி, சிட்டிவரை மற்றும் எல்லா எஸ்டேட்களிலும் கமலா ஆரஞ்சு, பீச்சிஸ், கொய்யா, பிளம்ஸ், பேசன்ப்ரூட் (பிரண்டை) மரத்தக்காளி, ஸ்ட்ராபெரி (Straw Berry) பேரிக்காய் போன்ற பழவகைகள் பயிர் செய்ய ஏற்ற காலநிலையும், மண்வளமும் இருப்பதால் அவைகள் பயிரிட வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கவேண்டும்.

5. மூணார் டவுனில் கிடைக்கும் காய்கறிகளின் கழிவுப்பொருட்களைப் பயன்படுத்தி கம்போஸ்ட் உரம் தயாரித்தல் மூலம் மூணாரின் சுகாதாரத்திற்கும், உரத்தை விவசாயிகளுக்கு குறைந்த விலையில் விற்பதன் மூலம் பஞ்சாயத்திற்கு வருமானம் கிடைக்க வழி வகுக்கும்.

6. ஆற்றங்கரையோர ரெவின்யூ பூமி, தனியார் டீ கம்பெனிகளின் தரிசுபூமி கீழே குறிப்பிட்ட இடங்களில் அதிகமாக உள்ளது. அவற்றை பகுந்து கொடுத்து கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

அட்டவனை

மூணார் கிராம பஞ்சாயத்து

விவசாயத்திற்கு ஏற்ற தரிசு நிலங்கள்

சை எண்	இடம்	பரப்பளவு	நில உரிமையாளர்
1.	மூணார் காலனி	260 ஏக்கர்	ரெவின்யூ
2	மூணார் டவுன்	275 ஏக்கர்	ரெவின்யூ
3	பழைய மூணார்	35 ஏக்கர் 150 ஏக்கர்	
4	தேவிகுளம்	2300 ஏக்கர் 1560 ஏக்கர் 25 ஏக்கர்	ரெவன்யூ வன இலாக்கா தனியார் கம்பெனி இடங்கள்
5	சொக்கநாடு	200 ஏக்கர் 275 ஏக்கர்	ரெவன்யூ டாடா டீ கம்பெனி
6	லட்சுமி	400 ஏக்கர் 450 ஏக்கர்	ரெவின்யூ ட்டா டீ கம்பெனி
7	செவன்மலை	180 ஏக்கர் 200 ஏக்கர்	ரெவின்யூ டாடா டீ கம்பெனி
8	கிரஹம்ஸ்லான்ட்	350 ஏக்கர் 100 ஏக்கர்	ரெவின்யூ டாடா டீ கம்பெனி
9	மாட்டுப்பட்டி	155 ஏக்கர் 250 ஏக்கர்	ரெவின்யூ டாடா டீ கம்பெனி
10	அருவிக்காடு பச்சைக்காடு	50 ஏக்கர் 78 ஏக்கர்	ரெவின்யூ டாடா டீ கம்பெனி
11	குண்டளை சாண்டோஷ்	10 ஏக்கர் 45 ஏக்கர் 55 ஏக்கர்	KSEB டாடா டீ கம்பெனி டாடா டீ கம்பெனி
12	எல்லப்பட்டி	20 ஏக்கர் 110 ஏக்கர் 55 ஏக்கர்	KSEB ரெவின்யூ டாடா டீ கம்பெனி
13	குண்டுமலை	55 ஏக்கர் 68 ஏக்கர்	ரெவின்யூ டாடா டீ கம்பெனி
14	சிட்டிவரை	9 ஏக்கர் 12 ஏக்கர்	வன இலாகா டாடா டீ கம்பெனி
15	சென்டுவாரை பி. ஆர் டிவிசன்	50 ஏக்கர் 92 ஏக்கர்	ரெவின்யூ டாடா டீ கம்பெனி
16	கூடாரவிளை சைலன்ட் வாலி	300 ஏக்கர் 198 ஏக்கர்	வன இலாகா டாடா டீ கம்பெனி
17	தலையார்	200 ஏக்கர் 110 ஏக்கர்	தனியார் கம்பெனி நிலம் வன இலாகா

89

வரிசை எண்	இடம்	பரப்பளவு	நில உரிமையாள
18	கன்னிமலை	100 ஏக்கர் 75 ஏக்கர்	ரெவின்யூ டாடா டீ கம்பெனி
19	பெரிய வாறை	100 ஏக்கர் 57 ஏக்கர்	ரெவன்யூ டாடா டீ கம்பெனி
20	நயமக்காடு	250 ஏக்கர் 175 ஏக்கர்	வன இலாகா டாடா டீ கம்பெனி
21	லக்கம்	16 ஏக்கர், 11 சென்ட் 100 ஏக்கர்	ரெவின்யூ தனியார் கம்பெனி
22	சட்ட மூணார்	150 ஹெக்டேர் 22 ஏக்கர்	வன இலாகா தனியார் கம்பெனி
23	வயல் கடவு	65 ஏக்கர் 50 ஏக்கர்	தனியார் கைவசம் ரெவின்யூ
24	காப்பி ஸ்டோர்	14 ஏக்கர் 10 ஏக்கர்	ரெவின்யூ தலையார் கம்பெனி
25	பாம்பன் மலை	150 ஹெக்டேர்	ரெவின்யூ
26	வாகுவாறை லோயர் வாகுவாறை டாப்	50 ஏக்கர் 150 ஏக்கர்	டாடா டீ கம்பெனி டாடா டீ கம்பெனி
27	இடமலைக்குடி	500 ஏக்கர் (தண்ணீர் வசதி இல்லை)	தனியார் கைவசம்
28	நல்லதண்ணி (குருமலை)	100 ஏக்கர்	டாடா டீ கம்பெனி
29	நல்லதண்ணி, நடையார் (சவுத், நார்த்)	105 ஏக்கர் (குளம், சதுப்பு)	டாடா டீ கம்பெனி
30	கல்லார், புதுக்காடு	200 ஏக்கர்	டாடா டீ கம்பெனி
31	வாகுவாறை பஜார்	50 ஏக்கர்	டாடா டீ கம்பெனி
32	லக்கம் நியூ டிவிசன்	50 ஏக்கர்	டாடா டீ கம்பெனி
33	வாகுவாறை நாவல்	25 ஏக்கர்	டாடா டீ கம்பெனி
34	லக்கம் குடி	500 ஹெக்டேர்	வைல்டு லைப்
35	மாட்டுப்பட்டி	547 ஏக்கர்	இண்டோ-சுவிஸ் புராஜக்ட்

7. சோலைப்பாதுகாப்பு கட்டாயம் செய்தல் வேண்டும். (Presarvation of thick forest)
8. இயற்கையான மேய்ச்சல்தலங்கள் (மாடுகளுக்கு) உண்டாக்கவும் பாதுகாக்கவு வேண்டும். (Maintaining the natural Gross lands)
9. உயர்ந்த இனம் விதை, உரம், மருந்து, சுண்ணாம்பு நவீன முறை விவசாயக் கருவிக முதலியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். பச்சை இலை உரம் (இயற்ை உரம்) விதைப்பண்ணை (Seed form) நிறுவ வேண்டும்.
10. இப்பாஞ்சாயத்தின் இதயப் பகுதியான மூணாரில் ஒரு வேளாண்மைப் பயிற்சி நிலைய (Agriculture Training Centre) அமைக்கவேண்டும். இந்த நிலையத்திற்கு கட்டிடமு

மற்ற தேவைகளையும் பஞ்சாயத்து செய்வதாக இருந்தால் மேற்கூறிய பயிற்சி நிலையத்தை ஸ்தாபித்து பயிற்சிவகுப்புகள் ஆரம்பிக்கலாம் என்று டிராபிக்கல் பொட்டானிக்கல் ரிசர்ச் கார்டன் அதிகாரிகள் தந்திருக்கும் உறுதிமொழியைப் பயன்படுத்தினால் அது வேளாண்மைத்துறையில் மிகப்பெரிய புரட்சியை உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை. மேலும் இப்பகுதியில் படித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு பயிற்சியளித்து அவர்களை விவசாயத்துறையின் முன்னேற்றத்திற்குப் பங்காளிகளாக்க முடியும்.

11. லாண்ட் யுட்டிலை சேசன் (Land Uti lisation) நடப்பிலாக்கவம்,

12. காலாகாலங்களில் வேளாண்மைத் துறை அதிகாரிகளால் மண் பரிசோதனை செய்து அதற்குத் தகுந்த விளை பொருட்களைக் கால நிலைக்கு தகுந்தவாறு தேர்ந்தெடுத்து சரியான முறையில் பயிர் செய்யும் முறையைக் கற்பிக்கக முன்வரவேண்டம்.

13. காய்கறிகளை பதப்படுத்த குளிர்பதன பாதுகாப்புநிலையம் நிறுவுதல் வேண்டும்.

14. Tin foocl making தொழில் தொடங்குதல்.

15. இங்கு போதுமான வசதிகளில் இல்லாததால் நேரடியான கேரளத்தில் விற்பனை செய்ய வாய்ப்புகள் இல்லை. மாறாக இவ்விளைபொருட்களை தமிழ்நாட்டின் முக்கிய சந்தைக்குக் கொண்டு போய் மீண்டும் கேரளத்திற்கே வரும் நிலை உள்ளது. இந்நிலை மாறவும் இடைத்தரகர்களிடமிருந்து விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கவும், விவசாயப் பொருட்களுக்கு நியாயமான விலைகிடைக்கவும், விளை பொருட்களை விற்கவும், வாங்கவும், விவசாயிகளுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கவும், விவசாயிகளுக்குத் தேவையான கூட்டுறவுச் சங்கங்கள் மூணாரை மையமாக வைத்து எல்லா வார்டுகளிலும் தொடங்க வேண்டும்.

16. வீட்டுக் காய்கறித்தோட்டம் (Kitchen Garden) அவசியம் செய்து கொடுக்கவேண்டும்.

17. பசுக்கள் மூலம் கிடைக்கும் சாணியைப் பயன்படுத்தி இயற்கை உரம் உண்டாக்குதல்.

18. இடமலைக்குடியில் ஏலம், குறும்புல் உற்பத்தி செய்ய வசதிகள் உண்டாக்குதல்.

மூணார் கிராமப் பஞ்சாயத்து
உபயோகிக்கக்கூடிய நீர் நிலைகள்

வரிசை எண்	இடம்	ஆறு, நீரூற்று, அருவி,குளம்	திட்டங்கள்	திட்டங்களினால் உள்ள பயன்
1	பெரியவாறை ஆணைமுடி டிவிசன்	அருவி	ரெக்டாம்	15 ஹெக்டேர் இடத்திற்கு வேளாண்மைக்கும், குடிநீருக்கும் உபயோகிக்கப் படலாம்
2	மூணார் ஒ.அ.ட. இடதுபாகம்	ஓடை	செக்டாம்	இக்கா நகர், காலனி பாகங்களில் குடிநீர்வசதி
3	காலனி நரிசரி ஸ்கூல் பகுதி	நீரூற்று	செக்டாம்	லட்சம் காலனியில் உள்ள குடிநீர் பிரச்சினை தீரும்
4	மூணார் காலனி	அருவி	செக்டாம்	செட்டில்மெண்ட் காலணியில் உள்ளவர்களுக்கு குடிநீர் பிரச்சினை தீரும். மீனும் வளக்கலாம்.
5	மூணார் டவுண், அந்தோணியார் காலணி	சதுப்பு நிலை	குளம்	6 ஹெக். இடத்திற்கு வேளாண்மைக்கு தண்ணீரும், 150 குடும்பத்திற்கு குடிநார் வசதியும்
6	தேவர் காலணி, டி.பி.ரோடு	ஓடை	செக்டாம்	200 குடும்பத்திற்கு குடிநீர் பிரச்சினை தீர்க்கலாம்
7	பழைய மூணார், மூலக்கடை பகுதி	ஓடை	செக்டாம்	மீன் வளர்க்கவும், விவசையத் திற்கும் பயன்படுத்தலாம்.
8	மூணார் பஞ்சாயத்து. டிஸ்பென்சர் பக்கம்	நீரூற்று	செக்டாம்	250 குடும்பங்களுக்கு குடிநீர் பிரச்சினை தீர்க்கலாம்.
9	அருவிக்காடு, சைலண்ட் வாலி, இடையில்	நீர் அருவி	செக்டாம்	சிறிய நீர்மின்திட்டம்
10	ராஜமலை சந்திப்பு	அருவி	அருவியின் அருகில் சுற்றுலா பயனிகள் பார்ப்பதற்கு பாலமும், செக்டாம்	சிறிய நீர் மின்திட்டமும், சுற்றுலாத்துறையின் ஒரு மையமும் வேண்டும்.

வரிசை எண்	இடம்	ஆறு, நீரூற்று, அருவி,குளம்	திட்டங்கள்	திட்டங்களினால் உள்ள பயன்
11	தலையார் தென்மலை	ஓடை	செக்டாம்	160 ஹெக்டேர்,நிலங்களுக்கு தண்ணீரும், 500 குடும்பங் களுக்கு குடிநீரும்
12	வாகுவாறை,, லக்னகசம்	ஆறு	செக்டாம்	சிறிய மின்சார நிலையமும், விவசாயத்திற்குத் தேவையான குடிநீர் வசதி எல்லா இடத்திற்கும், பயன்பெறும்.
13	குண்டுமலை	ஓடை	செக்டாம்	மீன் வளர்ப்பதற்கும் விவசாயத்திற்கும் பயன்படும்.
14	எல்லப்பட்டி பாக்டரி டிவிசன் , கருங்குளம்	அருவி	செக்டாம்	குடிநீருக்கும்,விவசாயத்திற்கும்
15	லட்சுமி, சிவன்மலை இடையில் .	அருவி	செக்டாம்	குடிநீருக்கும்,விவசாயத்திற்கும்
16	சிட்டிவாறை, ஓ.சி. டிவிசன்	ஓடை	செக்டாம்	விவசாயத்திற்கும்,குடிநீருக்கும் மீன் வளர்த்தலுக்கும்
17	செண்டுவாறை பி.ஆர். டிவிசன்	அருவி	செக்டாம்	50 ஏக்கர் இடத்திற்கு வேளாண்மை வசதியும்,குடிநீர் வசதியும் கிடைக்கும்
18	சொக்கநாடு பேக்டரி டிவிசன்	ஓடை	செக்டாம்	வேளாண்மைக்கும், மீன் வளர்த்தலுக்கும், குடிநீருக்கும் பயன்படுகிறது
19	தேவிகுளம் ப்ளோக் ஆபீசின் முன்பகுதி	குளம்	விரிவுபடுத்துதல்	மீன்வளர்ப்பும், சுற்றுலா மையமும் அமைக்கவும்
20	தேவிகுளம் இந்துக் கோவிலின் சமீபம்	நீர்உற்று	குடிநீர் கிணறும் டாங்கும்	கிணற்றில் பம்ப் செய்து, செய்யில் மெண்ட் காலணியில் நீர் தொட்டி அமைத்து அப்பகுதியில்உள்ள அமைவருக்கும் குடிநீர் வழங்கலாம்.
21	தேவிகுளம் இந்துக் கோவில் சமீபம்	நீர் உற்று	குளம்	மீன் வளர்ப்பதற்கும், வேளாண்மைக்கும்
22	லாக்காடு பாக்டரி	ஓடை	குளம்	வேளாண்மைக்கும், மீன் வளர்த்தலுக்கும்
23	சட்ட மூணார் காப்பிஸ்டோர்	அருவி	செக்டாம்	சிறிய நீர் மின் நிலையமும் விவசாயத்திற்கு தண்ணீரு

வரிசை எண்	இடம்	ஆறு, நீரூற்று, அருவி,குளம்	திட்டங்கள்	திட்டங்களினால் உள்ள பயன்
24	இடைமலைக்குடி, செட்டுக்குடி	நீர் ஊற்று	செக்டாம்	இங்கு நீர் எப்போதும் இருப்பதால் நெல் விவசாயம் செய்யலாம்.
25	ஆண்டவர் குடி	,,	,,	புது குடி, ஆண்டவர்குடி, கண்டத்துகுடிவிவசாயத்திற்கும், குடிநீருக்கும்
26	கண்டத்துக்குடி	,,	,,	50 A.L. நிலத்திற்கு வேளாண்மைக்கு பயன்படும்
27	நல்ல தண்ணி குருமலை டிவிசன்	ஓடை	செக்டாம்	100 ஏக்கர் நிலத்திற்கு விவசாயத்திற்கு நீர் பயன் படும்
28	நல்ல தண்ணி ஈவுத் நார்த் டிவிசன்	சதுப்பு நிலம்	குளம்	105 ஏக்கர் விவசாய நிலத்திற்கு தண்ணீர் பயன்படும்
29	கல்லார் புதுக்காடு டிவிசன்	ஆறு	செக்டாம்	200 ஏக்கர் விவசாய நிலத்திற்கு தண்ணீர் பயன்படும்
30	அருவிக்காடு,	அருவி	,,	மினி மின்சார நிலையம்
31	வயல்கடவு குடிக்கு மேல் பாகம்	அருவி	,,	மின் மின்சார நிலையம் வேளாண்மைக்கு

மாட்டுப்பட்டி

1. மாட்டுப்பட்டியிலுள்ள KLD போர்டில் உள்ள சிமார் 547 ஏக்கர் நிலம் உண்டு. இதில் மாட்டுத்திவனமாக புல் வளர்த்தளுக்கு அவசியமான புல்மேடுகள் போக மீதி உள்ள நிலத்தில் முட்டைக்கோஸ், காலி பிளவர், கீரை, காரட் பீட்ரூட், முதலிய காய்கறிகள் வேளாண்மை செய்யலாம். இவ்விவசாத்திற்குத் தேவையான தண்ணீர் வசதியும் உரமும் இங்கேயே தாராளமாகக் கிடைக்கின்றன.

2. இங்கே பூந்தோட்டத்தில்பூஞ்செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்படுகிந்றன. இதை அதி நவீன முறைகள் பயந்படுத்தி நல்ல முறையில் பூஞ்செடி நாற்றுக்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் அளவுக்கு திட்டம் தயாரித்தல் வேண்டும்.

மாங்குளம்

பல நிலக்கிழார்களின் கையில் மொத்தமாக இருந்த இப்பூமி நாளடைவில் ஏற்பட்ட இயற்கை அழிவுகளால் விவசாயம் செய்யப்படாமல் இருந்தது. பின்பு நீதிமன்றத்தின் உத்தவவின் படி பலருக்கும் சிறு, சிறு பாகங்களாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டது. அது முதல் கடந்த 30 வருடங்களாக விவசாயம் செய்யும் பழக்கம் உண்டாகியது.

விவசாயக் கூலி நிலவரம்

விவசாயத் தொழிலாளர்கள் குறைவாக இருப்பதால் ஆண்களுக்கு ரூ.60-ம் பெண்களுக்கு ரூ. 50-ம் எந்ற விகிதத்தில் கூலி கொடுக்க வேண்டியுள்ளது. சில இடங்களில் முறையே ரூ. 75-ம், ரூ. 50-ம் உள்ளது. டாப்பிங் தொழிலாளர்களுக்கு மரத்திற்கு 20 முதல் 25 பைசா வரை கிடைக்கிறது.

பிரச்சினைகள்

1. மண்ணரித்தல் மூலம் வண்டல் நஷ்டமடைகிறது.
2. இடைத்தரகர்களின் குறுக்கீடு அதிகம் உள்ளது.
3. நவீன விவசாயமுறைகள் பின்ற்றப்படவில்லை.
4. ரப்பர் தவிர மற்ற பயிர்களின் உற்பத்தித்திறன் குறைந்து வருகிறது.
5. உயரம் கூடுதல் உள்ள முனிப்பாறை, விரிப்பாறை முதலிய பகுதிகளுக்கு ஏற்ற பயிர்வகைகளைக் கண்டறிந்து பயிரிடப்படவில்லை.
6. கிடைக்கும் நீர்நிலைகளிலுள்ள நிலை சரியான முறையில் உபயோகப்படுத்தவதில்லை.
7. உயர் ரக விதைகள், நாற்றுக்கள் கிடைப்பதில்லை.
8. கழுகு, மிளகு, இவைகளுக்கு உம்டாகும் வியாதிகளுக்குத் தக்க பரிகாரம் இல்லை.
9. சில ஆதிவாசிக் காலணிகளில் வளமான இடங்கள் இந்னும் தரிசுகளாகக் கிடக்கிறது.
10. உற்பத்தியாகும் விளைபொருட்களை விற்க போதுமான சந்தைகள் இல்லை.
11. மின்சார இமைப்புகள் இல்லாததால் பம்புசெட்டுகள் பயன் படுத்தமுடிவதில்லை.
12. கிருஷிபவனின் சேவைகள் திருப்தியளிக்கவில்லை.

வாய்ப்புகள்

1. மண்ணரிப்பைத் தடுத்திட திட்டங்கள் வேண்டும். (உ.ம்) மண் கையாலைகள், கல் கையாலைகள், புல்வளர்த்தல், மரம் வளர்த்தல், மண்ணரித்தலுக்கு எதிராக கிருஷிபவன் மூலம் ஏஜன்ஸிகள் வழியாக விவசாயிகளுக்கு விழிப்புணர்வு அளிக்க வேண்டும். மண்ணின் ஈரப்பதம் நிலை நிறுத்தத்தக்கத் திட்டங்களுத் தீட்ட வேண்டும்.
2. மூத்தாசாரி, கோழியிலா கால்வாய்களில் செக்டாம் கட்டியும், பெரும்டன்ஷ அருவியில் தண்ணீரை வழி மாற்றவும் செய்தால் 700 ஏக்கர் இடத்திற்கு நீர்ப ன வசதி கிடைக்கும்.

3. மண் பரிசோதனையும், நோய்ப்பரிசோதனையும் நடத்த வேண்டும்.
4. மாங்குளத்தைத் தலைமையாகக்கொண்டு விவசாய விளைபொருட்களை விற்பனை செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க வேண்டும்.
5. கம்பெனிக்குடி, கோழியிலாக்குடி, ஆறாம் மைல் குடி இவற்றில் வசிக்கும் ஆதிவாச்களைச் சேர்த்து கூட்டுமுறையில் விவசாயம் செய்ய சுமார் 1000 ஏக்கர் தரிசு பூமி உள்ளது. சாயம் செய்ய சுமார் 1000 ஏக்கர் தரிசு பூமி உள்ளது.
6. விரிபாஹை, முனிபாறை முதலிய இடங்களில் தரிசாகக் கிடக்கும் இடங்களை விவசாய நிலங்களாக மாற்ற வேண்டும்.

1980-ல் ஆயிரத்திற்கும் கூடுதல் ஏக்கர் நிலங்களை நிலம் இல்லாத விவசாயிகளுக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டது. இப்போது கிட்டத்தட்ட 2000 ஏக்கர் நிலத்தில் விவசாயம் நடந்து வருகிறது.

மாங்குளத்தின் பல பாகங்களில் தற்போது நடந்துவரும் விளைபொருட்களும், பரப்பளவும்.

நீர்ப்பாசனம்

மாங்குளத்தில் ஒடும் எட்டில் கூடுதல் நதிகளும், பல வாய்க்கால்களும் நீண்ட காலத்திற்குப் பெய்யும் மழையையே நம்பியிருக்கிறது. இது தான் மாங்குளத்தின் தண்ணீர் தேவைகளைப் பூர்த்தி செய்திறது. நிறைய செக்டாம்களும், கால்வாய்களும் கட்டி இப்பகுதியின் எல்லா இடங்களுக்கும் நீர்ப்பாசனவசதி ஏற்படுத்தமுடியும். இப்போது கிட்டத்தட்ட 15டீசல் பம்புகள் உபயோகித்துத்தான் நீர் பாசனம் நடைபெறுகிறது.

4. கால்நடை பராமரித்தலும், மீன் வளர்த்தலும்

பச்சைப்பசேலென்று புல் மேடுகளும், குன்றுகளும், சதுப்பு நிலங்களும், பரந்த மைதானங்களும், நிறைந்த மூணார் பஞ்சாயத்தின் எல்லா வார்டுகளிலும் ஆடு, மாடு, கோழி, பன்றி, முயல் முதலிய விலங்குகலை வளர்ப்பதற்கு மிகவும் வசதியுள்ளது. ஆனால் நல்ல இனம் பசுக்களை வளர்த்து விஞ்ஞான முறையில் பாதுகாக்கவும், பால் மாமிசம் முதலிய விற்பனை பொருட்களை விற்கும் முறைகளும் கடந்த காலங்களில் நமக்கு பலவகையான தடங்கல் இருந்தது என்று சொல்லலாம்.

டாடா சேன-ஆப்ரேடிவ் டெய்ரி பார்ம்-மூணார்

பஞ்சாயத்து மூலமாக பால் விநியோக நிலையங்களோ கூட்டுறவு சங்கங்களோ தேவையான அளவிற்கு தொடங்குவதற்கு முயற்சிகள் நடக்கவில்லை. லட்சுமி எஸ்டேட்டில் சமீர காலத்தில் ஒரு பால் கூட்டுறவு சங்கம் துவங்கப்பட்டுள்ளது. மாங்குளத்தில் 1992-ல் "வேர்ல்டு விஷன் ஆப் இந்தியா"வின் உதவியோடு ஒரு கூட்டுறவுச் சங்கம் இயங்கி வருகிறது. கம்யூனிட்டி டெவலப்மென்ட் பிராஜக்ட் மூலமாகத்தான் பால் விநியோகத்திற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த திட்டப்படி பால் உற்பத்தியாளர்கள் சங்கம் இயங்கி வருகிறது. இந்த சங்கத்தின் மூலமாக சுமார் 500 லிட்டர் பால் மட்டுமே தினசர் விநியோகத்திற்காக வழங்கப்பட்டு வருகிறது. இப்பஞ்சாயத்தின் 15 வார்டுகளில் ஏராளமான பசுக்களை மக்கள் பராமரித்து வருகிறார்கள். நல்ல வாய்ப்புகள் இருந்தும் அவற்றைப் பயன்படுத்தி கால்நடை மேம்பாட்டுக்கு ரழி செய்யப்படவில்லை. இதுபோல கோழி, முயல், ஆடு, பன்றி, வாத்து போன்ற கால்நடைகளை நல்ல முறையில் வளர்த்து எடுத்து வருமான வழிகலை ஏற்படுத்துவதற்கு நல்ல ஆரோக்கியமான பாதுகாப்பு வசதிகள் செய்து கொடுக்கு கால்நடை மருத்துவர்கள் முன் வரவேண்டும். மாட்டுப்பட்டி KLD MM போர்டு பால் உற்பத்தி குறைந்து வருகிறது.

சாண எரிவாயு பற்றிய விபரங்கள் இந்தப் பஞ்சாயத்தின் எந்த ஒரு வார்டிலும் அறிந்ததாக தெரியவில்லை. தோட்டத் தொழிலாளர்கள் அதிகமாக விறகு மட்டுமே எரி பொருளாக பயன்படுத்தி வருகின்றனர். இயற்கை உரம், சாணம், இவைகளை அதிகமாக விவசாயத்திற்கு உபயோகப்படுத்த வேண்டும். சாண எரி வாயு அடுப்பு எல்லா வார்டுகளிலும் உண்டாக்க வாய்ப்புகள் உண்டு. ஆடு வளர்க்க தேவையான புல் மேடுகள் இருந்தும் பல தடைகள் இப்பகுதியல் காணப்படுகிறது. கூலிகளுக்கு "வசந்தா" எனும் நோய் அடிக்கடி வருவதால் அதற்கு தேவையான சிகிச்சை வசதிகள் இல்லாததாலும் கோழிகள் அதிகம் உற்பத்தி செய்ய யாரும் முன்வரவில்லை. மூணார் டவின், சட்ட மூணார், சாண்டோஸ் காலணி, இடமலைக் குடி மாங்குளம் போன்ற பகுதிகளில் பன்றி வளர்க்க ஏராளமான வாய்ப்புகள் இருக்கிறது. கால் நடைத் தீவனமாகப் பயன்படுத்த காய்கறிகள், பழங்களின் கழிவுப் பொருட்கள் ஏராளமாக கிடைக்கும்.

வாய்ப்புகள்

1. செயற்கை முறை கரு ஊட்டல் விஞ்ஞான முறையில் கொண்டு வர வேண்டும்.
2. பஞ்சாயத்தின் உதவியோடு கால் நடை பராமரித்தல் நிலையம் மூனாரை மையமாக்கி ஆரம்பித்து, எல்லா வார்டுகளிலும் கிளைகள் ஏற்படுத்தி பால் உற்பத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட வேண்டும்.
3. நல்ல இனம் பசுக்களை அருவித்து பசு வளர்த்தல் நிலையம் உண்டாக்கி IRDP அடிப்படையில் கடனுதவி கொடுக்க வேண்டும்.
4. மேய்ச்சல் புல் விவசாயம் லாபகரமாக்க புதிய விஞ்ஞான முறைகளை விவசாமுகளுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.
5. மாட்டுத்தூவனம் மற்றும் பொதுவாக கால்நடைத் தீவனம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை பஞ்சாயத்து மூலமாக ஆரம்பித்து அவற்றிற்குரிய மூலப்பொருட்களாக தாணியங்கள் காய்கறிகளின் இலை தழைகள் காய்ந்த புல் ஆகியவற்றை ஒவ்வொரு வார்டுகளிலிருந்தும் வழங்குவதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும்.
6. ஆடு வளர்த்தலை உற்சாகப்படுத்த புளோக்வழி கடனுதவ் அளிக்க வேண்டும்.
7. பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து கோழி வளர்த்தல் நிலையங்கள் ஆரம்பிக்க வேண்டும்.
8. கால நிலைகளையும், வாய்ப்புகளையும் அறிந்து பன்றிக் குட்டிகளை வழங்கி அபிவிருத்திச் செய்யலாம்.
9. பால் உற்பத்தியைக் கணக்கில் டுெத்து பால் பொருட்கள் (பாலாடாக்கட்டி, வெண்ணெய், நெய், பால்கோவா) போன்றவைகள் தயாரிக்கும் கொழிற்சாலை அமைத்தல் வேண்டும்.
10. ஆடு, மாடு, கோழி, பன்றி ஆகியவற்றின் இறைச்சிகளை பதப்படுத்த ஒவு பதப்படுத்துதல் தொழிற்சாலை அமைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.
11. உற்பத்தி பொருட்களுக்குரிய முறையான சந்தைகள் உண்டாக்கி விற்பனை நிலையங்கள் உண்டாக்க வேண்டும்.
12. குண்டனையில் கோழிப்பண்ணையை புதுப்பித்தல் வேண்டும்.
13 பால் உற்பத்தி அதிகரிக்க KLDMM Board Machppelz) நல்ல இனம் பசுக்களை வளர்த்து உற்பத்தி அளவைக் கூட்ட திட்டம் தயாரித்தல்.

மீன் வளர்த்தல்

விளையேறியதும் நல்ல சுவையுள்ளதுமான ட்ரவுட் பிஷ், ரெட் பிஷ், கோல்டு பிஷ் போன்ற மீன்கள் உம்டாக்கி மீன் வலர்த்தலுக்கு ஏராளமான வாய்ப்புகள் இருந்தும் அது பிரயோசனப்படுத்தப்படவில்லை. விஞ்ஞான முஹையில் மீன் விவசாயத்திற்கு உரிய விளக்கங்களும் வழிகாட்டுதலும் இல்லாமல் போனதே இப்பகுதியில் மீன் வலர்த்தல் நடக்காமல் இருக்கிறது. சில சதுப்பு நிலப் பகுதிகளில் சிறியவகை "செம்மீன்" உண்டு. சம்மந்தப்பட்ட துறை வல்லுநர்களைக்கொண்டு இப்பகுதியின் நீர் நிலை, கால நிலை போன்றவைகளை முயற்சிகளில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை.

அட்டவணை 5

மூணார் கிராம பஞ்சாயத்தில் மீன் வளர்த்தலுக்கு ஏற்ற இடங்களின் பட்டியல்

வ.எண்.	இடம்	செயல் வடிவம்
1	மூணார் காலணி-ஆறு கிராம்ஸ் லேண்ட்	செக்குடாம்
2	பழைய மூணார்-சிவன் மலை வாய்க்கால்	செக்குடாம்
3	மாங்குளம் சிங்ககுடி	செக்குடாம்
4	மாங்குளம் முத்தாச்சேரி	செக்குடாம்
5	மாங்குளம் கோழிவாலன் குத்து	செக்குடாம்
6	மாங்குளம் பெருமணகுத்து	செக்குடாம்
7	சிவன்மலை-லட்சுமி பகுதி	செக்குடாம்
8	எல்லப்பட்டி கருங்குளம் டிவிஷன்	செக்குடாம்
9	சிட்டிவாரை O.C. டிவிஷன்	குளம் சீரமைக்கப்படுதல்
10	மூணார் KSRTC பஸ் ஸ்டாண்டு சமீபம் ஆறு	குளம்
11	மூணார் ஹெட் வொர்க்ஸ்	மீன் கூடுகள் உண்டாக்க வேண்டும்
12	தேவி குளம் ODK டிவிஷன்	குளம் - மீன் கூடுகள் உம்டாக்க வேண்டும்
13	மூணார் டவுண் KAP கேம்பின் சமீபம்	குளம்
14	குண்டுமலை	செக்குடாம்
15	சொக்கநாடு சௌத் டிவிஷன்	ஆறு - செக்குடாம்
16	சொக்கநாடு வடக்குப்பிரட்டு	வாய்க்கால் - செக்குடாம்
17	தேவிகுளம் புளோக் ஆபிஸ் முன்புறம்	குளம் - விரிவுபடுத்துதல் வேண்டும்
18	தேவிகுளம்	கோவில் சமீபம் சதுப்பு-குளம்
19	வாகுவாரை அரிஜன் காலனி	வாய்க்கால் - செக்டாம்
20	வாகுவாரை லோயர்	வாய்க்கால் - செக்டாம்
21	லக்கம்குடி	வாய்கால் - செக்டாம்
22	காப்பி ஸ்டோர்	அருவி செக்டாம்

வாய்ப்புகள்

1. பழைய மூணார், செவன்மலை கால்வாயில் செக்குடாம் உண்டாக்கி மீன் வளர்த்தலாம். பழைய மூணார் பஸ் ஸ்டாண்டு சமீபம் சதுப்பு நிலத்தில் குளம் உண்டாக்கி மீன் வளர்த்தலாம்.
2. மூணார் காலணியில் கிராம்லோண்ட் கால்வாயில் செக்குடாம் உண்டாக்கி மீன் வளர்த்தலாம். மூணார் லட்சம் வீடு அருகில் பரிசோதனை செய்து பார்க்கலாம்.
3. மாங்குளம், சிங்கக்குடி, முத்தனாச்சேரித்தோடு, கோழி வாலன் குத்து, பெரும்பன் குத்து முதலிய இடங்களில் தண்ணீரை தடை செய்து மீன் வளர்த்தலாம்.
4. செவன்மலை, லட்சுமி பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் மீன் வளர்த்தலாம்.
5. எல்லப்பட்டி கரும்குளம் டிவிஷனில் கிரவுண்ட்டுக்கு அரிகில் செக்குடாம் கட்டி மீன் வளர்த்தலாம்.
6. சிட்டிவாரை எஸ்டேட் ஒ.சி. டிவிஷனில் ஒரு குளம் உண்டு. புதுப்பித்து மீன் வளர்த்தலாம்.
7. மூணார் KSRTC பஸ் நிலையம் அருகில் ஆற்றங்கலையோரம் குலம் கட்டி கோல்டு பிஷ், ட்ரவுட் பிஷ், முதலிய மீன்களை வளர்த்தலாம்.
8. மூணார் Head Works- Tam -ல் மீன் கூடுகள் கட்டி மீன் வளர்க்கலாம்.
9. மாட்டுப்பட்டி, S.P. புரம் ஆகிய அணைக்கட்டுகளில் மீன் கூடுகள் கட்டி மீன் வளர்க்கலாம்.
10. பொதுவான 15 வார்டுகளிலும் மீன் வளர்த்தலுக்கு பயனளிக்கக் கூடிய. ஒரு சங்கம் அமைத்து மீன் விவசாயம் அபிவிருத்தி அடையச் செய்யலாம்.
11. பஞ்சாயத்து சார்பாக ஒரு மீன் பண்ணை அமைத்து சுற்றுலாப் பயணிகளிடமிருந்து நுழைவுக் கட்டணம் வாங்குவதன் மூலம் பஞ்சாயத்திற்கு வருமான வழி உண்டாக்கலாம்.
12. உற்பத்தி பொருட்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து நல்ல வருமான வழிகள் உண்டாக்கலாம்.
13. மீன் பதப்படுத்துதல், மீன் ஏற்றுமதி செய்தல் முதலியவைகளுக்கு சிறிய அளவில் தொழிற்சாலை ஏற்படுத்தலாம்.

5. தொழில் துறை

மூணார் கிராமப் பஞ்சாயத்திலுள்ள அதிகமான மக்களும் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஆகும். தொழில்துறை மூலமாகத்தான் தேயிலை உற்பத்தி நடைபெற்று ஏற்றுமதி செய்யப்படுகிறது. வேறு பெரிய தொழில்களுக்கு வாய்ப்புகள் மிகக்குறைவானாலும் இங்கு டூரிஸ்ட் (Tourisum) தொழில் நன்றாக அபிவிருத்தி செய்து அதனால் பஞ்சாயத்திற்கு நல்ல வருமானம் உண்டாக்க சிறந்தவழி உள்ளது.

நல்ல சீதோஷ்ண நிலையும், குளிர் நிறைந்த பிரதேசமும் இயற்கை அழகும், மலையும், குன்றுகளும், சரிவுகளும், மஞ்சு நிறைந்த பனிமலையில் பூத்துக் குலுங்கும் அழகிய மலர்களும், மலை நடுவே சீரிப்பாயும் அருவிகளும், உருண்டோடும் ஆறுகளும், ஊற்றுக்களும், காட்டானைக் கூட்டங்களும், கரடி, புலி, கருவாய்களும், மிக அபூர்வமான வரையாடுகளும், பறவைகளும், 12 ஆண்டுக்கு ஒரு முறை மலரும் குறிஞ்சி மலரும் கண்ணுக்கினிய காட்சிகளாக அமையும். தென் இந்தியாவின் உயரமான மலையாகிய ஆனைமுடியும் ஸ்சுவிட்சர்லாந்தை நினைவூட்டும் இரவி குளம், சீதா தேவி நீராடியதென்று ஐதீகம் நிறைந்த தேவிகுளம் படகு ஒட்ட வசதியான நீர்த்தேக்கமாகக் கருதப்படும் மாட்டுபட்டி. குண்டளை அணைக்கட்டுகளும், மாட்டுப்பட்டி கன்று காலிப் பண்ணையும், பசுமையான தேயிலைத் தோட்டங்களும் நிறைந்த நம் பஞ்சாயத்தைத் தேடி வரும் அநேக சுற்றுலா பயணிகளிந் பேர் ஆவாவை பெரிதும் நிறைவேற்றுவதாக அமைந்துள்ளது.

இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு பஞ்சாயத்து மீ அரசாங்கத்தின் மூலமாகவோ எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. சுற்றுலாப் பயணிகளின் சுற்றுலை மையமாகி மூணார் டவுனில் போக்குவரத்து நெரிசலினால் மிகவும் அவதிப்படும் நிலையே உள்ளது. மண்ணையும், பெண்ணையும் மதித்து வாழும் இப்பகுதி மக்கள், வரும் சுற்றுலாப் பயணிகளை வரவேற்க இன்முகத்துடன் தயாராக இருக்கின்றனர்.

வாய்ப்புகள்

1. மூணார் டவுனில் நல்ல தண்ணியின் அருகில் அமைந்துள்ள அம்பலம் ரோட்டுக்கு ஒரு வழிப்பாதை (One way) அமைத்து மாட்டுப்பட்டி, தேவி குளம், உடுமலை ரோடுகளிலுள்ள நெருக்கடியை குறைக்கலாம்.

2. அதிகமான நட்சத்திர ஹோட்டல்களும், மற்ற தனியார்களின் தங்கும் விடுதிகளும் இருந்த போதிலும் அரசுடைமையான செலவு குறைந்த சத்திரங்கள் இல்லையென்றே சொல்லலாம். பஞ்சாயத்து சத்திரங்கள் நிர்மித்து அது வழி வருமானம் நேரிடலாம்.

3. 1926-ல் நிர்வகிக்கப்பட்ட ரோப்வே (Ropway) டாப்டேசன் வழி தமிழ் நாட்டிலுள்ள குரங்கணியிலுருந்து பொருட்கள் கொண்டு வரப்பட்ட நிகழ்ச்சி இன்றும் மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்திருக்கிறது. 1965-ல் National high way-ன் முன்னேற்றத்தோடு இது நிறுத்தப்பட்டது. ரோப்வே ஸ்டேசன் (Ropeway Station)

என்ற பெயர்ப்பலகைகளைக் காட்டி அயல்நாட்டு, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் அந்த ரோப்வே தற்போது எங்கேயிருக்கிறது என்று கேள்வி மேல் கேள்வி கேட்கின்றனர். ஆகவே மூணார் மூஸ்லீம் பள்ளிக்கு மேலேயுள்ள மலையில் ரோப்வே ஸ்டேசன் அமைத்து ராஜமலைக்கும், மாட்டுப்பட்டி வழியாக டாப்டேசன் வரையிலும் அமைத்தால் சிம்லா, டார்ஜிலிங் போல ஏராளம் அந்நிய செலாவணி கிடைக்கவும், பஞ்சாயத்தின் அபிவிருத்திக்கு உதவும் செய்யும்.

4. 1920-ம் கால கட்டத்தில் இங்கு ரயில் போக்குவரத்து இருந்தது. அதே போல சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் சிறு ரயில் பாதை அமைத்து ரயில் விட வேண்டும்.

5. ஆற்றோடு சேர்ந்து கிடக்கும் பரப்புள்ள புறம் போக்குகள், மற்றுமுள்ள இடங்களில் பூந்தோட்டங்கள் அமைக்கலாம். (உ.ம்) பழைய மூணார் மலையாளம் L.P. ஸ்கூலுக்கு எதிரேயுள்ள ஆற்றங்கரையோரம், அலுமினியப் பாலத்திற்கு கீழேயுள்ள தீவுத்திடலை கட்டி உயர்த்தி பூந்தோட்டம் உண்டாக்கவும், மின்சார விளக்குகள் அமைத்து அலங்காரம் செய்தல், ஹெட்வொர்க். டாமை குழந்தைகள் பூங்காவாக சிறந்த முறையில் அமைத்தல்.

6. தேவி குளத்தில் ஆரம்பித்திருக்கிற சுகந்த விளையை நல்ல முறையில் பராமரித்து அதந் மேன்மையை உயர்த்தவும், தேவிகுளம் Block office சமீபம் தடாகத்தில் படகுப் போக்குவரத்து ஏற்படுத்தவும் வேண்டும்.

7. அருவிகள் நிறைந்த அருவிக்காடு, ராஜமலை, வாகுவரை, சட்டமூணார் கேப் ரோடு, முதலிய பாகங்களிலி சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் வாட்ச்டவர்கள் ஏற்படுத்த வேண்டும்.

8. குதிரைகளை வாங்கி சவாரிக்காக பயன்படுத்தி பஞ்சாயத்தின் வருமானத்தைப் பெருக்கலாம்.

9. மூணார் டவுண் பக்கத்தில் விளையாட்டு ஸ்டேடியம் அமைத்தல் வேண்டும்.

10. சந்தையை சீர்படுத்தி அழகுபடுத்த வேண்டும்.

11. மூணார், கொடைக்கானல் ரோட்டைச் சீர் செய்து ஹைவேயாக மாற்ற வேண்டும். S.P. புரம், காந்தலூர் சாலையை சீரமைக்க வேண்டும். மாங்குளம், பெரும்பன்குத்து முதலிய நல்ல இடங்களில் ரோடுகள் செப்பனிடுதல் வேண்டும்.

12. மலையேறும் (Tracking) வசதிகள் ஏற்படுத்த வேண்டும்.

13. சிற்றுண்டிகள், பானங்கள், ஜாம்கள், ஊறுகாய்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நிர்வகித்து பெண்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கலாம்.

14. கைவினைக் கலைப் பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்கூடம் நிர்வகித்தல்

15. பாம்பன் மலை, சட்ட மூணார் பகுதிகளில், இஞ்ச, நெல்லிக்காய், மருந்துச் செடிகள், தைலப்புல், பிரம்பு முதலியவை அதிகமாகக் கிடைப்பதால், வாகுவாரை, S.T.களின்

குடியில், லக்கம் முதலிய இடங்களில் சிறு தொழில்கள் தொடங்கமுடியும் லக்கம் S.T.குடியில் கைவினைப் பொருட்களின் தொழில் தொடங்குதல்

16. வயக்கடவு, சட்டமூணார் பாகங்களில் மல்பரி விவசாயத்திற்கு வழியுள்ளதால் பட்டுப்பூச்சி வளர்க்க வசதி செய்ய வேண்டும்.

17. விலை கூடிய கற்கள் செண்டுவரை, சிட்டிவரை, அருவிக்காடு முதலிய பகுதிகளில் இருப்பதாலும், அவை தொழில் ரீதியாக உபயோகிக்க முடியாமல் இருப்பதாலும் அதற்கு ஒரு தொழிற்சாலை அமைத்தல்.

18. ரெடிமேட் ஆடைகள், மெழுகு திரி, தீப்பெட்டி போன்ற சிறுதொழில்களுக்கு ஏற்பாடு செய்தல்

19. 100 ஏக்கர் பகுதிகளில் பொட்டானிக்கல் கார்டன் அமைக்க வேண்டும்.

20. லாக்காடுக் கேப்பில், டெல்ஸ் கோப் நிலையம் நிறுவ வேண்டும்.

21. நல்ல, மிளகு, ஏலம் முதலியவை சேகரித்து எசன்ஸ் தாயிக்கும் தொழிற்சாலை நிறுவ வேண்டும்.

22. பழைய பஞ்சாயத்துக் கட்டிடத்தைப் புதுப்பித்து Shoping Complex கட்ட வேண்டும்.

23. தலையாரில் பனியன் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும்.

6. கல்வி

மூணார் பஞ்சாயத்திலுள்ள 15 வார்டுகளிலும் கல்வியைப் பற்றிய ஒரு பொதுவான கண்ணோட்டம் மிகவும் பின் தங்கிய பகுதியாக கருதப்பட்டு வருகிறது என்பதே. இப்பஞ்சாயத்து முழுவதும் மொழி சிறுபான்மை இனமான தமிழ் மக்களே அதிகம். ஆரம்ப காலங்களில் கண்ணன் தேவன் கம்பெனி நிர்வாகம் ஆரம்பக் கல்வி வழங்குவதில் முன்கை எடுத்தது. 1918ல் முதன்முதலாக இப்பகுதியில் கல்வி நிலையம் ஆரம்பமானது. அது படிப்படியாக வளர்ச்சி பெற்று 1968-ல் அரசு அனுமதியின்படி அன்றைய கண்ணன் தேவன் நிர்வாகம் 1969ல் 12 பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கியது. இன்றைய டாடா-டீ-நிர்வாகம் அங்கீகாரம் வாங்கியது. இன்றைய டாடா-டீ-நிர்வாகம் சுமார் 28 பள்ளிகளை அரசு உதவித்தொகையுடன் நடத்தி வருகிறது. சுமார் 200 ஆசிரியர் ஆசிரியைகள் இந்நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இப்பள்ளிகளிலி பணியாற்றிவருகின்றனர். மத்திய அரசும் கல்விக் கொள்கையின் அடிப்படையில் ஒரு ஆங்கில போதனா முறையிலான ஒரு மேல்நிலைக் கல்வி நிலையமும் டாடா-டீ நிர்வாகம் நடத்தி வருகிறது. இது மட்டுமல்லாமல் அரசு உயர்நிலைப்பள்ளிகளில் 2 எண்ணம் உண்டு. அரசு L.P. மற்றும் UPS எண்ணமும் எண்ணிக்கையில் விரல் விட்டு எண்ணும் அளவிலேயே உள்ளது. பத்தாம் வகுப்பு பல ஆண்டுகளாக இல்லாத ஒரு உயர்நிலைப்பள்ளியும் இப்பஞ்சாயத்தில் உண்டு.

அட்டவணை 6 காண்க

கல்வி நிலையக் கட்டிடங்கள், ஆசிரியர்கள், பற்றாக்குறை, போக்குவரத்து வசதிகள், மழை, காற்று, குளிர் போன்ற இயற்கைத்தடைகள் இவற்றையெல்லாம் சமாளித்து நல்ல ஒரு குடிமகனாக, கல்வி அறிவு படைத்தவராக இந்த நாட்டின் எல்லா துறைகளையும் வளம் படைக்க வரும் வழித் தோன்றல்களின் கல்வி நிலை மிகவும் மந்தமான நிலையிலேயே தொடர்கிறது. பாடநூல் உரிய நேரங்களில் கிடைக்காமலும், கற்பிப்பதற்கு உரிய நேரத்தில் ஆசிரியர்கள் இல்லாமல் போவதும் வாடிக்கையாகிவிட்டது. உயர்கல்விக்கு வாய்ப்பில்லை. கலை, இலக்கியம், விளையாட்டு போன்ற பிற துறைகளில் பிரகாசிக்க இயலமுடியாத நிலை. இவற்றிலெல்லாம் குறைபாடுகள் உள்ள காரணமாகப் படிப்பை இடையில் நிறுத்திப் பண்படாமல் உள்ள பல பாலகர்களும் தோட்டங்களில் தஞ்சம் அடையும் சூழ்நிலையே மேலோங்கி நிற்கிறது. நல்ல கல்வியே ஒரு நாட்டை வளமாக்க முடியும் என்ற அடிப்படையில் ஏற்பட்ட பரிந்துரைகள் இனி வருவது.

அட்டவணை 7 காண்க

பற்றிய பொது விவர அட்டவணை.

மூணார் பஞ்சாயத்து (அட்டவணை-6)

வ.	பள்ளிக்கூடம்	மாண வர்கள்	கட்டிட வசதி	சோதனைக் கூடம்	படிப்பகம் /நூலகம்	விளையாட்டு மைதானம்	குடிநீர்	கழிப்பறை
1	அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் ஆசிரியர் மூணார் பயிற்சி	1350	போதுமான இடவசதி இல்லை	இல்லை	இல்லை	போதுமான இடவசதி இல்லை	போதுமான அளவு இல்லை	போதுமான. அளவு இல்லை
2.	அரசு உயர்நிலைப்பள்ளி தேவிகுளம்	763	போதுமான கட்டிடம் இல்லை	இல்லை	இல்லை	இல்லை	போதுமான அளவில் இல்லை	இல்லை
3.	அரசு உயர்நிலைப் பள்ளி செண்டுவாரை	286	சொந்தக் கட்டிடம் இல்லை	இல்லை	இல்லை	இல்லை	இல்லை	இல்லை
4.	அரசு உயர்நிலைப்பள்ளி கூடாரவளை	463	போதுமான கட்டிடம் இல்லை	இல்லை	இல்லை	இல்லை	போதுமான குடிநீர் இல்லை	இல்லை
5.	அரசு உயர்நிலைப்பள்ளி வாகுவாரை	384	போதுமான கட்டிடம் இல்லை	இல்லை	இல்லை	இல்லை	இல்லை	இல்லை
6.	அரசு உயர்நிலைப்பள்ளி சோத்துப்பாறை	117	H.S.க்கு சொந்த கட்டிடம் இல்லை	இல்லை	இல்லை	இல்லை	இல்லை	இல்லை
7.	சிறுமலர் மகளிர் உயர்நிலைப்பள்ளி, மூணார்	1259	உண்டு	உண்டு	உண்டு	உண்டு	உண்டு	உண்டு
8.	புனித மேரி உயர்நிலைப்பள்ளி, மாங்குளம்	372	உண்டு	உண்டு	உண்டு	உண்டு	உண்டு	உண்டு

உயர் துவக்கப்பள்ளிகள் அரசு மற்றும் தனியார் துறைகள்

பொது விவரங்கள்

GOVT/AIDED-UPS

அட்டவணை 7

வரிசை எண்	கல்வி நிலையம்	அரசு/ தனியார்	மாணவர்கள்			SC/ST மாணாக்கர்கள்			ஆசிரியர்கள் நியமனம்	ஆசிரியர்கள் காலியிடம்
			ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்		
1.	GOVT UPS KALLAR	GOVT	31	28	59	25	22	47	2	2
2.	GOVT UPS KANNIMALAI	GOVT	54	39	93	46	30	76	2	2
3.	GOVT. UPS LETCHMI	GOVT	47	39	86	43	37	80	1	3
4.	GOVT. UPS YELLAPPATTY	GOVT	25	26	51	24	26	50	1	3
5.	ST. MARYS UPS MANKULAM	PRIVATE AIDED	250	207	457	49	50	99	12	NIL
6.	VIMALALAYAM UPS, KARANDAKKAD	PRIVATE AIDED	161	153	314	103	109	212	9	NIL
	மொத்தம்		568	492	1060	290	274	564	27	10

வாய்ப்புகள்

1. எல்லா பாடசாலைகளுக்கும் நிரந்தர கட்டிடவசதி, குடிதண்ணீர், கழிப்பறைகள், விளையாட்டு மைதானம், நூலகம், ஆய்வுக்கூடம் போன்ற அடிப்படைவசதிகள் செய்து கொடுக்க வேண்டும்.

2. மாங்குளம், சாண்டோஸ் காலனி, இடமலைக்குடி போன்ற மலைவாழ்மக்கள் வசிக்கும் பகுதிகளில் குறைந்த பட்சம் உயர்கல்விக்கு வழி செய்யவேண்டும்.

3. செண்டுவாரை, எல்லப்பட்டி, குண்டளை, அருவிக்காடு முதலிய பகுதிகளுக்குப் பொதுவாக ஒரு மாணவ மாணவிகள் விடுதி வேண்டும்.

SC/ST மாணாக்கர்கள் பட்டியல் -LPS

வ.எண்.	வகுப்புகள்	மாணாக்கர்கள்		
		ஆண்	பெண்	மொத்தம்
1	I	356	381	737
2	II	326	317	643
3	III	526	481	1007
4	IV	506	485	991
மொத்தம்		1714	1664	3378

SC/ST மாணாக்கர்கள் -LPS

வ.எண்.	வகுப்புகள்	மாணாக்கர்கள்		
		ஆண்	பெண்	மொத்தம்
1	V	107	102	209
2	VI	92	93	185
3	VII	91	79	170
மொத்தம்		290	274	564

4. தலையார், வாகுவாரை, சோத்தப்பாறை, குண்டுமலை, நயமக்காடு ஆகிய பகுதிகளை மையமாக்கி ஒரு SC/ST விடுதி வசதி செய்து தரப்படவேண்டும்.

5. லாக்காடு, தேவிகுளம், சொக்கநாடு, கிராம்ஸ்லாண்டு, மாட்டுப்பட்டி, கூடாரவளை, சைலண்ட் வேலி போன்ற பகுதிகளையும் கணக்கிலெடுத்து மாணவ-மாணவியர் விடுதிகள் தனித்தனியே அமைத்தல் வேண்டும்.

6. எஸ்டேட் பகுதிகளில் மூன்றோ நான்கோ டிவிஷன்கள் சேர்த்து ஒரு U P ஸ்கூல் தொடங்க வேண்டும்.

7. கல்லார், நல்ல தண்ணி, கடலாறு, பெரியவாரை, கன்னிமலை, நயமக்காடு ஆகிய பகுதிகளில் பொதுவாக ஒரு உயர்நிலைப்பள்ளி அமைத்தல் வேண்டும்.

8. எல்லாப் பாடசாலைகளுக்கும் போதுமான ஆசிரியர்களை நிரந்தரமாக நியமித்தல் வேண்டும்.

9. பாடபுஸ்தங்கள் பள்ளி ஆரம்பநாளில் வழங்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

10. பள்ளிக் குழந்தைகள் நீண்ட தொலைவு பயணம் செய்து படிக்கும் சிரமத்தை தவிர்க்கப் பஸ் வசதி எல்லாப்பகுதிகளிலும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

11. பள்ளிக்கூட நிர்வாகம் நல்லமுறையில் செயல்பட PTA–ன் அதிகாரம் பயன்படுத்த வேண்டும்.

12. கலை, விளையாட்டு, இலக்கியத் துறைகளில் மாணவர்களுக்கு நல்ல பயிற்சி கொடுத்து, அவர்களை ஊக்குவிக்கும் பல திட்டங்களும் செயல்படுத்த வேண்டும்.

13. மேல்நிலைக் கல்வி தட்டெழுத்துப் பயிற்சி, பாலிடெக்னிக், டூரிஸம் கோர்ஸ், வேளாண்மை பயிற்சி நிலையம், கம்யூட்டர் பயிற்சி நிலையம் முதலிய உயர் வகுப்புகள் துவங்க வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

14. உடல் ஊனமுற்றோருக்கும் பெண்களுக்கும் பொருத்தமான கல்வி நிலையங்கள் துவங்கப்படுதல் வேண்டும்.

15. தோட்டக்கலை மற்றும் வேளாண்மைத்துறை போன்ற துறைகளுக்கு தங்கும் விடுதி வசதியுடன் கல்வி நிலையங்கள் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

16. SC/ST மாணாக்கர்களுக்கு தனித்தனியே (ஆண்/பெண்) ரெஸிடென்ஸியஸ் ஸ்கூல் உண்டாக்க வேண்டும்.

17. ஆங்கில போதனை முறை உயர் வகுப்புகள் மூணாரை மையமாக வைத்துத் துவங்கப்படுதல் வேண்டும்.

18. S.S.L.C. வெற்றி சதவீதம் உயர்த்த எல்லை உயர்நிலைப்பள்ளி தனிப்பயிற்சி வகுப்புகள் தொடங்க வழிவகுக்க வேண்டும்.

19. ஆசிரியர் பயிற்சி வகுப்பில் (TTC/B.ED) பயில தேவையான பயிற்சி நிலையங்களும் தங்கும் விடுதியும் அமைத்தல் வேண்டும்.

20. ஆசிரியர்களுக்கு தங்கும் வசதி (வீடு/விடுதி) செய்து கொடுக்கப்படவேண்டும்.

21. எல்லாப் பாடசாலைகளிலும் மதிய உணவு முறையாக நடைபெற வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கவும்.

22. சீருடைகள் பள்ளிகளில் கட்டாயமாக்கப்படவேண்டும்.

23. தமிழ் பாட நூல்கள் உடனே அச்சடித்து காலா காலங்களில் கிடைக்க வழி செய்தல் வேண்டும்.

24. ஆசிரியர்களுக்கு புதிய போதனா முறையும் இடைக்கால பயிற்சிகளும் வருடத்திற்கு ஒருமுறையாவது அளித்தல் வேண்டும்.

25. ஆசிரியர் நியமனம் அந்தந்தப்பகுதியிலுள்ளோருக்கு முன்னுரிமை கொடுத்து அந்தந்தப் பகுதியில் வரும் காலியிடங்களில் நியமிக்க வழிவகுக்க வேண்டும்.

26. எல்லா உயர்நிலைப்பள்ளிகளிலும் ஓவியம், விளையாட்டு, கைத்தொழில், தையல் முதலிய வகுப்புகளை கட்டாயமாக்கி பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமித்தல் வேண்டும்.

27. நாட்டுப்பற்று, ஆன்மீகம் போன்ற சமூக சிந்தனை வளர்த்தலுக்கு பாடத்திட்டத்தில் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

28. பள்ளிக்கூட பாட சம்பந்தமான பரிசோதனைகள் முறைப்படுத்தி கல்வி நிலை உயர்த்த மேலதிகாரிகள் முழுக்கவனம் செலுத்துதல் வேண்டும்.

29. உதவித் தொகைகள், ஊக்கத் தொகைகள், திறமைகளின் அடிப்படையில் . கால காலங்களில் வழங்குதல் வேண்டும்.

30. SC/ST ஆண்-பெண் மாணாக்கர்களுக்கு இலவச பாட நூல்கள் வழங்க வேண்டும்.

31. சொந்தக் கட்டிடம் இல்லாத பள்ளிகளுக்கு சொந்தக் கட்டிட வசதியும், கட்டிடங்களின் நிலையை ஆராய்ந்து சீரமைக்கும் பணியும் துவங்கப்படவேண்டும்.

32. சட்டமூணாரில் (L.P.SCHOOL) துவங்கப்படவேண்டும்.

33. சட்டமூணாரிலும், வாகுவாரை அரிஜன் காலனியிலும் க.ஒ.எ.நஇஏஞஞக (English medium). வேண்டும்.

7. குடிநீரும், பொதுமக்களின் ஆரோக்கியமும்

இந்தியாவின் பல மாநிலங்களிலும் முக்கியப் பிரச்சனையாக குடிநீர் தான் என்பதை நாம் அறிந்ததே! இப்பிரச்சனை மூணார் பஞ்சாயத்தையும் விட்டு வைக்கவில்லை. அதற்காக இதுவரை எவ்விதத் திட்டங்களோ, முயற்சிகளோ, எடுக்கப்படவில்லை. மூணார் டவுணில் 1980ல் ஆரம்பித்த வார்டா அத்தாரிட்டி (Water Authority) குடிநீர் திட்டம் இது வரை பூர்த்தியாகவில்லை. அது பூர்த்தியடைந்தால் குடிநீர்ப் பிரச்சனைக்கு நிரந்தரத்தீர்வு காண இயலும்.

குடிநீர்ப் பிரச்சனையுள்ள இடங்கள்

1. மூணார் S.C. Colony, லட்சம் வீடு காலனி, செட்டில்மெண்ட் காலனி, (Settlement Colony)
2. மூணார் டவுன், முருகன் கோவில் குடியிருப்புகள், அந்தோனியார் காலனி, தேவர் லயன், முஸ்லீம் பள்ளி லயன், இக்காநகர்
3. 20 முறி, 26 முறி, 7 முறி, 10 முறி, 6 முறி (மூணார்)
4. மூலக்கடை, வள்ளுவர் மன்றப் பகுதி (பழைய மூணார்)
5. தேவிகுளம் லட்சம் வீடு, காலனி (Colony) தேவிகுளம் டவுண் (Town)
6. சாண்டோஸ் (இச்வீச்நூட்) குண்டுமலை, அருவிக்காடு, புதுக்கடி (S.C.Colony)
7. லக்கம், சட்டமூணார், பாம்பன்மலை, தலையார் (S.C.Colony), தலையார் (Colony)
8. மாங்குளம், விரிபாறை, முனிபாறை, பாம்புக்கயம், டாங்குகுடி, மாங்குளம் நகர்பகுதி, பள்ளிக்கவலா, அம்பலப்படி, தாளும் கண்டம் ஸ்கூல்
9. இடமலைக் குடிகன்
10. எஸ்டேட் தேயிலைத் தோட்டங்களின் குடியிருப்புப்பகுதிகள்

குடிநீர் பிரச்சனைக்குத் தீர்வு காண உடனடியாக குடிநீர்த்திட்டம் கொண்டு வரவேண்டும். மூணார்ப் பஞ்சாயத்தின் முக்கியமான நீர்நிலைகளும், திட்டங்களும் வாய்ப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

மூணார் கிராம பஞ்சாயத்து

குடிநீருக்காக பயன்படும் நீர்நிலைகள்

எண்	இடம்	ஆறு/ ஊற்று/ அருவி/ குளம்	திட்டங்கள்	திட்டங்களினால் உள்ள பயன்
1.	பெரியவாரை ஆனைமுடி டிவிஷன்	அருவி	செக்குடாம்	15 ஹெக்-இடத்திற்கு வேளாண்மைக்கும், குடிநீருக்கும் உபயோகிக்கப்படலாம்
2.	மூணார் K.A.P. கேம்ப், இடது பாகம்	ஒடை	செக்குடாம்	இக்காநகர், காலனி பாகங்களில் குடிநீர் வசதி 300 குடும்பங்களுக்கு
3.	காலனி நர்சரி ஸ்கூல் பகுதி	நீருற்று	செக்குடாம்	லட்சம் காலனியில் குடிநீர்ப் பிரச்சனை தீரும்
4.	மூணார் காலனி	அருவி	செக்குடாம்	செட்டில்மென் காலனியில் உள்ளவர்களுக்கு குடிநீர்ப் பிரச்சனை தீரும்
5.	மூணார் டவுண் 8முறி, 10முறி	சதுப்பு நிலம்	குளம்	150 குடும்பங்களுக்கு குடிநீர் வசதி
6.	தேவர் காலனி டி.பி.ரோடு	ஒடை	செக்குடாம்	200 குடும்பங்களுக்கு குடிநீர்ப்பிரச்சனைத் தீரும்
7.	மூணார் பஞ்சாயத்து டிஸ்பென்சர் பக்கம்	நீருற்று	செக்குடாம்	250 குடும்பங்களுக்கு குடிநீர்ப் பிரச்சனைத் தீரும்
8.	தலையார் தென்மலை	ஒடை	செக்குடாம்	500 குடும்பங்களுக்கு குடிநீர் வழங்கலாம்.
9.	வாகுவரரை லக்ன கசம்	ஆறு	செக்குடாம்	எல்லா பகுதிகளுக்கும் குடிநீர் வசதி
10.	எல்லப்பட்டி பேக்டரி டிவிஷன் கருங்குளம்	அருவி	செக்குடாம்	குடிநீர் வசதி
11.	லட்சுமி, செவன்மலை, இடையில்	அருவி	செக்குடாம்	குடிநீர் வசதி

மூணார் கிராம பஞ்சாயத்து குடிநீருக்காக பயன்படும் நீர்நிலைகள்

எண்	இடம்	ஆறு/ ஊற்று/ அருவி/ குளம்	திட்டங்கள்	திட்டங்களினால் உள்ள பயன்
12.	சிட்டி வாரை O.C.டிவிசன்	ஒடை	செக்குடாம்	குடிநீர் வசதி
13.	செண்டுவாரை P.R. டிவிசன்	அருவி	செக்குடாம்	சுமார் 650 குடும்பங்களுக்கு குடிநீர் வசதி
14.	சொக்கநாடு பேக்டரி டிவிசன்	ஒடை	செக்குடாம்	சுமார் 400 குடும்பங்களுக்கு குடிநீர் வசதி
15.	தேவி குளம் இந்துக் கோவிலின் சமீபம்	நீர் ஊற்று	குடிநீர்க் கிணறும் தொட்டியும்	கிணற்றில் பம்ப் செய்து, செட்டில்மெண்ட் காலனியில் நீர்த்தொட்டி அமைத்து அப்பகுதியில் உள்ள அனைவருக்கும் குடிநீர் வழங்குதல்
16.	ஆண்டவர் குடி	நீர் ஊற்று	செக்டாம்	புதுக்குடி, ஆண்டவர் குடி, சன்டத்துக்குடி முதலிய பகுதிகளில் குடிநீர் வசதி
17.	மூணார் நியூ காலனி	சதுப்பு	கிணறு டாங்க்	100 குடும்பங்களுக்கு குடிநீர் வசதி
18.	இக்க நகர் கிணறு (ITU ஆபிஸ்)		டாங்க் மோட்டர் செட்	20முறி, 26முறி ஆசிரியர் குடியிருப்புகள் முதலிய பாகங்களுக்கு குடிநீர்
19.	போலீஸ் குவார்ட்ஸ்	கிணறு	மோட்டார் & டாங்க், பைப்	போலீஸ் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி
20.	மூலக்கடை காலனி	நிலத்தடி நீர்	பம்ப்	மூலக்கடை பாகங்களிலும் செட்டில்மெண்ட் காலனி படுதியிலும் தண்ணீர் வசதி
21.	மூணார் காலனி	பஞ்சாயத்து கிணறு	பராமரிப்பு	50 குடும்பங்களுக்கு

பொது மக்களின் ஆரோக்கியம்

இந்தியாவின் மிகப்பெரிய பஞ்சாயத்துக்களில் இதுவும் ஒன்று என்று பெருமைப்படும் இந்நேரத்தில், சுகாதாரத்தில் நாம் மிகவும் மோசமான நிலையில் இருப்பதும் உண்மையே! பொது மக்கள் தங்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைக்காக பொருட்களை வாங்கவும், விற்கவும் கடவுளை வழிபடவும், பயணங்கள் மேற்கொள்ளவும், மருத்துவ வசதிக்காகவும் இப்பஞ்சாயத்தின் 15 வார்டுகளிலும், அருகிலுள்ள பள்ளிவாசல், சின்னக்கானல் மறையூர், காந்தலூர், வட்டவட ஆகிய பஞ்சாயத்துகளிலுமுள்ள மக்கள் அனைவரும் இங்குதான் வருகிறார்கள். அதனால் மக்கள் நெருக்கம் அதிகரிக்கிறது. அதனால் இங்குதான் வருகிறார்கள். அதனால் மக்கள் நெருக்கம் அதிகரிக்கிறது. அதனால் ஏற்படும் பிரச்சனைகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. இப்பஞ்சாயத்தின் முக்கியப் பகுதியான மூணார்டவுனில் தொற்று நோய்களான மஞ்சள் காமாலை, காலரா, ப்ளூ முதலியவை ஏற்படுகின்றன.

2. மேற்கண்ட இடங்களிலிருந்து வரும் மக்களுக்குப் போதுமான கழிவு அறை, சிறுநீர்க் கழிப்பிடம், குடிதண்ணீர் வசதி, Waiting shed போன்ற வசதிகள் இல்லாததால் டவுனின் பல பகுதிகளிலும் அசுத்தமான நிலையிலுள்ளது. கடைகள், சந்தை, வீடுகள் முதலியவற்றிலிருந்து வெளியேறும் எல்லாக் கழிவுநீர்களும் ஆறுகளில் சென்று கலக்கிறது.

3. மூணார் டவுனிலுள்ள எல்லா ஹோட்டல்களுக்கும், தூரமான இடங்களிலுள்ள ஊற்றுக்களிலிருந்து தண்ணீர் கொண்டுவரப்படுகிறது. அதுவும் அசுத்தமானதாகும்.

4. சந்தை(Market)களிலுள்ள அழுக்குகள், மீன்கடை, மாமிசக்கடை, ஹோட்டல், இவற்றிலுள்ள கழிவுகள் பலபாகங்களிலும் குவித்து வைப்பதால் ஈக்களும், புழுக்களும் நிறைந்து துர்நாற்றத்தை ஏற்படுத்துகிறது. 20முறிப் பகுதிகளிலுள்ள கழிப்பறைகளிலிருந்து அசுத்த நீர் சாலைவழியாக ஓடுகிறது.

5. இப்பஞ்சாயத்திலுள்ள எஸ்டேட்டுகளில் டாடா டீக் கம்பெனியின் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யாதவர்களுக்கு சென்று சிகிச்சை ஒன்று பெயரளவில் மட்டுமே உண்டுய அங்கு மருத்துவரோ, மருந்துகளோ, மற்ற வசதிகளோ இல்லை.

6. இப்பஞ்சாயத்திலுள்ள டவுண் அரிசனக் காலனி (Colony) முருகன் கோவில் குடியிருப்பு, தேவர்காலனி, 20முறி அருகில், தேவிகுளம் லட்சம் காலனி, லக்கம், தலையார், சட்டமூணார், காப்பிஸ்டோட், பாம்பன்மலை, வயக்கடவு குண்டுமலை, அருவிக்காடு, சாண்டோஸ், இடமலைக்குடி (S.T.Colony) முதலிய இடங்களில் கழிவறை, மூத்திரப்புறை இல்லை.

7. ஹோமியா மருத்துவமனையோ, சிகிச்சையோ இல்லை.

மூணார் கிராம பஞ்சாயத்து
அரசு ஆயுர்வேத பிஸ்பென்சரியிலுள்ள விவரம்

ஆண்டு	நோய்களை பற்றிய விபரம்						
	வெளி நோய்கள்	தோல் வியாதி	வாத நோய்	தொற்று நோய்	விஷ சிகிச்சை	மற்றவைகள்	மொத்தம்
1992-93	14,621	4,302	6,308	1,560	Nil	2,451	14,621
1993-94	22,268	6,006	8,410	3,205	Nil	4,647	22,268
1994-95	19,876	4,355	6,548	2,110	Nil	6,863	19,876
1995-96	10,402	3,201	4,613	1,111	Nil	1,477	10,402
மொத்தம்	67,167	17,864	25,879	7,986	Nil	15,438	67,167

8. ஆயுர்வேத ஆஸ்பத்திரி இருந்தும், சொந்தமான கட்டிடமோ, நோயாளிகளுக்குத் தேவையான வசதிகளோ இல்லை.

9. மூணார் டவுனில் கழிவுநீர்க் கால்வாய்கள் இல்லை, எஸ்டேட் குடியிருப்புகளில் (Line) சுகாதாரமான வசதிகள் இல்லை

பரிகாரங்கள்

1. தேவிகுளம் ஆரம்பச் சுகாதார நிலையத்தை கம்யூனிட்டி ஹெல்த் சென்டர் (Community Health Centre) ஆக மாற்ற வேண்டும்.

2. மூணார் அரசு ஆயுர்வேத மருத்துவ நிலையத்தை 30 படுக்கைகளோடு உள்ள ஆஸ்பத்திரியாக (மருத்துவமனை) உயர்த்தவும் இம்மருத்துவமனைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஒரு ஏக்கர் இடத்தில் மருத்துவனைக் கட்டிடமும், ஊழியர்களின் குடியிருப்புகளும் கட்டித்தரவேண்டும்.

3. மூணாரை மையமாகக் கொண்டு 50, படுக்கைகள் உடைய அரசு மருத்துவமனை நிறுவ வேண்டும்.

4. இப்பஞ்சாயத்து மருத்துவமனையில் நிரந்தரமாகத் தங்கிச் சேவை செய்யும் திறமையான மருத்துவரை நியமிக்க வேண்டும். மருந்துகளும், படுக்கைவசதிகளும், ஊழியர்களும் தேவைக்குத் தகுந்த மாதிரி நியமிக்க வேண்டும்.

5. 4000 பேர் நெருக்கமாக வசிக்கும் மூணார்காலனி(Colony)யில் பஞ்சாயத்து மருத்துவமனை நிறுவவேண்டும் அல்லது அங்குள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தைச் சீரமைக்க வேண்டும்.

6. மூணார் டாடா டீ கம்பெனியின் சந்தையை (Market) பஞ்சாயத்து தன் கீழ்க்கொண்டு வந்து கழிவுப் பொருட்களைச் சேமிக்கும் கிடங்கு, சுத்தத் தண்ணீர், கழிப்பறைகள், சிறுநீர்க்கழிப்பிடங்கள் முதலியவைகளை நவீனப்படுத்த வேண்டும்.

7. நல்ல தண்ணி எஸ்டேட் சாலைச் சந்திப்பு, மாட்டுப்பட்டி சாலைச் சந்திப்பு அஞ்சல் நிலையத்திந் அருகில் கழிப்பறை சிறுநீர்க்கழிப்பிடம் கட்டவேண்டும்.

மூணார் கிராம பஞ்சாயத்து
கக்கூஸுகள் பற்றிய விவரம்

வார்டு நம்பர்	சானிட்டரி கக்கூஸுகள் இல்லாத வீடுகளுடைய எண்ணிக்கை (I R D P சர்வே)	வேறு பலத் திட்டங்கள் வழியாக கிடைத்த கக்கூஸிகளின் எண்ணிக்கை 1992	வேலை முடிந்தவைகளின் எண்ணிக்கை	கக்கூஸுகள் இனி வேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கை
I	49	16	16	33
VI	30	10	10	20
IX	870	46	46	865
X	1300	140	140	1160
XII	290	4	4	286
Xiv	79	29	29	50

8. கழிவு நீர்க்கால்வாய்கல் நிர்மாணித்தல், சந்தை (Market) காலனிகள் (Colony) எஸ்டேட் தொழிலாளர்களின் குடியிருப்புகள் முதலிய இடங்களில் கழிப்பறை கட்ட வேண்டும்.

9. மூணார் (S.C.Colony) 75 கழிப்பறைகள், சாண்டோஸ் 40 கழிப்பறைகள், லக்கம், தலையார், வயக்கடவு, மாங்குளம், இடமலைக்கடி ஆகிய பகுதிகளில் வீட்டுக்கு ஒரு கழிப்பறை வீதம் கட்டிக்கொடுக்க வேண்டும்.

10. சட்டமூணாரில் அரசு ஆயுர்வேத மருத்துவமனை நிறுவி அதற்கு நல்ல மருத்துவரையும், மற்ற வசதிகளையும் நிறைவேற்ற வேண்டும். (கட்டிடம் கட்ட இடவசதியை அங்குள்ளவர்கள் இலவசமாக அளிக்க வாக்குறுதி அளித்துள்ளனர்)

11. மக்கள் நெருக்கமாக வசிக்கும் எல்லாக் குடியிருப்புப் பகுதிகளிலும் கிருமி நாசினிகளை தெளிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யவும்.

12. நோய்த்தடுப்பு முறைக்கு வேண்டிய தடுப்பு மருந்துகள், ஊசிகள், முதலியவைகளை குறிப்பிட்ட காலங்களில் செய்யவேண்டும்.

13. தேவிகுளம் அரசு மருத்துவமனையை நவீனப்படுத்தவும், ஒரு "ஆம்புலன்ஸ்" வாங்கவும் வேண்டும்.

மூணார் கிராம பஞ்சாயத்து

எண்	ஊனமுற்றோர்கள்	எண்ணிக்கை	எண்	நிரந்தர நோயாளிகள்	எண்ணிக்கை
1	கண் காணாதவர்கள்	62	1	இரத்த அழுத்தம்	8,915
2	காது கேளாதவர்கள்	38	2	நீரழிவு வியாதி	6,889
3	வாய் பேசாதவர்கள்	27	3	புற்று நோய்	48
4	காதும், வாயும் பேசாதவர்கள்	55	4	குஷ்டம்	39
5	முடமானவர்கள்	98	5	காசநோய்	84
			6	இதய நோய்	315
	மொத்தம்	280		மொத்தம்	16,290

14. பஞ்சாயத்தின் சுத்தத்திற்காகவும், சுகாதாரத்திற்காகவும் விழிப்புணர்வுப் பயிற்சி முகாம்கள் நடத்தி அதன் மூலம் மக்களை விழிப்படையச் செய்யலாம்.

15. மக்கள் வசிக்கும் குடியிருப்புகளுக்கு 800மீட்டர் தூரத்திற்குள் கசாப்புக் கடைகள் இருக்கக் கூடாது என்ற சட்டத்தை கடைப்பிடிக்கவேண்டும்.

16. மூணார் நகரில் அங்கும் இங்கும் அலைந்து திரியும் மாடுகளை அடைத்து வைக்க கேட்டிலி பௌர்ணமி (இஹஞ்ஞ்ஹீக் ஆச்ஞிஹூக்ஷிக்சுட்) நிர்வகிக்க வேண்டும்.

17. மாங்குளம் பகுதிகளிலுள்ள போலிமருத்துவர்களைக் கட்டாயமாக தடை செய்யவேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

18. மாங்குளம் ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்தி, மருத்துவர்கள், ஊழியர்கள், படுக்கை வசதிகள், மருந்துகள், நவீன மருத்துவக் கருவிகள் முதலானவற்றை ஏற்படுத்த வேண்டும்

19. ஆனக்குளத்தில் ஒரு அரசு ஆயுர்வேத மருத்துவமனையும். அதற்குரிய வசதிகளையும் உண்டாக்க வேண்டும்.

20. இடமலைக் குடியில் வசிக்கும் மலைசாதிப் பழங்குடியினருக்கு ஒரு அரசு மருத்துவமனை நிறுவி அதற்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்ய வேண்டும்.

8. போக்குவரத்து - எரிபொருள் - சந்தை

குடிதண்ணீர் பிரச்சினைக்கு அடுத்தபடியாக போக்குவரத்தும் அதற்கு வேண்டிய வசதிகளும் இப்பஞ்சாயத்தில் மிகவும் மோசமான நிலையே தொடர்கிறது. இப்பஞ்சாயத்தில் உட்பட்ட எல்லாப் பகுதிகளிலும் உள்ள கிராமங்களுக்கு சரியான சாலை வசதிகள் இல்லை. வாகனப் போக்குவரத்து மிகவும் குறைவாக உள்ளது. மூணாரைச் சுற்றியுள்ள தேயிலைத் தோட்டக் கிராமங்களில் வசிக்கும் அனைவரும் தங்களின் அன்றாட அத்தியாவசியப் பொருட்களை வாங்கவும் மற்ற பகுதிகளில் தொடர்பு கொள்ளவும் மூணாருக்கே வர வேண்டியிருக்கிறது. இந்நிலையில் மூணார் டவுணில் போக்குவரத்து மிகவும் நெருக்கமாக அமைந்திருப்பதாலும் வாகனப் போக்குவரத்துக்கள் மிகவும் கஷ்டமாக உள்ளது. பல விபத்துக்களும் ஏற்பட காரணமாகிறது. இடமலைக்குடி, மாங்குளம் போன்ற குடிப் பிரதேசங்கள் மூணாரை விட்டு வெகு தொலைவில் தனித்து விடப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதிகளில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களும் பழங்குடியினரும், இதற்காகப் பலமுறை அரசாங்க ஆபிஸ்களுக்கு ஏறி இறங்கிய போதிலும் இதுவரை சரியான திட்டங்கள் தீட்டப்படவில்லை. இதனால் அங்கு ஆதிவாசிகளுக்கு இன்னும் தங்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியவில்லை என்பதும், அங்குள்ள குழந்தைகளுக்கு சிறந்த கல்வி வசதி செய்ய முடியாமலும், நோயினால் அவதிப்படுவோர்கள் உடனே தக்க சிகிச்சை செய்ய வசதியில்லாமல் பலர் இறந்தும் போயிருக்கிறார்கள் என்பதும் உண்மையே. இங்கு சாலை அமைப்பதற்கு தடையாக இருப்பது வனத்துறைவினர் என்பதே உண்மை.

மூணார் கிராம பஞ்சாயத்து

PWD - பஞ்சாயத்து, தனியார் ரோடுகள்

எண்	சாலை	தூரம்	PND/NH	பஞ்சாயத்து	நபர்	
1	மதுரை-கொச்சி	15.125K.M.	✓	-	-	
2.	நல்லதண்ணி-கோதமங்கலம்	-	கணக்காக்கப்படவில்லை			
3.	மூணார்-டாப் ஸ்டேஷன்	32.120 K.M.	✓	_	_	
4.	மூணார்-மாங்குளம்	2 K.m.	✓	-	-	
5.	மூணார் -KSEBகேம்ப் ஆபீஸர்	250 K.M.	✓	_	_	
6.	தேவிகுளம் கச்சேரி மாட்டுப்பட்டி	9.650 K.M.	✓	_	_	
7.	தேவிகுளம் கச்சேரி குளமாங்காய்	1.5 K.M.	✓	-	-	
8.	தேவிகுளம் கச்சேரி - போடிமெட்டு (ODK, சின்னக்கானல்)	-	கணக்காக்கப்படவில்லை			
9.	தேவிகுளம் கச்சேரி - கோதிட ரோடு	458 K.M.	✓	_	_	
10.	தேவிகுளம் ஹாஸ்பிட்டல்	487 K.M.	✓	_	_	
11.	மூணார் ரெஸ்ட் ஹவுஸ்	20 K.M.	✓	_	_	
12.	மூணார் காலனி	3 K.M.	_	✓	_	
13.	மூணார் போலிஸ் ஸ்டேஷன்	600 K.M.	_	✓		
14.	தேவிகுளம் ODK	15 K.M.	-	-	✓	டாடா டீ கம்பெனி
15.	மூணார்-சைலண்ட்வாலி	18 K.M.	-	-	✓	டாடா டீ கம்பெனி
16.	மூணார்-கல்லார்	13 K.M.	-	-	✓	டாடா டீ கம்பெனி
17.	மூணார்-பெட்டிமூடி	22K.M.	-	-	✓	டாடா டீ கம்பெனி

மூணாரிலிருந்து சாண்டோல் (அருவிக்காடு, டாப் டிவிசன் வழியாக) சைலண்ட் வேலிவரை, சாலைகளின் நிலை மோசமாக இருக்கிறது. மூணார்-மாட்டுப்பட்டி செண்டுவாரை-சிட்டிவாரை சாலை தென்மலை-குண்டுமலை மிகவும் மோசமான குண்டும்-குழியுமாக அமைந்துள்ளது. மூணார்-வாகுவாரை சாலை, காலனி சாலை, இது போன்ற பல சாலைகளின் நிலைமையும் மிகவும் மோசமாக உள்ளது.

தொலைத்தொடர்பு (தந்தி, கடிதப் போக்குவரத்து, பணம் பட்டுவாடா) மிகவும் குறைவான அளவு, வசதியுள்ளது.

வாய்ப்புகள்:

1. மூணாரிலிருந்து நல்ல தண்ணீர் ரோட்டை சரிபார்த்தல்
2. காலனிக்குச் செல்லும் எல்லா சாலைகளையும் தார் சாலைகளாக்க வேண்டும்.
3. மாங்குளத்தில் நல்ல தார் சாலை அமைக்க வேண்டும்.
4. இடமலைக் குடியில் உள்ள வனத்துறையினரின் மூலம் ஏற்பட்டுள்ள சாலை அமைத்தலில் உள்ள இடர்பாடுகளைப் போக்கி சாலை அமைத்தல்
5. மூணாரிலிருந்து மாட்டுப்பட்டி வழியாகச் செல்லும் 8-ஆம் மைல் பகுதியிலிருந்து இண்டோ சுவிஸ் வழியாக அருவிக்காடு டாப் டிவிஷன் வழி அருவிக்காடு சென்டர் வரைஉள்ள சாலை
6. புதுக்குடியிலிருந்து (குண்டனை) சாண்டோஸ் காலனிக்குச் செல்லும் சாலைகள் அமைத்தல்.
7. மூணாரிலிருந்து சைலண்ட்வேலிக்குச் செல்லும் ரோடுகளைப் புதுப்பித்தல்
8. மூணார்-செண்டுவாரை, செண்டுவாரை to P.R. டிவிஷன் வரையுள்ள ரோடுகள்.
9. சிட்டிவாரை 18-ஆம் மைலிலிருந்து O.C.டிவிஷன் வரையுள்ள சாலையைச் சீரமைத்தல்.
10. சொக்கநாடு எஸ்டேட்டில், குனமாவு டிவிஷன் வரையுள்ள ரோடுகள் அமைத்தல்.
11. நல்ல தண்ணிச் சாலையிலுள்ள ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்திலிருந்து முருகன் கோவில் வழியாகச் செல்லும் சாலையை மாட்டுப்பட்டி ரோட்டில் இணைத்து அதை ஒருவழிப்பாதையாக (One Way) மாற்றுதல்.
12. தேவிகுளம் டவுணில் ஐயப்பன் கோவில் முதல் ஆஸ்பத்திரிப் படிக்கட்டு சீரமைத்தல். அதே வழியாக நெற்றிக்குடி சாலை சீரமைத்தல்.
13. தேவிகுளம் இறைச்சிப்பாறையில் மின்சார வசதி செய்தல்.
14. Sub-Treasury முதல் Quarters வரை உள்ள சாலை சீரமைத்தல்.
15. K.S.R.T.C. கேரேஜ் தேவிகுளம் டவுணில் புதுப்பித்து நிறுத்தப்பட்ட அரசு போக்குவரத்து பஸ்கள் மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்.

எரிபொருள்

மின்சார வசதி இல்லாத எத்தனையோ கிராமங்கள் இப்பஞ்சாயத்தில் இருக்கிறது எவ்வளவோ நாகரீகம் வளர்ந்தும் இன்னும் மண்ணெண்ணெய் விளக்கில் தான் ஒளி பெற்று வருகின்றனர். வீட்டில் சமையலுக்குப் பயன்படும் எரிபொருள்களான மண்ணெண்ணெய், விறகு, கேஸ் போன்றவைகள் மிகவும் பற்றாக்குறை. சாண்டோஸ் காலனி, மாங்குளம், இடமலைக் குடி, பாம்பன் மலை, வயக்கடவு, வாகுவாரைக் குடிகள், மூணார் காலனி, போன்ற பகுதிகளில் எரிபொருள்கள் மிகவும் பற்றாக்குறை நிலையே. இப்பகுதியிலுள்ள பல ரேஷன் கடைகள் மூலம் வழங்கப்படும் மண்ணெண்ணெய் தேவைக்கேற்ப வழங்கப்படுவதில்லை.

வாய்ப்புகள்:

கீழ்க்கானும் இடங்களில் சூரிய சக்தியின் உதவியால் மின்சாரம் தயாரித்து விநியோகம் செய்யலாம்.

1. இடமலைக்குடி
2. சாண்டோஸ் காலனி
3. வயக்கடவு
4. பாம்பன் மலை
5. மூணார் காலனி
6. மாங்குளம்
7. தேவிகுளம் காலனி

2. கீழ்க்கானும் இடங்களில் அதிகமாகப் பசுக்கள் வளர்க்கப்படுகிறது. இவைகளில் இருந்தும் அதிக சாணகம் கிடைக்கிறது. இதை உபயோகித்து சாணக எரிவாயு அடுப்புகள் உண்டாக்கலாம்.

1. சாண்டோஸ்-புதுக்குடி
2. இண்டோ-சுவிஸ் புராஜெக்ட் மற்றும் அனைத்து எஸ்டேட்டுகளிலும்
3. டாடா டீ தேயிலைத் தோட்டங்களில் சுமார் 16,898. 91 ஏக்கர் நிலத்திலி விறகுக்காக மரங்கள் பயிர் செய்யப்பட்டாலும், அனைவருக்கும் அடுப்பு எரிக்க போதுமான விறகுகள் கிடைக்கவில்லை என்பதே உண்மை.

சந்தைகள்

நமது பஞ்சாயத்தின் 9, 10 வார்டுகளில் மையப்பகுதியில் அமைந்தது தான் மூணார் டவுண் சந்தை. இச் சந்தையின் நிர்வாகம், உரிமை எல்லாமே டாடா டீ கைவசமே இருக்கிறது. அதன் வருவாய் எல்லாம் டாடா டீக்கும். செலவு வரும் வேலைகள் சந்தையை சுத்தப்படுத்துவது, பராமரிப்பது மட்டுமே மூணார் பஞ்சாயத்து செய்து வருகிறது என்பது வேதனைக்குரிய விஷயமாகும். சந்தையிலுள்ள பலவகையான கழிவுப் பொருட்கள் ஆங்காங்கே குவிந்து கிடப்பதால் அது சந்தையின் சுகாதாரக் கேட்டிற்கும் பொதுமக்களிந் ஆரோக்கியத்திற்கும் மிகவும் தொல்லை தரக் கூடியாதாக அமைந்துள்ளது. இத்தனை வார்டுகளிலுமுள்ள சுமார் 1இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட இப்பஞ்சாயத்தின்

தேவைகளுக்காக மக்கள் பொருட்களை வாங்கவும் விற்கவும் அன்றாடச் சந்தையையே அணுக வேண்டியிருக்கிறது. இதற்கு தகுந்தாற் போல் சந்தையின் இடவசதிகள் அமையவில்லை. இப்பொழுது எல்லா நாட்களும் சந்தை செயல்பட்டு வருகிறது. மேலும் காய்கறிகள், மாமிசம், மீன், தேங்காய், பழவகைகள் இது போன்ற இன்னும் பல பொருட்களும் ஒரே சந்தையில் விற்பனை செய்யப்படுவதால் அசுத்தம் கூடி, துர்நாற்றம் உண்டாகி பல நோய்களும் உண்டாக ஏதுவாகிறது.

சந்தைகளில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளில் சிலர் தங்கள் சொந்த நலனுக்காக பல வசதிகளை, பணம் செலவழித்து உருவாக்கியதால் அந்த வியாபாரிகளே சந்தையை நவீனமயமாக்கத் தடையாகப் பேசப்படுகிறது.

சந்தையில் குடிநீர் வசதி, கழிப்பறைகள் இல்லை. மேலும் சந்தையை தண்ணீர் கொண்டு கழுவி சுத்தம் செய்ய வேண்டிய வசதிகள் இல்லை. இதனால் பொதுமக்கள் சந்தைக்குள் நுழைந்து பொருட்களை, காய்கறிகளை வாங்கிச் செல்ல மிகவும் கஷ்டப்படும் சூழ்நிலை (துர்நாற்றம் வீசுவத

வாய்ப்புகள்

1. சந்தையை டாடா-டி-வசம் இருந்து வாங்கி பஞ்சாயத்து தன் சொந்த உரிமைக்குள் கொண்டு வர வேண்டும்.
2. சந்தையை பிரித்து அதை நவீன முறையில் உருவாக்க வேண்டும்.
3. வியாபாரிகளுக்குத் தகுந்தாற் போல் சட்டப்படியான் வரி வசூல் செய்தல்
4. குடிநீர் வசதி, கழிப்பறை, சிறுநீர்க்கழிப்பறை, ஆகிய வசதிகள் செய்து சுகாதார வசதி செய்தல். கழிவு நீர் வாய்க்கால், கழிவுப்பொருட்களின் கோடவுண் ஆகிய வசதிகள் செய்யப்படவேண்டும்.
5. எல்லாக் கடைகளிலிருந்தும் வாட்கை, விற்பனை வரி முதலியவை பஞ்சாயத்து நேரிடையாக வரி வசூல் செய்தல்.
6. வியாபாரிகளை பஞ்சாயத்து அடிப்படையில் வரவழைத்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தி அதன் மூலம் சமாதனமாக ஒரே தீர்மானத்தில் வந்து சந்தையை விரிவு படுத்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.
7. இடித்து மாற்றப்பட்ட சிறிய கடை வியாபாரிகள் சுமார் 30க்கும் மேற்பட்டவர்களுக்கு புனர் நிவாரணமாக ஒரு குறிப்பிட்ட இடம் கண்டுபிடித்து ஒரு பல்பொருள் அங்காடி அமைத்துக் கொடுக்கவேண்டும்.
8. பெரிய வியாபாரிகளைக் (Agency) கண்டுபிடித்து சந்தையை விசாலப்படுத்த அவர்களின் உதவிக்கான வழிகளை உடனே கண்டுபிடித்து சந்தையை நவீனப்படுத்த வேண்டும். மூன்று மாடிக்கட்டிடங்கள் கட்டலாம்.
9. விரிபாறை, மாங்குளம் போன்ற சந்தைகள் வாரம் ஒரு முறை கூடுமாறு ஏற்பாடு செய்ய வேண்டும்.
10. செண்டுவாரை பழையை சந்தையை புதுப்பித்துக் கட்டிடம் கட்டி புதிய சந்தை வசதியும் சேமிப்புக் கிடங்குகள்(Storage) ஏற்படுத்த வேண்டும்.
11. எல்லாக் கடைகளிலும் நியாயமான விலைப்பட்டியல் தினசரி தேதியிட்டு எழுதப் பட்டிருக்க வேண்டும்.
12. தலையாரில் பல்பொருள் அங்காடி ஆரம்பிக்க வேண்டும்.

9. வீடு கட்டுதலும், சமூக நன்மையும்

மூணார் பஞ்சாயத்தில் அதிக மக்களும் டாடா டி கம்பெனியில் தொழிலாளர்களாகவும் அதிகார்களாகவும் இருப்பதால் அவர்களுக்குக் குடியிருப்புகள் உண்டு என்றாலும் மூணார் டவுண், மாங்குளம், தேவி குளம் டவுண் பழைய மூணார், சட்ட மூணார், குண்டளை, முதலாய பாகங்களில் தோட்டத் தொழிலாளர் அல்லாதவர்களுக்கு இருப்பிடம் இல்லாமல் அவதிப்படும் நிலையுள்ளது. குறைந்த வருமானம் உள்ளவர்களும், சொந்தத் தொழில் இல்லாதவர்களும் காலனிகளில் இடுங்கிய அறைகளில் வசிக்க வேண்டிய நிலையுள்ளது. மட்டுமல்ல சில காலங்களாக வியாபாரத்திற்காகவும் தொழில் தேடியும் இங்கு வந்து குடியேறும் மக்களிந் தொகை அதிகரித்து வருகிறது. நிலையிலாலைத மக்கள் வளர்ச்சித் திட்டங்கள் தீட்டுவதிலும் செயல்படுத்துவதிலும் பல இன்னல்கள் அனுபவப்படுகிறது. எஸ்டேட்டுகளில் தொலைபேசி வசதி இல்லை.

குடியிருப்புகளின் பொது நிலைமை

செங்கல், சிமெண்ட், மண்சுவர் முதலியவையும் தகரம், ஆஸ்பெஸ்டாஸ், ஓடு, புல் முதலியவைகளையும் உபயோகித்து உண்டாக்கிய வீடுகள் தான் அதிகம் உள்ளது. வீடுகளுக்குப் போடும் நடைப்பாதைகள், படிகள் முதலியன இல்லாத நிறைய வீடுகளை இங்கு காண இயலும்ய இயற்கை சீற்றங்களை எதிர்த்து தாக்கு பிடிக்கக் கூடிய வீடுகள் இடமலைக்குடி, மாங்குளம், மற்றும் காலனி பகுதிகளில் இல்லாமல் இருக்கிறது. சிமெண்ட், செங்கல், கம்பி போன்ற வீடு கட்டுமானப் பொருட்களை கொண்டு செல்லச் சாலை வசதி இல்லாத காரணத்தினால் தான் இந்நிலை ஏற்படுகிறது. அரசின் பலவித திட்டங்கள் மூலம் அளித்த வீடுகளில் தான் ஒடு கூரை இடப்பட்டுள்ளது.

வாய்ப்புகள்

1. ரவன்யு காலி இடங்களைக் கண்டுபிடித்து வீடுகள் உண்டாக்கிக் கொடுக்க வேண்டும்
2. Housing Society உண்டாக்கிச் சாதாரண மக்களுக்கும் விவசாயிகளுக்கும் வீ கட்டுவதற்குக் கடனுதவி அனுமதித்துக் கொடுக்க வேண்டும்.
3. I.A.Y./JRY திட்டம் மூலம் வீடு கட்ட திட்டங்கள் உண்டு என்றாலும் தேவையா இடங்கள், தஸ்வாஜீகள் முதலியவை கைவசம் இல்லாதஞால் எதிர்பார்க்கும் நன்மைக இத்திட்டத்தினால் ஏற்படவில்லை.
4. ஒரே குறிப்பிட்ட காலங்களிலும் வீடுகளின் நிலைமையைப் பஞ்சாயத்துத் திட்டப்படுத்தி பராமரிப்பு வேலைகளை செய்து தர வேண்டும்.
5. அரசு வழி கொடுக்கப்பட்ட வீடுகளை விற்பதில் கட்டுப்பாடுகளை உருவாக்குத மூலம் சட்டத்திற்குப் புறம்பாந குடியேற்றங்களைத் தவிர்க்க முடியும்.!

சமூக நன்மை

வாய்ப்புகள்

1. குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள் பெண் காவல் நிலையங்கள் நிறுவ வேண்டும்.
2. பால வாபுகளில் சத்துணவு வினியோகம் நன்முறையில் நடக்கச் சமூக நலத் துறை முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.
3. மூணார் காலனியில் 200 பேர் தங்கக் கூடிய கம்யூனிட்டி வரால் உண்டாக்க வேண்டும்.
4. எல்லா வீடுகளிலும் சாக்கடைக் கால்வாய்களும் கக்கூஸ்களும் உண்டாக்கித் தரவேண்டும்.
5. மூணார் டவுண், தலையார் வாடுவலை மாங்குளம், எல்லப்பட்டி முதலிய பாகங்களிலி ஒரோர் ஹோமியோ மருத்துவமநை அனுமதிக்கப்பட வேண்டும்.
6. தாலூ கண்டத்திலும், சட்ட மூணாறிலும் ஆயுர் வேத மருத்துவமனைகள் அனுமதிக்கப்படவேண்டும்.
7. தேவிகுளத்தில் எல்லா ஆபிஸ்களும் ஒரிடத்தில் விரும்பும் ரெலன்யூ டலர் உண்டாக்க வேண்டும்.
8. தேவிகுளம், மூணார் பகுதிகளில் அரசு ஊழியர், ஆசிரியர்களுக்குக் குடியிருப்புகள் உண்டாக்க வேண்டும்.
9. பெண் ஊழியர்களுக்கான விடுதி கட்டித்தர வேண்டும். (Working Women;s hostel)

அட்டவணை 14 காண்க

10. எல்லா வார்டுகளிலும் மாவேலி ஸ்டோர்கள் ஆரம்பிக்க வேண்டும்.
11. பொது வினியோக நிலையத்தை நியாய விலைக் கடையாக மாற்ற வேண்டும்.
12. நியாய விலைக் கடைகளிலும், மாவேலி ஸ்டோர்களிலும், மைதா, ரவை, பாமாயில் முதலியனவும் சப்ளை செய்ய வேண்டும்.
13. வீடு கட்ட தேவையான பொருட்களைன சிமெண்ட், கம்பி, செங்கல், ஓடு முதலியன சிவில் சப்ளைத்துறை மூலம் நியாய விலையில் வழங்க வேண்டும்.
14. மூணார் பஞ்சாயத்தில எல்லா 15 வார்டுகளில் ஒரோ டிவிஷனிலும் பொது தொலைபசி கூண்டு அமைக்க வேண்டும்.
15. குண்டுமலை, லட்சுமி. கல்லார், இடமலைக்குடி, சிட்டிவரை முதலிய இடங்களில் கடிதம் போக்குவரத்து வாரக் கணக்கில் ஆகிறது. அதனால் இவ்விடங்களில் தபால் நிலையங்கள் ஆரம்பிக்க வேண்டும்.

மூணார் கிராம பஞ்சாயத்து

அரசு பொது விநியோக அங்காடிகள் பற்றிய விவரங்கள்

மொத்த பொது விநியோக அங்காடிகள்	கார்டுகளுடையஎண்ணிக்கை			1995-96ல் விநியோகம் செய்த உணவுப் பொருட்கள் (குவிண்டால்)			95-96ல் விநியோகம் செய்த மண்ணெண்ணெய் (லிட்டர்)			
	NE	E	மொத்தம்	அரிசி	கோதுமை	சீனி	பெர்மிட்களின் எண்ணிக்கை	பெர்மிட் வழி விநியோகம்	கார்டு வழி விநியோகம் செய்வது	மொத்தம்
55	33114	12326	45440	7310 9.89	38436.91	6101.55	655	91221	628284	719505

10. கலாச்சாரம்

கலாச்சார முறையில் மூணார் பஞ்சாயத்து இதுவரை நல்ல முன்னேற்றமும் காணவில்லை. இங்கு தமிழ்நாட்டில் இருந்து குடியேறிய மக்களில் அனேகரும் உழைக்கும் வர்க்கத்தினராகும். ஆனால் படிப்பறிவில்லாதவர்களாகவும், கீழ்மட்டத்தில் வசிப்பவர்களுமாந ஒரு சமூகம் ஆகும். உயிரைக் காப்பாற்ற போராடுவதைத் தவிர வேறு துறைகளில் கவனம் செலுத்த முடியாத நிலையிலேயே வாழும் மக்கள் ஆரம்பக்காலங்களில் இங்கு தொடக்க பள்ளிகள கூட அனுமதிக்கப்படவில்லை. இந்நிலையில் சமூக நன்மைக்கு உணர்வூட்டும் ஆக்கபூர்வமான செயல்களை உருவாக்கும் வல்லுநர்கள் இங்கே தோன்ற வாய்ப்பில்லாமல் போனது. கல்லூரியில் படித்தவர்கள் விரல் விட்டு எண்ணும் அளவு கூட இல்லாத நிலை இன்றும் உள்ளது. உயர்பதவியில் இருப்பவர்களின் பிள்ளைகள் வெளி மாநிலங்களுக்குச் சென்று படித்து முன்னேறி அங்கேயே வேலை தேடிக் கொள்கிறார்கள். எழுதப் படிக்கத் தெரிந்த மக்களில் குறைந்த அளவில் ஆண்கல் மட்டுமே செய்தித்தால் வாசிக்கும் பழக்கம் உள்ளது. இப்பகுதியில் வாழும் மக்களின் பெரும்பாலோரின் முக்கிய பொழுதுபோக்கு சினிமா காண்பது என்பது தொன்று தொட்டே நிலவி வருகிறது. செயற்கைக் கோல் ஒளிபரப்புகள் பல தொலைக்காட்சிகளின் வழியாக ஒளிபரப்பிய போதிலும் அதில் ஒளிபரப்பாகும் சினிமா சம்மந்தமான நிகழ்ச்சிகல் மட்டுமே இம்மக்கள் அதிகம் விரும்பிப் பார்க்கிறார்கள். விளையாட்டு மைதானங்கள் இப்பஞ்சாயத்தில் மிகக் குறைவு. ஒரு விளையாட்டு மைதானம் மூணாரில் உள்ளது. இது த்விர வேறு எங்கும் விளையாட்டுத் திடல் இல்லை. மலை இடுக்குகள் இதற்கு முக்கிய காரணமாகும். கலைக் குழுக்கள் உருவாகின்றன என்றாலும் அவற்றின் ஆயுள் நீண்ட நாளுக்கு நீடிப்பதில்லை. கிளப்புகள், கலாச்சார நிலையங்கள் இவைகளுக்கு வேண்டிய வழிகாட்டுதலும், ஊக்கமூட்டுதலும் அளிக்கும் அமைப்புகள் இல்லாததால் அவைகள் தோல்வியடைகின்றன. பதிவு செய்தல், நடத்திச் செல்லுதல், வருவாய் மார்க்கம் முதலிய காரியங்களில் போதிய விபரம் இல்லாமல் இருக்கும் நிலை இப்போதும் உள்ளது. புளோக்குகள் இவ்விஷயத்தில் வேண்டிய முன்னுரிமை அளிப்பது இல்லை. மாங்குளத்தில் பத்துக்கும் கூடுதல் கிளப்புகள் உண்டு என்றாலும் பண நெருக்கடி காரணமாக பலவும் நின்று போய்விட்டது.

மூணார் கிராம பஞ்சாயத்து நிலவில் உள்ள கலை இலக்கிய மன்றங்கள்

வ.எண்.	பெயர் முகவரி	இணைஸ்தாபனம்	முக்கிய செயல்முறைகள்
1.	A.K.G. Artst & sports club இக்கா நகர், நூணார்	அரசு	கலைவிளையாட்டு போட்டிகள், இரத்த தானம்
2.	வில்லியன்டோனா இளங்கல்லார் மூணார்P.O.	இல்லை	கலைநிகழ்ச்சிகள்
3.	(லயன்ஸ்) அரிமா சங்கம் மூணார்	International	கல்வி
4.	ரோட்டரி கிளப், மூணார்	International	கல்வி
5.	ஸ்ரீமூலம் கிளப் தேவி குளம்	கிரந்தா சாலா சங்கம்	கலை, விளையாட்டு, நூலகம்
6.	மெரிலாண்ட் ஆர்ட்ஸ் கிளப், சொக்கநாடு	நேருயுவ கேந்திரா	கலை, விளையாட்டு, நூலகம்
7.	மெரிலாண்ட் பப்ளிக் லைப்ரரி, சொக்க நாடு	இரந்தசாலா சங்கம்	நூலகம்
8.	ஒலிம்பிக் ஆர்ட்ஸ் & ஸ்போர்ட்ஸ்கிளப்	நேரு யுவ கேந்திரா	கலை, விளையாட்டு
9.	ஜீனியர் சேம்பர் மூணார்	International	கலை, விளையாட்டு
10.	Tata Wite's association மூணார்	இல்லை	மலர்கண்காட்சி, சமையல் கலை
11.	YWCA மூணார்	International	காண்டன் தையல்பயிற்சி நர்சரி ஸ்கூல்
12.	வள்ளுவர் மன்றம், மூலக்கடை,மூணார்	இல்லை	சமூக சேவை
13.	மூணார் ஆர்ட்லவர்ஸ் அசோஸியேசன், மூணார்	இல்லை	கலைநிகழ்ச்சிகள்
14.	அம்பேத்கர் யூத் கிளப் வாகுவரை அரிஜன் காலனி	நேருயுவ கேந்திரம்	சமூக சேவை

இப்பஞ்சாயத்தில் நூலகங்கள் இரண்டோ மூன்றோதான் உள்ளது. இப் போதுள்ள நூலகங்களின் செயல்பாடு பரிதாப நிலையில் உள்ளது. 9-ஆம் வார்டில் பஞ்சாயத்து நூலகம் தொடங்கி மூன்று வருடங்கல் ஆன பின்பும் அதன் செயல்பாடு எந்தவித முன்னேற்றமும் அடையவில்லை. நூலகத்தின் செயல்பாடுகளுக்கு கமிட்டி ஏற்படுத்தி அதன் மேற்பார்வையில் நூலகத்தை சிறப்பாக நடத்த வேண்டும். குறிப்பிட்ட காலளவில்

பரிசோதனை நடத்தி நூலகத்தின் மேம்பாட்டிற்கு ஆலோசனை வழங்க வேண்டும் தலையாறில் ஒரு நூலகம் உண்டு என்றாலும் மின்சாரம். இருக்கைகள் மற்ற பர்னிச்சர்கள். தொலைக்காட்சிப் பெட்டி ஆகியவைகள் இல்லை. மேற்கூறிய காரணங்களால் அதன் செயல்பாடு பின்னடைவில் உள்ளது. சொக்கநாடு எஸ்டேட்டில் நல்ல செயல்பாட்டிற்கு தடையாக உள்ளது. மாங்குளத்தில் உள்ள நூலகத்தில் 150 புத்தகங்களே உள்ளன. நாடகம், பட்டிமன்றம், வழக்காடுமன்றம். கதை. கட்டுரை. இலக்கியம் இது போன்ற பல கலாச்சார நிகழ்ச்சிகள் இப்பகுதியில் அதிகம் நடைமுறைக்குக் கொண்டு வர ஆவன செய்யப்படவில்லை.

மூணார் பஞ்சாயத்திலுள்ள நூலகங்களின் வாரம்

வ.எண்	இடம்	நூலகம் அமைந்துள்ள பகுதி
1	மூணார்-பஞ்சாயத்து கட்டிடம்	பஞ்சாயத்து காம்பவுண்டு
2.	பஞ்சாயத்து கட்டிடம்	தலையார்
3.	பஞ்சாயத்துக் கட்டிடம்	மாங்குளம்
4.	ஸ்ரீமூலம் கிளப் பஞ்சாயத்துக் கட்டிடம்	தேவிகுளம் டவுண்

விளையாட்டுத்துறையில் ஆர்வமும். திறமையுமுள்ள எத்தனையோ இளைஞர்கள், மூணாரிலும், அதன் சுற்றுப்புற எஸ்டேட் பகுதிகளிலும் மற்றும் மாங்குளம் பகுதிகளிலும் இருந்தாலும் அவர்களின் திறமைகளை வெளிப்படுத்த வேண்டிய வாய்ப்புகள் இதுவரை அமையவில்லை என்பது உண்மை. ஒவ்வொரு வார்டிலும் விளையாட்டுத் திறமை ஊக்குவிக்கும் வண்ணம் மைதானம் அமைக்க வேண்டும்.

எல்லா மதத்தினருடைய கோவில்கள் இப்பகுதியில் உண்டு. ஆனால் எல்லா மக்களும் மத, இன, மொழி வேறுபாடு இன்றி ஒற்றுமையாக வாழும் பகுதி என்பதும் அறிந்ததே. மூணார் டவுணில் முக்கோண அமைப்பாக முஸ்லிம் கிறிஸ்தவ மற்றும் இந்து கோயில்கள் நிலை கொள்வது வேறு எங்குமே காண முடியாத அமைப்பாகும். இதுவே மத ஒற்றுமைக்கு சான்றாக இருப்பது கண்கொள்ளாக் காட்சியாகும். இங்கு கார்த்திகை, கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்ற பண்டிகைக்காலங்களில் மத வித்தியாசமில்லாமல் அனைவரும் பங்கு கொள்கிறார்கள் என்பது இப்பஞ்சாயத்தின் தனிச் சிறப்பாகும். திருமணம் போன்ற இல்லங்களில் நடைபெறும் விழாக்களில் அனைவரும் பங்கு கொள்வர் இல்லங்களில் நடைபெறும் விழாக்களில் அனைவரும் பங்குகொள்வர். இன, மத வேறுபாடுகளற்ற பந்தங்களைக் காணலாம்.

வாய்ப்புகள்

1. மூணார் டவுணில் மூலக்கடை, நல்ல தண்ணி முதலிய பிரதேசங்களில் கிளை நூலகம் அமைக்க வேண்டும்.

2. ஒவ்வொரு வார்டிலும் ஒவ்வொரு நூலகம் உண்டாக்கி தலைமை நூலகம் மூணாரில் ஏற்படுத்த வேண்டும்.

3. மாங்குளம் அம்பலக் குன்றில் அரசு ஒதுக்கி வைத்துள்ள இடத்தில், நவீன விளையாட்டு மைதானம் உண்டாக்க வேண்டும்.

4. ஒவ்வொரு வார்டிலும் பொது விளையாட்டுத்திடலும், கம்யூனிட்டி ஹாலும் உடற்பயிற்சி மைதானம் உண்டாக்க வேண்டும்.

5. எல்லா நூலகங்களுக்கும் கட்டிட வசதி, பர்னிச்சர் நூல்கள் மின்சார இணைப்பு ஆகியவை செய்து தரப்பட வேண்டும்.

6. காலனி பிரதேசங்களான மூணார் காலனி, குண்டளை, சாண்டோஸ், தேவிகுளம், தலையார், லக்கம், கம்யூனிட்டி ஹால் நியமிக்க வேண்டும்.

7. எல்லா லைப்ரரிகளுக்கும், கம்யூனிட்டி ஹாலில் TV, மற்றும் ரேடியோ, செய்தித்தாள்கள் முதலிய வசதிகள் வேண்டும்.

மகளிர் நலம்

நம் பஞ்சாயத்தில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 51,496 பேர் மகளிர் ஆகும். '' பெண் என்றால் பேயும் இறங்கும் '' என்பார்கள். ஆனால் இக்கண்ணன் தேவன் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் பெண்கள் அல்லும் பகலும் அயராது உழைத்து உழைத்து உருக்குலைந்துள்ளார்களே தவிர அவர்களுக்காக இறங்க யாரும் இல்லை. ஆடவர்களுக்கு நிகராக மகளிரும் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கின்றனர். இப்படி உழைக்கும் மகளிரை ஆடவர்கள் தங்கள் கைப்பாவையாக மாற்றி ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இத்தனை துயரங்களையும் எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்களாகிய மகளிர் சகித்துக்கொண்டிருக்கிறார்கள். நகர்ப்புறப் பெண்கள் கல்வியிலும், கேள்வியிலும் முன்னேறியிருக்கும் நிலையில் இக்காடுகளில் வெயிலிலும், மழையிலும், குளிரிலும் வாடி வதங்கும் பெண்களின் நிலை உயர எந்த வழியும் இதுவரை இல்லை.

ஒரு பெண்ணுக்கு மிகவும் கொடுமையான ஒன்றுதான் ''வரதட்சணை'' என்பதாகும். ''பெண்ணுக்கு பெண்ணே எதிரி என்பதற்கு ஓர் சான்று தான் ''வரதட்சணை''. ஏனெனில் அநேக வீடுகளிலும் மருமகளுக்கு மாமியாரும், மாமியாருக்கு மருமகளும்தான் விரோதிகளாகும் என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. பலவழிகளிலும் பெண்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்பது உண்மையே!

பிரச்சனைகள்:

1. குடிநீர் வசதிகளும், தண்ணீர் வசதிகளும் வெகு தூரத்தில் இருப்பது.
2. கழிப்பறைகள் இல்லாததால் பெண்களின் நிலை மிகவும் கஷ்டமாகும்.
3. தெருவிளக்குகள் இல்லாதால் பெண்கள் இரவில் சுதந்திரமாக நடக்க முடிவதில்லை.
4. போதைப்பொருட்களால் சில ஆண்கள் அடிமையாகி அதனால் பெண்களுக்கு பல தொந்தரவுகள் ஏற்படுகின்றன.
5. மதுபானங்கள் விற்பனையால் பல வழிகளிலும் பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள்.
6. கர்ப்பிணிப்பெண்கள் பல சமயங்களில் சரியான நேரத்தில் முறையான சிகிச்சையளிக்கப்படாமல், கர்ப்பிணிப்பெண் அல்லது குழந்தைகள் மரணமடையும் நிலை உருவாகிறது.
7. பல பெண்களும் சம உரிமை பெற முடியாமல் திக்கித்திண்டாடுகின்றனர்.
8. நல்ல நிலையில் உள்ள பெண்களுக்கே சமுதாயத்தில் மதிப்பு இல்லை. ஊனமுற்றோர், விதவைகள், வயது முதிர்ந்த ஆதரவற்றவர்களுக்கு யார்? உதவுவார்கள்.
9. சமுதாயத்தில் தலை நிமிரிந்து நடக்கவிதவை, முதியோர் ஓய்வூதியக் குறைவும் அவர்களுக்கு இன்னல்களை இழைக்கின்றன.
10. பெண்களைப் படிக்க வைக்கப் பெற்றோர்கள் காட்டும் தயக்கம்.
11. பல பெண்களும் திருமண வயதையடைந்தும் திருமணமாகாத நிலை. அதற்கு மூல காரணமே ''வரதட்சணை '' தான்.
12. பெண்களுக்கு அதிகமாக வேலை வாய்ப்புக் கொடுக்காமல் புறக்கணிக்கப்படுதல்.

பரிகாரம்:

1. குடிநீர் வசதியை வீடுகளின் அருகிலேயே அமைத்தல்.
2. காலனிப் (Colony) பகுதிகளுக்கு முதல் இடம் ஒதுக்குதல்.
3. எல்லா வீடுகளுக்கும் கழிப்பறைகள் கட்டிக்கொடுத்தல்.
4. தெரு விளக்குகளைப் பெண்கள் அதிகமாக நடமாடும் பகுதிகளில் தாராளமாக்கப்படவேண்டும்.
5. மாங்குளம் போன்ற பகுதிகளில் போதைப் பொருட்களின் உற்பத்தியையும், விற்பனையும் கடுமையாகக் கண்டித்துத் தடை செய்ய வேண்டும்
6. தேயிலைத் தோட்டப்பகுதிகளில் விற்பனையாகும் மதுபானங்களை (சாராயம், பிராண்டி) கண்டிப்பாகத் தடை செய்ய வேண்டும்.

7. மகளிர் உடல் நலன்களைப் பரிசோதிக்கவும், சிகிச்சை செய்யவும், தனிப்பட்ட மருத்துவக் குழுக்களை நியமித்துக் கர்ப்பிணிப் பெண்கள், பச்சக் குழந்தைகள் இவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த வேண்டும். குறிப்பாக இடமலைக்குடி, மாங்குளம், சாண்டோஸ் காலனி, வயக்கடவு, பாம்பன்மலை தலையார் டீ கம்பெனி, போன்ற இடங்களுக்கு முக்கியத்துவம் அளித்தல்.
8. அங்கன்வாடி, பாலவாடி போன்ற குழந்தைகள் காப்பக ஊழியர்களை மற்ற மாநில அரசு ஊழியர்களைப் போல அங்கீகரித்து நல்ல ஊதியம் அளிக்க வேண்டும்.
9. உடல், ஊனமுற்றோர், கணவனை இழந்த விதவைகள், வயது முதிர்ந்தவர்கள், ஆதரவற்ற அனாதைகள் முதலிய மகளிர்களுக்கு காப்பகங்கள் ஏற்படுத்துதல்.
10. விதவை, முதியோர் ஆகியவர்களின் ஓய்வூதியத்தை உயர்த்தி அதில் உள்ள நிபந்தனைகளையும் தளர்த்த வேண்டும்.
11. பெண்களுக்கு ஆரம்பக்கல்வி முதல், உயர்கல்வி வரை பயில இலவசக் கல்வி திட்டத்தை அமுல் படுத்தவேண்டும்.
12. குறைந்தது 8 ஆம் வகுப்பு வரை பயின்று வயது வரம்பைத்தாண்டிய ஏழைப்பெண்கள் திருமண உதவித்தொகை வழங்கும் திட்டத்தை அமுல்படுத்தவேண்டும்.
13. பெண்களுக்கென்று தனியான கீழ்க்கண்ட தொழில்களைச் செய்யப் போதுமான பொருள் உதவியும் பயிற்சி நிலையங்களும் கூட்டுறவுச் சங்கங்களும் நிறுவுதல்.
    a) ரெடிமேட் ஆடைகள் தயாரித்தல்
    b) நெசவுத் தொழில்.
    c) அலங்காரச் செடிகளை வளர்த்தல் (Nursery)
    d) ஆயுர்வேத மருந்துச் செலவுகள்
    e) காளான் பயிரிடுதல்
    f) சிற்றுண்டி உணவு வகைகள், ஜாம், குளிர்பானங்கள் தயாரித்தல்.
    g) ஊறுகாய்களை தயாரித்தல்
    h) மேற்கண்ட தொழில்களுக்கு கூட்டுறவுப் பண்டகசாலை நிறுவுதல்.
    i) கீழ்க்கண்ட இடங்களில் வேலைப்பளுவைக் குறைக்கக் குழந்தைகள் காப்பகம் (Creche) நிர்வாகித்தல்.
    j) பெண்களை விற்பனைச் சரக்காக்கிச் செய்யப்படும் ஆபாசமான விளம்பரங்கள், சுவரொட்டிகள், திரைப்படங்கள் போன்றவைகளில் இருக்கும் தணிக்கைச் சட்டத்தை மேலும் கடுமையாக்குதல்.
    k) பெண்களுக்கு இழைக்கப்படும் எல்லாக் கொடுமைகளுக்கும், கடுமையான சட்டம் தீட்டித் தடுக்க வேண்டும்.

கிராம பஞ்சாயத்து – தாய்மார்களின் விபரம்

தாய்மார்கள்	தாய்மார்களின் எண்ணிக்கை	குடும்பக்கட்டுப்பாடு செய்தவர்கள்
1. குழந்தை உள்ளவர்கள்	2438	733
2. குழந்தை உள்ளவர்கள்	4621	4131
3. இரண்டில் கூடுதல் உள்ளவர்கள்	7495	6710
மொத்தம்	14554	11574

கூட்டுறவுச் சங்கங்கள்

தேயிலைப் பயிரும், வியாபாரமும் தான் இங்குள்ள கம்பெனிகளின் கீழ் முக்கியத்தொழிலாக நடைபெறுகிறது. இதன் காரணமாக மற்ற விவசாயமோ, தொழில் துறைகளோ இங்கு அதிகம் இல்லை. இதனால் இத்துறைகளின் கூட்டுறவுச் சங்கங்கள் குறைவாகப் காணப்படுகிறது. இந்தப் பஞ்சாயத்தில் 30க்கும் அதிகமான கூட்டுறவு சங்கங்கள் செயல்படுகின்றன என்றாலும், ஐந்து கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளும், விபரங்களும் மட்டுமே கிடைத்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் பூரணப் புள்ளி விபரங்கள் கிடைக்காததினால் கிடைத்த விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

மூணார் பஞ்சாயத்தில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்கள்

1. மூணார் சர்வீஸ் கூட்டுறவு வங்கி I 209. மூணார் அஞ்சல்.
2. மாங்குளம் சர்வீஸ் கூட்டுறவு வங்கி I 108 மாங்குளம் அஞ்சல்
3. தேவிகுளம் தாலுகா பிளாண்டேசன் ஒர்க்ஸ் கூட்டுறவு சங்கம் K 382 நல்லதண்ணீர் மூணார் அஞ்சல்
4. தேவிகுளம் தாலுகா அரசு ஊழியர் கூட்டுறவுச் சங்கம் I. 134 தேவிகுளம்
5. தேவிகுளம் தாலுகா பிரைவேட் ஸ்கூல் ஸ்டாப் கூட்டுறவுச் சங்கம் K. 376 அடிமாலி.
6. தேவிகுளம் தாலுகா கூட்டுறவு சங்க ஊழியர் கூட்டுறவு சங்கம் I. 16/அடிமாலி.
7. டாடா டீ, ஒர்க்கர்ஸ் வெல்பேர் கூட்டுறவுச் சங்கம் I. 204. மூணார்.
8. இண்டோ சுவிஸ் புரோஜக்ட் ஊழியர்கள் கூட்டுறவுச் சங்கம் K. 308 மாட்டுப்பட்டி.
9. ஹைரேஞ்ச் ஹரிசன் சர்வீஸ் கூட்டுறவுச் சங்கம் I. 153 மூணார்
10. தேவிகுளம் ஹரிசன் சர்வீஸ் கூட்டுறவுச் சங்கம் I. 12, மூணார்
11. தேவிகுளம் பிளாக் பெண்கள் கூட்டுறளச் சங்கம் I. 266. மூணார்.
12. தேவிகுளம் பிளாக் S.C. ண்கள் கூட்டுறவுச் சங்கம் I. 268 மூணார்.
13. தேவிகுளம் தாலுகா வேளாண்மை வளர்ச்சி வங்கி I. 136 அடிமாலி.
14. மூணார் அரசு உயர்நிலைப்பள்ளிக் கூட்டுறவுச் சங்கம் K. 120 மூணார்
15. L.F.G. H.S. கூட்டுறவுச் சங்கம் I. 22. மூணார்
16. கன்னிமலை L.P. ஸ்கூல் கூட்டுறவுச் சங்கம் I. 71 கன்னிமலை.
17. மூணார் அரசு A.T.P. ஸ்கூல் கூட்டுறவுச் சங்கம் I. 77 மூணார்
18. தேவிகுளம் அரசு உயர்நிலைப் பள்ளிக் கூட்டுறவுச் சங்கம் I. 134. தேவிகுளம்.
19. விமலாலயம் U.P. ஸ்கூல் கூட்டுறவுச் சங்கம் I. 34. கிரகாம்ஸ்லாண்டு.
20. நிர்மலா பெண்கள் தொழிற்கூடக் கூட்டுறவுச் சங்கம் (I.N.D.) I/11. நல்லதண்ணி.
21. மூணார் மெட்டல் கிரஷிங் ஒர்க்கர்ஸ் கூட்டுறவுச் சங்கம். K.V. (I.N.D.) /17 மூணார்.
22. நேசனல் கோ-ஆப்-ரேட்டிவ், டைரிப்பாம், K. 140. மூணார்.
23. லெட்சுமி பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கம் I. 32 (D)லெட்சுமி.
24. மூணார் வில்லேஜ் தொழிற்கூடக் கூட்டுறவுச் சங்கம் K.V. (I.N.D.) 49, மூணார்.
25. K.D.H. எம்பிளாயிஸ் கூட்டுறவு சங்கம் K. 242. மூணார்.
26. தேவிகுளம் தாலுகா விற்பனைக் கூட்டுறவுச் சங்கம். அடிமாலி.

பஞ்சாயத்தின் பல பாகங்களுடைய வளர்ச்சிக்கு விவசாயக் கூட்டுறளச் சங்கங்கள், கல்வித்துறையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் இவைகளின் குறைவு ஒரு தடையாக அமைந்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டாலும், ஊழியர்களின் பொறுப்பில்லாததாலும், ஆர்வமின்மையாலும், இச்சங்கங்களின் முன்னேற்றத்திற்கு இடையூறாக அமைகிறது. நிர்வாகத்தின் நேரடித் தலையீடோ, கடுமையான சட்ட நடவடிக்கைகளோ இல்லாததினால் அதிகமானக் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட முடியாமல் போகவும், ஊழல் செய்வதற்குக் காரணமாகவும் அமைகிறது. வேளாண்மைத் துறையில் கூட்டுறவுச் சங்கங்களின் குறைவு விவசாயிகளுக்கு அதிகமான இடையூறுகளை விளைவிக்கிறது.

9ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மாபெரும் வெற்றிக்காக பலவிதத்திட்டங்களை வடிவமைத்துக் கொண்டிருக்கும் இந்நேரத்தில் விவசாயம், தொழில், கல்வி, ஆகிய துறைகளில் புதிய வழிகள் தொடங்கவும்,அதன் மூலம் அதிகமான கூட்டுறவுச் சங்கங்கள் உருவாகவும் செய்யுமென்று எதிர்பார்ப்போம்.

பிரச்சனைகள்:

1. ஊழலும், திருட்டு,
2. இடுக்கி மாவட்ட கூட்டுறவு வங்கியின் மூலம் சங்கங்களுக்குக் கொடுக்கும் கடனுதவிக்கு வட்டிவிகிதம் கூட்டவும், சேமிப்புகளுக்கு வட்டியைக் குறைக்கவும் செய்ததினால், சேமிப்பாளர்களைக் கவர முடியவில்லை.
3. வேளாண்மைக் காரியங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான கடனுதவிகளை அளிக்க பல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் முடிவதில்லை.
4. சேமிப்பாளர்களைக் கவருவதற்குத் தகுந்த நிலையில் சங்கங்களின் நம்பிக்கையைப் பெற முடியவில்லை.
5. கல்வித்துறையில் கூட்டுறவுச்சங்கங்களின் குறைவு.
6. கடனுதவி பெற்றவர்கள் திருப்பியடைப்பதில் காட்டும் உற்சாகமின்மை.
7. புதிய சங்கங்கள் பதிவு செய்வதில் ஏற்படும் காலதாமதம்.

தீர்வுகள்:

1. மூணாரை மையமாக வைத்து விவசாய விளைப்பொருட்களை வாங்கவும், விற்கவும் ஒரு கூட்டுறவு சங்கம் அமைத்தல் எல்லா வார்டுகளிலும் அதன் கிளைகள் அமைத்தல்.
2. பால்க்கூட்டுறவுச் சங்கம் மூணாரை மையமாக வைத்து ஒன்றும், எல்லா வார்டுகளிலும் அதன் கிளைச் சங்கங்களையும நிறுவுதல்.
3. கூட்டுறவுச் சங்கங்களில் வழியாக அங்கத்தினர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் சேவையைப் பற்றிய விழிப்புணர்வு உண்டாக்குதல்.
4. கூட்டு விவசாயம்,மீன், பன்றி, கோழி, ஆடு, பசு, எருமை முதலியனவை வளர்ப்பதற்கும், ஆலோசனை வழங்கவும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க வேண்டும்.

5. காளான உற்பத்திக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க வேண்டும்.
6. தொழில் உற்பத்திப் பொருட்கள்,கைவினைப் பொருட்கள் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கங்கள் அமைக்க வேண்டும்.
7. சுற்றுலா வளர்ச்சிக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க வேண்டும்.
8. கல்வித் துறைகளில் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்க வேண்டும்.
9. பட்டுப்பூச்சி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம், விவசாயக் கூட்டுறவுச் சங்கம், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் முதலியனவை ஏற்படுத்த வேண்டும்.
10. மக்களிடம் சேமிப்புப் பழக்கத்தை வளர்க்கக் கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களையு , நம்பிக்கை ஏற்பட கூட்டு நடவடிக்கைகளும், ஊழியர்கள் நேர்மையாக நடக்கவும் வேண்டும்.

மூணார் கிராம பஞ்சாயத்து கூட்டுறவு சங்கங்களின் செயல்முறை

சங்கத்தின் பெயர்	பதிவு எண்	வைப்பு நிதி	கொடுத்துள்ள கடனுதவிகள்							சீட்டு	லாபம்
			மாவட்ட வங்கி	தனது நிதி	நகை அடகு	வியாபார கடனுதவி	திட்ட உதவி	தொழில் கடனுதவி	வீடுகட்ட கடனுதவி		
தேவிகுளம் தாலுகா அரசு ஊழியர்கள் கூட்டுறவு சங்கம், தேவிகுளம்	I. 134	562001.10	4141515	2124713	-	-	-	-	-	20000-1 10000-4	227188.45
மூணார் சர்வீஸ் கூட்டுறவு வங்கி, மூணார்	I. 209	2387090.76	230600	289880	1046275	797100	-	-	-	25000-2 20000-1	9826.25
தேவிகுளம் தாலுகா கூட்டுறவு வேளாண்மை கிராம வளர்ச்சி வங்கி, அடிமாலி.	I. 136	372252.29	1500000.17	-	-	-	16200000.90	8700000.30	11200000.67	-	169523.37
தேவிகுளம் தாலுகா கூட்டுறவு ஊழியர்களின் கூட்டுறவு சங்கம், அடிமாலி.	I. 161	666130.50	535.822	676000	-	-	-	-	-	250000-1	26085.51

மூணார் கிராம பஞ்சாயத்து கூட்டுறவு சங்கங்களின் பொது விபரங்கள்

சங்கத்தின் பெயர்	பதிவு எண்	செயல்படும் தகுதி	அங்கங்கள்	பங்குகள்	பங்கு மூலதனம்	செயல்படும் முறை	ஊழியர்கள்
தேவிகுளம் தாலுகா அரசு ஊழியர்கள் கூட்டுறவு சங்கம், தேவிகுளம்	I. 134	தேவிகுளம் தாலுகா	1469	121691	1216910	கடனுதவி வைப்பு நிதி	2
மூணார் சர்வீஸ் கூட்டுறவு வங்கி, மூணார்	I. 209	மூணார் பஞ்சாயத்து (மாங்குளம் தவிர)	A -1045 B -548	24195	241950	- do -	3
தேவிகுளம் தாலுகா கூட்டுறவு வேளாண்மை கிராம வளர்ச்சி வங்கி, அடிமாலி.	I. 136	தேவிகுளம் தாலுகா	14679	–	10957508	- do -	17
தேவிகுளம் தாலுகா கூட்டுறவு ஊழியர்களின் கூட்டுறவு சங்கம், அடிமாலி.	I. 161	- do -	235	141230	14123	- do -	1
நிர்மலா மகளிர் தொழில் கூட்டுறவு சங்கம், மூணார்.	C IND (I) I	- do -	76	339	33900	தொழில்	–
டாடா டீ ஒர்க்ஸ் வெல்பர் கோ-ஆப்பரேட்டிவ் சொசைடி	I. 161	- do -	5111	18,6765	18,67650	கடனுதவி	–

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் சமூக மேம்பாடு

தேவிகுளம் கிராமத்தில் வசிக்கும் மொத்த மக்கள் தொகையில் அதிகமான மக்களும் 85% தாழ்ததப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தவர்களே என்பது கணக்கு. இந்து பறையன், இந்து பள்ளன், இந்து சேரமன், சக்கிலியன், முதுவான், மன்னான் போன்ற இனத்தவர்களே அதிகமாக வாழ்கிறார்கள். இவர்கள் அனைவரும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தவர்களே. மூணார் பஞ்சாயத்திற்குட்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் தொகையில் 49,833 பேர் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள். மாங்குளம் மற்றும் இடமலைக்குடி, சாண்டோஸ்குடி போன்ற பகுதிகளில் பழங்குடி இனத்தவர் சுமார் 5072 பேர் வசிக்கிறார்கள். இப்பகுதியில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கு அரசு மூலமாகவோ மற்றவகையில் கூடியோ வழங்கப்படும் எந்த ஒரு சலுகையும் அவர்களுக்கு முழுமையாக போய் சேரவில்லை என்பதே உண்மை. அரசாங்கத்தின் மூலம் வழங்கப்படும் நிலமோ வீடு போன்ற கட்டிடங்களோ அவர்களுக்கு கிடைக்காமல் போவதற்கு முக்கிய காரணம் அதற்குரிய அத்தாட்சிகள் அவர்களிடமிருந்து கிடைக்காமல் போவதே. அதற்குரிய அத்தாட்சிகள் அவர்களுக்கு (ஜாதி, மதம், வருமானம்) முறையாக அரசு மூலம் வழங்குவதில் உள்ள இடர்பாடுகளும் ஒரு முக்கிய காரணமாகும். மற்ற மதங்களில் இருந்து கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய மக்கள் 15 வார்டுகளிலும் பரவலாக உள்ளனர். தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் வார்டுகளில் இருந்தபோதும் பழங்குடி இனத்தவர்கள் சில (ST) பகுதிகளில் மட்டுமே வசிக்கிறார்கள். மாங்குளம், இடமலைக்குடி, லக்கம்குடி, சாண்டோஸ் காலனி, வயக்கடலை, தேவிகுளம் போன்ற குடிப்பிரதேசங்களில் முதுவான், மன்னான் போன்ற இனத்தவர்கள் அதிகம் இருந்தாலும் மலை அரையன் இனத்தில் பட்டவர்கள் சிறிய அளவில் வசித்து வருகின்றனர்.

பிரச்சனைகள்:

1. இப்பகுதியில் வசிக்கும் மொத்த ஜனத்தொகையில் 85% மக்கள் தாழ்த்தப்பட்ட இனத்தில் உள்ளவர்கள் என்றாலும் அதிலும் 95% மக்கள் கல்வியறிவில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர்.
2. இப்பகுதியில் வாழும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களில் 95% சதவீத மக்களுக்கு நிலமோ சொந்த வீடோ இல்லை.
3. அரசு அவர்களின் மேம்பாட்டுக்காக வழங்கும் சலுகைகள் (உதவித்தொகை, கடனுதவி) முறையாக அவர்களைச் சென்றடைவதில்லை.
4. இவ்வின மக்களின் குழந்தைகளுக்காக மாணவியர் இல்லம் ஒன்று மூணாறில் இயங்கி வருகிறது. இப்பகுதியில் பயிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு எந்தவித வசதியும் கிடையாது.
5. பழங்குடி இனத்தில் பட்ட மாணவ மாணவியர் பயில ஒரே ஒரு துவக்கப்பள்ளி மட்டுமே இப் பஞ்சாயத்தில் இடமலைக்குடியில் அமைந்துள்ளது. உயர்கல்விக்கு எந்தவித வாய்ப்பும் இப் பஞ்சாயத்தில் அமையவில்லை.
6. இம்மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்துவதற்கு அரசாங்க நடவடிக்கைகள் எதுவுமே பிரயோஜனபடுத்தப்படவில்லை.
7. இவ்வின மக்கள் வசிக்கும் பகுதிகளில் குடிதண்ணீர் போக்குவரத்து, ஆரோக்கியம் முதலியவை திருப்திகரமாக, அமையவில்லை. இடமலைக்குடியில் வளப்பொருட்கள் (ஏலம்,தேன், பட்டை)இடைத் தரகர்கள் குறைந்த விலைக்கு வாங்கி மக்களை ஏமாற்றுகின்றனர்.

வாய்ப்புகள்:

1. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் கல்வி நிலையங்கள் உடனே ஆரம்பிக்க வேண்டும்.

2. தாழ்த்தப்பட்ட இன மக்களில் நிலமோ, வீடோ இல்லாதவர்களுக்கு அந்த சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.

3. அரசு இவர்களுக்கு வழங்கக்கூடிய சலுகைகள் முழுமையாக அவர்களை சென்றடைய வேண்டிய வழிகளை நெறிப்படுத்துதல் வேண்டும்.

4. தாழ்த்தப்பட்ட இன மாணவர்களுக்கு விடுதி ஒன்றும் பழங்குடி இனத்தில் உள்ள மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் தனித் தனியே விடுதிகள் அமைக்க வேண்டும்.

5. இவ்வின மக்களின் பிள்ளைகளுக்காக தங்கிப் படிக்க வசதியுள்ள உயர்நிலைப்பள்ளி ஆரம்பிக்க வேண்டும்.

6. குடிப்பிரதேசங்களில் போக்குவரத்து, குடிநீர், எரிபொருள் ஆகிய அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டும்.

7. குடிப்பிரதேசங்களில் நடமாடும் மருத்துவ வசதி ஏற்பாடு செய்து தர வேண்டும்

8. மூணார் அரசு கல்லூரியில் படிக்கும் தாழ்த்தப்பட்ட, ஆதிவாசி மாணவ மாணவியருக்கு விடுதி வசதி செய்து தர வேண்டும்.

9. SC/ST மக்களுக்கு கோழி, பன்றி, கன்றுகாலிகள் வளர்ப்பதற்கு பண உதவி செய்ய வேண்டும்.

10. எல்லா பழங்குடி காலனிகளிலும் சூரியசக்தி விளக்குகள் நிறுவ வேண்டும்.

11. இடமலைக்குடி போன்ற பகுதிகளில் இருந்து கிடைக்கும் விளைப்பொருட்கள் (தேன், ஏலம், கிராம்பு, பட்டை, ஜாதிக்காய்) மற்றும் மருந்து மூலிகைகள் சேகரிக்க ஒரு கூட்டுறவுச் சங்கம் வேண்டும். அது ஔஷதி மூலம் சேகரித்து நல்ல முறையில் நடத்திக் கொண்டுபோக திட்டம் தயாரிக்க வேண்டும்.

மூணார் கிராம பஞ்சாயத்து தாழ்த்தப்பட்ட–பழங்குடியினரின் ஜனத்தொகை

வரிசை எண்	இடம்	S.C.	S.T.
1.	மாங்குளம்	2030	2537
2.	கடலாரி	895	–
3.	ராஜமலை	758	–
4.	நயமக்காடு	716	–
5.	தலையார்	832	–
6.	வாகுவாரை	3710	135
7.	சட்டமூணார்	1492	162
8.	குண்டுமலை	1210	–
9.	சோத்துப்பாறை	760	–
10.	தென்மலை	1189	–
11.	கன்னிமலை	1434	–
12.	சோலைமலை	618	–
13.	லட்சுமி	1976	–
14.	கல்லார்	1365	–
15.	நல்லதண்ணி	3452	23

வரிசை எண்	இடம்	S.C.	S.T.
16.	பெரியவாறை	1545	–
17.	மாட்டுப்பெட்டி	1583	–
18.	மாட்டுப்பெட்டி டாம்	104	–
19.	நெற்றிகுடி	988	–
20.	அருவிக்காடு	1080	189
21.	குண்டளை	985	–
22.	செண்டுவாரை	1615	–
23.	சிட்டிவாரை	1615	–
24.	எல்லப்பட்டி	1955	53
25.	சைல்ணட்வாலி	1748	–
26.	கூடார்விளை	832	–
27.	தேவிகுளம் எஸ்டேட்	2038	–
28.	இராம்ஸ்லாண்ட்	985	–
29.	மூணார் டவுண்	8035	58
30.	சிவன்மலை	2583	38
31.	மூணார் எஸ்டேட்	894	12
32.	சொக்கநாடு	2553	–
33.	தேவிகுளம் டவுண்	632	28
34.	தேவிகுளம் ரேஞ்ச்	15	1837
	மொத்தம்	49,833	5072

மூணார் கிராம பஞ்சாயத்து மாங்குளத்தில் பழங்குடியினரின் காலனி விபரங்கள்

வரிசை எண்	காலனியின் பெயர்	குடும்பங்களின் எண்ணிக்கை	ஜனத்தொகை
1.	கம்பெனிக்குடி	42	199
2.	தாளுகண்டம்	150	700
3.	கண்டத்திகுடி	7	26
4.	வேலியாம்பாறை	55	269
5.	வேலியாம்பாறை	37	100
6.	சிக்கணம்குடி	40	180
7.	பெருமாள்குடி	6	32
8.	பாறக்குடி	13	70
9.	சிங்குகுடி	38	226
10.	கள்ளகுட்டிகுடி	15	75
11.	சேவல்குடி	46	182
12.	கோழிவிளக்குடி	30	126
13.	மாங்காபாறகுடி	13	62
14.	கோமுயிளக்குடி	20	96
	மொத்தம்	512	2343

மூணார் பஞ்சாயத்து 1 to 15 அடங்கிய வார்டுகளில் 85 சதமானம் ஹரிஜன இனத்தை சேர்ந்த வர்கள் அதில் 60 சதமான ஜனங்கள் 1 செண்டு இடம் கூட இல்லாதவர்கள் இந்த இனத்தை சேர்ந்த வர்களுக்கு டாடா, மாங்குளம் போன்ற பகுதிகளில் உள்ள மிச்ச பூமியை ஆளுக்கு 4 செண்டு இடமும் வீடும் வழங்க வேண்டும்.

படித்த இளைஞர்களுக்கு சிறு தொழில் தொடங்குவதற்கு

1. வர்க்சாப்
2. சூப்பர் மார்க்கெட் டெய்லரிங்
3. பிளவர் மில்
4. செருப்பு கம்பனி
5. பிளாஸ்டிக் கம்பெனி
6. அலுமினியக் கம்பெனி
7. சிமெண்டு செங்கல் கம்பெனி
8. கரிப்பவுர் கம்பெனி
9. ஈத்தை, பிரம்பு கொண்டு கூடை பின்னும் தொழிற்சாலை
10. நெல்லிக்காய், காய்கறி கொண்டு ஊறுகாய் தயாரிக்கும் கம்பெனி
11. பாலினால் சாக்லட் தயாரிக்கும் பாக்டரி
12. கிராண்டீஸ் மரம் கொண்டு துணிகள் தயாரிக்கும் கம்பெனி
13. பிரிண்டிங் பிரஸ் மலையாளம்1; தமிழ்1.
14. தீப்பெட்டி கம்பெனி
15. மாட்டுத் தீவனம் உண்டாக்கும் கம்பெனி
16. பழங்கள் ஸ்டாக் வைக்க கோல்டு ஸ்டோரேஜ்
17. இரும்பு தயாரிக்கும் கம்பெனி
18. உள்ளன் அயிட்டம் தயாரிக்கும் கம்பெனி

50 கார், 50 சீப், 250 ஆட்டோ

நல்ல இனப்பசுக்கள் 4 ஆயிரம்

லைபரரி 15, கம்யூனிட்டி ஹால் – 15,

+1, +2, படிக்க பள்ளிக் கூடங்கள்

ஹரிஜன ஹாஸ்டல்

சோலார் மின்சாரம் தயாரித்தல்

ஸ்போர்ட்ஸ் கிரவுண்டு

உடற்பயிற்சிப் பள்ளிகள்

வருமான மார்க்கம்

மூணார் பஞ்சாயத்து பரப்பளவில் மிகவும் பெரிய அளவில் இருந்த போதிலும், வருமான அளவில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது என்பதை வரவு, செலவுக் கணக்குகள் மூலமாக அறிய முடிகிறது. கட்டிடங்களின் வரிவசூல் செய்வது என்பது வாடிக்கையாக நடந்து கொண்டிருக்கிறது அதில் நல்ல மாற்றம் கொண்டு வந்து வருமானத்தின் வாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும். டாடா டீக் கம்பெனியின் நிர்வாகத்தின் கீழ் தான் பஞ்சாயத்தின் முக்கிய பாகங்களான மூணார்டவுன், சந்தை தேயிலைத் தோட்டங்கள் முதலியவைகள் இயங்கி வருகிறது. பஞ்சாயத்தில் அதிக மக்கள் தொகையை உடையதாக இருப்பினும் கூடுதல் மக்களும்,டாடா டீக் கம்பெனி, மலையாளம் பிளாண்டேசன், தலையார் டீக் கம்பெனி, இவைகளின் லயன் (குடியிருப்பு)களிலேயே வாழ்கின்றனர். அவர்கள் வாழும் குடியிருப்புகளுக்குரிய வரிப்பணம் மிகக் குறைவாகக் கிடைக்கிறது.

மூணார் டவுணிலுள்ள கடைகள், சந்தைகள், வீடுகள் ஆகியவற்றின் வரிகளை டாடா டீக்கம் பெனிதான் வசூலித்துக் கொண்டு அதிலிருந்து ஒரு சிறிய சதவீதத்தை மட்டும் பஞ்சாயத்திற்கு வரியாக செலுத்துகிறது. பஞ்சாயத்திற்கு கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு கீழே தரப்பட்டுள்ளவர்களுக்கு ஊதியம் பராமரிப்பு ஆகிய செலவுகளுக்குக் கூட பற்றாக்குறையாகவே இருக்கிறது.

1. பஞ்சாயத்து ஊழியர்களின் ஊதியம்
2. துப்புரவுச் தொழிலாளர்களின் ஊதியம்
3. லாரி, ஜீப், ஆம்புலன்ஸ் போன்ற ஓட்டுநர்களின் ஊதியம் இவைகளின் பராமரிப்புச் செலவு.
4. கழிப்பிடங்கள், சிறுநீர் கழிப்பறைகள், தெருக்களைச் சுத்தப்படுத்துதல், தெரு விளக்குகள் அமைத்தல்.

பிரச்சினைகள்:

1. குடியிருப்புகளில், கட்டிட வரிகள் மிகக் குறைவாக இருப்பது.
2. மூணார் சந்தையிலுள்ள கடைகளின் வரிகள் மிகக் குறைவாகக் கிடைக்கிறது.
3. மூணார் சந்தையிலுள்ள கடைகளின் வரிகள் மிகக் குறைவாகக் கிடைக்கிறது.
4. வழி நடப்பாதையோர்க் கடைகளின் வரிவசூல் கிடைக்காதது.
5. ரிசோர்டு, டூரிஸ்ட் கார், பஸ்கள் முதலியவற்றிலிருந்து எந்தவித வரி வசூலும் இல்லை.
6. இது ஒரு சுற்றுலா மையமாக இருப்பினும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் எந்தவித கேளிக்கை முறைகளும் இல்லை.
7. பஞ்சாயத்தின் அடிப்படையில் எந்தவித வருமானமும் கிடைக்க எந்தவிதத் தொழிலும் இல்லை.
8. பல காண்டிராக்டும, காண்ட்ராக்டர்களிடம் விடுவதால் இடைத்தரகர்கள் லாபம் பெறுதல்.

பரிகாரம்:

1. தேயிலைத் தோட்டங்களிலுள்ள எல்லா இடங்களிலும் ஊழியர்கள் குடியிருப்புகள், மேனேசர் பங்களாக்கள், பேக்டரிக் கட்டிடங்கள், ஆபீஸ் கட்டிடங்கள், தொழிலாளர்களின் குடியிருப்புகள், போன்ற கட்டிடங்களுக்கு நியமனம் வரிவசூல் பிரிக்கப்பட வேண்டும்.

2. மூணார் சந்தையை பஞ்சாயத்து தன் நிர்வாகத்தில் எடுத்து, சந்தையை நவீன முறையில் சீரமைத்து வாடிக்கையாளர்களுக்கு வாடகைக்கு விட்டு வருமானத்தைப் பெருக்கலாம்.

3. வழியோரங்களிலும், நடைபாதைகளிலும் வியாபாரம் செய்யவும் வியாபாரிகளுக்கு ஒரு ஷாப்பிங் காம்பளக்ஸ் (Shopping Complex) நிர்வகித்து அதை அவர்களுக்கு வாடகைக்குக் கொடுத்து வருமானத்தைக் கூட்டலாம்.

4. ரிசோரிட் (Resort) டூரிஸ்ட் (Tourist) நிலையங்கள் நிர்வாகித்து அதன் மூலம் வருமானம் உண்டாக்குதல்.

5. சந்தைகளிலிருந்து கிடைக்கும் கழிவுப்பொருட்களை கம்போஸ்ட் உரங்களாக மாற்றி அதை விவசாயத்திற்கு நியாயமான விலைக்கு விற்பனை செய்து வருமானம் உண்டாக்கலாம்.

6. ரோப்வே, ரயில் வண்டி முதலியவைகள் நிர்மானித்து அதன் மூலம் வருமானம் உண்டாக்கலாம்.

7. டூரிஸ்ட் சென்டர் (Tourist Centre) உண்டாக்கி அதன் வழியாக சுற்றுலாப்பயணிகளின் கெய்டுகள் (Tourist Guide) குதிரைச்சவாரி, படகுச்சவாரி, மலையேறுதல் போன்ற வசதிகளை செய்து வருமானம் உண்டாக்கலாம்.

8. மின்சாரம் எடுக்க வசதியான இடங்களைக் கண்டறிந்து சிறிய நீர் மின் திட்டங்களைச் செயல்படுத்தி வருமானம் உண்டாக்கலாம்.

9. கூட்டுறவு முறையில் விவசாயம் (காளான், ஸ்டாபெரி (Straw Berry) காய்கறிகள், பால்பண்ணை கைவினைப் பொருட்கள் நிர்மானம் போன்ற குடிசைத் தொழில்களை நடத்தி வருமானம் உண்டாக்கலாம்.

10. கிரகாம்ஸ்லாண்ட் ரோட்டிலுள்ள சுடுகாட்டைத் தன் வசப்படுத்தி அங்கே பிணங்களை எரிக்க மின்சார சாதனங்களைப் பயன்படுத்துதல்.

11. சாணத்தைப் பயன்படுத்தி எரிபொருள் தயாரித்து பஞ்சாயத்தின் மூலமாக விநியோகம் செய்து வருமானம் உண்டாக்கலாம்.

12. மூணார் பஸ் நிலையத்தின் அருகே டூரிஸ்ட் லாட்ஜ்கள் கட்டி அதன் மூலம் வருமானம் உண்டாக்கலாம்.

13. சாலைகளைச் செப்பனிடுதல், மருத்துவமனை, பள்ளிக்கூடம் நிர்வாகித்தல் போன்றவைகளை சமூக சேவையின் உதவியுடன் செய்தல்.

14. கையாலை நிர்மானம், (மண்ணரிப்பைத் தடை செய்தல்) ரிவிட்மெண்ட்கள் கட்ட அரசு உதவித் தொகையோடு மக்களின் உடல் உழைப்பும் சேர்த்து அவை நடைபெற்றால் அதனால் வருமானம் கிடைக்கும்.

15. கிரடிட் யூனியன் (Credit Union) உண்டாக்கி சேமிப்பு முறையில் பங்குத் தொகைகளைப் பெற்று, அதன் மூலம் எல்லாவார்டுகளிலுள்ளவர்களுக்கு குறைந்த வட்டியில் கடனுதவி செய்து, அதன் மூலம் வருமானம் உண்டாக்கலாம்.

16. காண்டிராக்ட் (Contract) முறையை மாற்றி, பஞ்சாயத்தே நேரடியாக செயல்படும் போது வருமானம் உயரும்.

மூணார் கிராம பஞ்சாயத்து வரவு பற்றிய விபரங்கள்

விவரம்	மதிப்பீடு	பிரித்தது	பாக்கி
கட்டிட வரி	981280	624631	356649
தொழில்வரி	942413	584293	353120
கேளிக்கை வரி	72796	72796	72796
துணைக் கேளிக்கை வரி	44093	44093	44093
காட்சிவரி	2786	2786	2786
காட்சிவரியில் சர்சார்ஜ்	702	702	702
சந்தை வரவு	12425	12425	12425
நிலவரி	97602	97602	97602
லைசன்ஸ் பீஸ்	8078	8078	8078
கட்டிடத்துவரி சர்சார்ஜ்	164201	164201	164201
சொத்து கைமாற்ற வரி	120990	120990	120990
சர்க்கார் கிராண்ட் தவிர மற்ற வரவுகள்	1314010	1314010	1314010
சேமிப்பு	221185	221185	221185
மொத்தம்	3982561	3267792	714769

மூணார் கிராம பஞ்சாயத்து – செலவு பற்றிய விபரங்கள்

விபரம்	தொகை
நிர்வாகம்	1279862.00
பொதுப்பணி	634097.00
கல்வி	20098.00
நீர் வினியோகம், ஓடைகள், பொது ஜன ஆரோக்கியம்	90958
தெருவிளக்குகள்	17403200
மற்றவை	811498.00
மொத்தம்	3010535.00

மூணார் கிராம பஞ்சாத்தின் செயல்முறை அறிக்கை

மூணார் கிராம பஞ்சாயத்தின் புதிய ஆட்சியாளர்கள் 1995 அக்டோபர் 2ஆம் தேதி பொதுமக்களின் முன்னிலையில் மூணார் பஞ்சாயத்து கம்யூனிப்பு ஹாலில் வைத்து சத்திய பிரமாணம் எடுத்துக் கொண்டு பொறுப்பேற்றார்கள். ஊழல் அற்ற நேர்மையான, அரசியல் பாகுபாடின்றி பொதுமக்களின் நன்மையும், உயர்வையும் மட்டும் கண்க்காக்கிச் செயலாற்றுவோம் என்ற லட்சியத்தோடு பல விதமான வளர்ச்சித் திட்டங்களுக்கும் இந்த புதிய ஆட்சிக்கொரு தொடக்கம் குறித்துள்ளது.

9–ம் ஐந்தாண்டுத் திட்டம் மக்களின் திட்டமாக அறிவிக்கப்பட்டபின் ஒரு புதிய உணர்வுடன் மக்கள் பிரதிநிதிகளும் பொதுமக்களும் உற்சாகத்துடன் அதை வரவேற்க ஆயுத்தமாயுள்ளனர். எண்ணிலடங்காத் திட்டங்கள் கிராம சபைகளின் மூலம் உயிர்பெற்றுள்ளது. பொதுமக்களின் ஒத்துழைப்போடு மூணார் பஞ்சாயத்தில் பல வளர்ச்சித் திட்டங்களையும் நடைமுறைப் படுத்த முடியும் என்பதற்கு இக் குறுகிய அளவில் இங்கு பூர்த்தியாகியதும், தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதுமான திட்டங்களே எடுத்துக்காட்டாகும்.

1995 அக்டோபர் 2ம் தேதி பிறகு மூணார் பஞ்சாயத்தில் செயல்படுத்திய பல வளர்ச்சித் திட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

1. 9ம் வார்டில் மூணார் காலனியில் 1500 அடி ஆழத்தில் பைப் மூலம் குடிநீர் வினியோகம்
2. 9ஆவது வார்டில் மூணார் காலனியில் 1 லட்சம் ரூபாய் செலவில் குடிநீர்த்தொட்டி, மோட்டார் அறை, கிணற்றை மூடி தண்ணீரைச் சுத்தப்படுத்துதல் முதலிய திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளது.
3. இக்காநகர் கிணறு, சாண்டோஸ் காலனி கிணறு, மாங்குளம் குடிநீர் தொட்டி முதலியவைகளைச் சுத்தப்படுத்தி உபயோகப்படுத்தக்குரியாக்கப்பட்டது. இடமலைகுடி அந்தோணியார் காலனி, காப்பி ஸ்டோர், சட்டமூணார் முதலிய பகுதிகளில் குடிநீர்க் குழாய்கள் செப்பனிடும் வேலை நடத்தப்பட்டது.
4. சோத்துப்பாறை, சிட்டு வரை, லட்சுமி, நாகர்முடி, சோலைமலை முதலிய பகுதிகளில் புதிய மின் இணைப்பு.
5. மூணார் டவுண் டாக்ஸி ஸ்டாண்டில் மண், மெட்டல் விரித்தல்.
6. மூணார் டவுனில் புதிய கக்கூஸ், சிறுநீர்க் கழிப்பிடம் கட்டி முடிக்கப்பட்டது.
7. 3ஆம் வார்டில் அருவிக்காடு ரோடு தார் இடப்பட்டது.
8. 5, 6ஆவது வார்டுகளை இணைத்து ODK ரோடு தார் போடப்பட்டது.
9. மூணார் காலனியில் பிளாக் பஞ்சாயத்து வழி 18 கக்கூஸ்கள் அமைக்கப்பட்டது.
10. மூணார் டவுனில் மாமிசக்கடைகளோடு சேர்ந்து மாட்டுப்பெட்டி ரோட்டை இணைக்கும் நடைபாலம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது.
11. அன்எய்டு பண்டு உபயோகித்து எல்லா வார்டுகளிலும் மினி வினியோகம் செய்ய 25 கான்கிரீட் தூண்கள் உண்டாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
12. அன்எய்டு பண்டு உபயோகித்து பஞ்சாயத்து ஆபீஸ் பின்புறம் வாகன ஷெட் உண்டாக்கப்பட்டது.
13. JRY ஸ்கீமில் டவுனிலும் பல பாகங்களிலும் ரூபாய் செலவில் வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

14. மூணார் பஞ்சாத்தில் குடிநீர் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் 1980 ல் ஆரம்பிக்கப்பட்ட வாட்டர் அதாரிடியின் குடிநீர் வினியோகத்திட்டம் மந்தநிலையில் நடப்பதைக் கண்டித்து, தேவிகுளத்தில் உள்ள வாட்டர் அதாரிட்டி ஆபீஸ் முன் 500 க்கும் அதிகமான பெண்கள் 9ம் வார்டு மெம்பர் திருமதி ஆனி ரோஸின் தலைமையில், ஊர்வலமும், தர்ணாப் போராட்டமும் நடத்தினார்கள். இதன் பலனாகத் திட்டத்தின் செயல்பாடுகள் முளுடுக்கிவிடப்பட்டுள்ளது.

1996 நவம்பர 1ம் தேதி கேரள பிரவிதினத்தில் பொதுமக்களின் ஒத்துழைப்போடு ஆரம்பிக்கப்பட்ட வளர்ச்சிப்பணிகள்

வார்டு எண்	திட்டப்பணிகள்	துவங்கிவைத்தவர்
1.	SP முதல் செண்டுவரை சாலை அமைத்தல்	வார்டுமெம்பர் காந்திமுத்தையா
2.	சிட்டிவரை OC டிவிஷன் முதல் பழத்தோட்டம் நார்த் டிவிஷன் வரை சாலை மைத்தல்	துணைத்தலைவர் A.P. சார்லி.
3.	8 மைல் முதல் அருசிக்காடு டாப் டிவிசன் வரை சாலை பழுதுபார்த்தல்	வார்டு மெம்பர் ராதாகிருஷ்ணன்
4.	மருத்துவமனை முதல் 1ம் டிவிசன் கேன்டீன் வரை சாலை பழுதுபார்த்தல்	வார்டு மெம்பர் R.V. பழனி
5.	ALP ஸ்கூல் – சுற்றுப்புறம் சுத்தப்படுத்துதல்	வார்டுமெம்பர் சரோஜா நடராஜன்
6.	தேவிகுளம் உயர்நிலைப்பள்ளி சுற்றுப்புறம் சுத்தப்படுத்துதல்	வார்டு மெம்பர் சுசீலா மனோகரன்
7.	லைபரரி, பள்ளிக்கூடம் சுற்றுப்புறம் சுத்தப்படுத்துதல்	வார்டுமெம்பர் M.Y. அவுசேப்
8.	சிலன்மலை லட்சுமி ரோடு பழுதுபார்த்தல்	வார்டு மெம்பர் விஜயலட்சுமி
9.	1. மூணார் டவுண் கக்கூஸ், சிறுநீர்க் கழிப்பிடம் திறந்து வைத்தல்	தலைவர் G. சோலைச்சாமி
	2.சோடியம் வேப்பர் விளக்குகள் நிறுவுதல்	பிளாக் உபதலைவர் G. மோகன்குமார்
	3.மூணார் காலனி – குடிநீர் வினியோகத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டு விழா	தலைவர் G. சோலைச்சாமி
	4.மூணார் காலனி– இக்கா நினைவு ஆரம்பப்பள்ளி சாலை –Soiling & netaling	வார்டுமெம்பர் ஆனிரோஸ்
10.	கின்டர்கார்டன் ஸ்கூல் துவக்கம்	தலைவர் G. சோலைச்சாமி
11.	காய்கறிவிதை வினியோகம் அடுக்களைத் தோட்டம் தொடக்கம்	மாவட்ட பஞ்சாயத்து தலைவர் ஷீலாஸ்டீபன்
12.	இடமலைக்குடி நடைபாதை அமைத்தல்	வார்டு மெம்பர் அர்ஜீன் ஜெயசிங்
13.	ஸ்டேடியம் ரோடு பழுதுபார்த்தல்	லார்டு மெம்பர்
14.	லக்கம்குடி நடைபாதை சாலையாக அமைத்தல்	தலைவர் G. சோலைச்சாமி
15.	சோத்துபாறை உயர்நிலைப்பள்ளி சுற்றுப்புறம் சுத்தப்படுத்துதல்	லார்டு மெம்பர் சுருளி.

முடிவுரை

கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட பலவளர்ச்சித் திட்டங்களில் ஏற்பட்ட குறைகளையும், நிர்வாகச் சீர் கேடுகளும் ஏற்பட்டது என்பதை வருத்தத்துடன் ஏற்றுக் கொண்டு இது போன்ளில குறைபாடுகள் இனி ஏற்படாவண்ணம் இனிக்கிடைக்கும் ஒதுக்கீட்டுத் தொகைகளை சரியான நேர்க் மையான முறையில் பயன்படுத்தவும். அவ்வொதுக்கீடுகளின் முழுப்பங்கும் பொது மக்களுக்கு உதளிவும் வகையில் செயல்படுத்தும் நோக்கத்தோடு தான் முதல் மாவட்ட நிலைப்பயிற்சி முகாம் மிகச் விசிறப்பாக நடைபெற்றது. அதன் பின் பஞ்சாயத்து மாவட்டத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமில் பங்கு பெற இப்பகுதியிலுள்ள வல்லுநர்கள், அனுபவசாலிகள் ஆகியோரை தேர்ந்தெடுத்து வெற்றிகரமாகக் கிராம சபைகளை நடத்த முடிந்தது.

மக்ணி இரண்டாவது முறையாக நடத்தப்பட்ட பயிற்சி முகாமின் மூலமாக வளர்ச்சித் திட்ட அறிக்கைபே யை எப்படி உருவாக்க வேண்டும் ? என்பதைப் பற்றிய வழிமுறைகள் ஆராயப்பட்டது. இதைத்தொற்கு ர்ந்து நடைபெற்ற D.R.P.கள் L.R.P.கள் கூட்டத்தில் D.R.P. L.R.P.கள்வீனர்கள் தேர்ந்தெடுக்கப்ங்ச பட்டது. அவர்களின் மூலமும் L.R.P.களின் உதவியுடனும் வார்டுகளில் ''ஆய்வுப்பயணம்'' மேற்கொள்ளப்பட்டது. அப்போது புள்ளிவிவரக் கணக்குகள் சேகரிக்கவும், ''வளர்ச்சித்திட்ட அறிக்கை'' உருவர்க்குவதற்குத் தேவையான ஆயுத்தப்பணிகள் நடத்தப்பட்டது.

ங்ச சரித்திரம், இயற்கைவளம், நீர் நிலைகள், சக்தியின் உறைவிடங்கள், மண்ணைப் பொன்னாக்கும் விவசாய விளைப்பொருட்கள் 'பொன் மழை'' பொழியும் ''சுற்றுலாத்துறை'' மூலம் கிடைக்கும் வருமானம் , மனித வளம், வனங்களும் அவற்றின் சொத்தும், பற்றிய காரியங்களைக் கூட்டம் கூடி விரிவாக ஆராயப்பட்டது. வல்லுநர்கள் நடைமுறைப்படுத்தக்கூடிய திட்டங்களை விரிவாக விளக்கினார்.

இந்த வளர்ச்சித் திட்ட அறிக்கையின் உட்கருத்துக்களைக் கொண்டு ஆராயப்போவோமானால், இத்திட்டம் இப்பூமியைச் சொர்க்க பூமியாக மாற்றும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால் இத்திட்டங்களைச் செயல்படுத்த மிகப்பெரிய மூலதனம் தேவை என்பதும் தெள்ளத் தெளிவாகத் தெரியும். இத்திட்டம் வெற்றி பெற வேண்டுமானால ஒதுக்கப்பட்ட மூலதனத்துடன், பொதுமக்களின் ஒத்துழைப்பும், மிகப்பெரிய அளவிலான கடனுதவியும் இவைகளை ஒருங்கிணைத்து நேர்மையான முறையில் செயல்படுத்துவதின் மூலமே ஆகும்.

காய்கறிகள், பழங்கள் முதலியவற்றை பெரிய அளவில் விவசாயம் செய்தோமானால் மூணார் பஞ்சாயத்திற்கு அதனால் உண்டாகும் மிகப்பெரிய லாபத்தைக் கொண்டு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தலாம். அதுபோலவே ''சுற்றுலாத் தொழிற் துறையின் வளர்ச்சியின் ஒரு பாகமான ''ரோப்வே'' செயல்படுத்த அரசு அல்லாத பெரிய நிதி நிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெற்று நடத்தும்போது அதன்மூலம் கிடைக்கும் மிகப்பெரிய லாபத்தினால் கடனை அடைக்கவும், வளர்ச்சித்திட்டத்திற்குப் பயன்படுத்தவும் முடியும். மேற்கூறிய இரண்டும் இருதுறைகளிலுள்ள சிறு சான்றுகளாகும். ஆகவே மாதிரித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்துச் செயல்பட வேண்டும்.

இவ்வளர்ச்சித்திட்ட அறிக்கையைத் தயாரிக்க பல வழிகளிலும் உதவியாக இருந்த இப்பஞ்சாயத்தின் DRPகள், LRPகள், பஞ்சாயத்து நிர்வாக ஊழியர்கள் கிராமப் பஞ்சாயத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் மாவட்டப் பஞ்சாயத்தின் உறுப்பினர்கள், வட்டார பஞ்சாயத்தின் உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் எல்லோருக்கும் மக்களால் திட்டமிடும் இவ்வமைப்பில் பங்கேற்ற அனைத்துப் பொது மக்களுக்கம் இப்பஞ்சாயத்தின் ஆட்சிக் குழுவின் சார்பாக எங்கள் இதயபூர்வமான நன்றியையும் வணக்கத்தையும் காணிக்கையாக்குகிறோம்.

கேரள மாநில திட்டக்குழுவின் மக்கள் திட்ட அறிக்கை – மூணார் பஞ்சாயத்தில் பங்கு கொண்டோரின் பொதுக் கண்ணோட்டம் – ஒரு அறிக்கை

District: Idukki Block: Devikulam Panchayat: Munoar.

கிராம சபைக் கூட்டம் – மதிப்பீடு

வார்டு எண்	கிராம சபை நடந்ததேதி	பங்குபெற்றவர்களின் எண்ணம்		மொத்தம்	பங்கு கொண்ட உத்தியோகஸ்தர்கள் எண்ணிக்கை	SC/ST அங்கங்களின் எண்ணம்
		ஆண்	பெண்			
1	25.09.96	30	82	112	7	82
2	23.08.96	34	71	105	3	35
3	24.08.96	28	89	117	2	80
4	29.08.96	57	94	151	3	120
5	28.09.96	37	68	105	4	81
6	30.09.96	30	72	102	10	78
7	01.10.96	30	78	108	3	69
8	22.09.96	34	72	106	4	92
9	02.10.96	141	167	308	6	183
10	02.10.96	200	250	450	4	120
11	21.09.96	32	102	134	3	90
12	30.09.96	51	82	133	2	110
13	29.09.96	45	65	110	2	90
14	30.09.96	60	124	184	2	161
15	06.10.96	30	73	103	3	82
	மொத்தம்	839	1487	2328	58	1473

ஒன்பதாவது ஐந்தாண்டு மக்கள் திட்ட முதல் நிலை பஞ்சாயத்து தல பயிற்சி முகாம்

பங்கு கொண்டவர்களின் எண்ணிக்கை	பங்கு பெற்றோர்		தேதி	மக்கள் பிரதிநிதிகள் எண்ணிக்கை	உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கை	DRP மாருடைய LRP எண்ணிக்கை	நேரம்
	ஆண்	பெண்					
72	37	35	14.10.96 முதல் 16.10.96 வரை	15	28	DRP. 26 + LRP.126 + 152	10.30காலைமுத 8.30 இரவு வன

இரண்டாம் நிலை பயிற்சி முகாம்

பங்கு கொண்டவர்களின் எண்ணிக்கை	பங்கு பெற்றோர்		தேதி	மக்கள் பிரதிநிதிகள் எண்ணிக்கை	உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கை	DRP மாருடைய LRP எண்ணிக்கை	நேரம்
	ஆண்	பெண்					
82	52	30	11.10.96 முதல் 13.10.96 வரை	15	13	DRP. 20 KRP. 4	10.00காலைமுத 5.00 இரவு வன

Panchayat Employees.

Office Staff

Y.Sethunath	-	Special Grade Secretary.
K.V.Mohandas	-	Assistant Engineer.
K.S.Karunakaran	-	I st Grade Overseer (Electrical).
V.G.Ushadevi	-	II nd Grade Overseer (Civil).
V.P.Gopalan	-	U.D Clerk.
D.Selvanayagam	-	U.D Clerk.
P.M.Joseph	-	U.D Clerk.
C.D Joseph	-	U.D Clerk.
A.Abdul Javed	-	L.D Clerk.
J.Yesudas	-	L.D Clerk.
S.Jhon	-	L.D Clerk.
K.M Azeez	-	L.D Clerk.
O.Palaniswami	-	Peon.
T.F Mary	-	Peon.
P.M Mathew	-	Driver.

Hospital Staff

Dr. Betty Joseph, M.B.B.S
K.F Rosa, A.N.M.
K.M Soosan (Pharmasist).
K. Ramani (Warden)
Baby (Driver)

Sanitation

Raman Subban (F.T.S)
R. Kalimuthu. (F.T.S)
Perumal Subban. (F.T.S)
G.Mony. (F.T.S)
G. Palaniswami. (F.T.S)
M. Lakshmi. (F.T.S)
Pakkiyan. (F.T.S)

പഞ്ചായത്തിന്റെ പ്രവർത്തനങ്ങൾ

14-ാം വാർഡിൽ ആദിവാസി കുടിയിലേക്ക് റോഡ് പണിയൽ
പ്രസി: ചോലൈസാമി നിർവഹിക്കുന്നു

നവം : 1 അർപ്പണദിനം
ഉത്ഘാടനം ജില്ലാ പ്രസിഡണ്ട്,
അരുകിൽ പഞ്ചായത്ത് പ്രസിഡണ്ട് ശ്രീ. ചോലൈസാ

വിത്ത് വിതരണം
പഞ്ചാ: പ്രസി: ശ്രീ ചോലൈസാമി

പിറവിദിനം
ജില്ലാപ്രസിഡണ്ട് : മധുരം വിളമ്പുന്നു



നവം : 1
പൊതുസമ്മേളനം
പ്രസി: ചോലൈസാമിയുടെ അദ്ധ്യക്ഷതയിൽകൂടി

സോഡിയം വേപ്പർ ലാമ്പ്
ഉത്ഘാടനം ബ്ലോക് പ്രസിഡണ്ട്
അരുകിൽ പഞ്ചാ: പ്രസി: ശ്രീ. ചോലൈസാമി

വിത്തു വിതയ്ക്കൽ
ജില്ലാ പ്രസിഡണ്ട്, ബ്ലോക്ക് പ്രസിഡണ്ട്
പഞ്ചായത്തു പ്രസിഡണ്ട് ശ്രീ. ചോലൈസാമി

താഴകണ്ടംകുടി
ആദിവാസികോളനിയിൽ L.K.G. വിഭാഗത്തിന്റെ ഉത്ഘാടനം
പ്രസിഡണ്ട് ശ്രീ. ചോലൈസാമി നിർവ്വഹിക്കുന്നു

10-ാം വാർഡ്
താഴകണ്ടംകുടി L.K.G. വിഭാഗത്തിന് യൂണിഫോം വിതരണം
പ്രസി: ശ്രീ. ചോലൈസാമി

14-ാം വാർഡ് ആദിവാസികോളനി [illegible] പ്രവർത്തനം

WITH BEST COMPLIMENTS FROM

T THE RESIDENCY

Issac's
THE RESIDENCY

MUNNAR - KERALA

Phone :
STD CODE : (04865)
30247, 30265
30501, 30502

Fax :
(04865) 30317

Cable :
'RESIDENCY'

◆20 Well equipped rooms including 2 suite offering a panaromic view of the mist covered Kannan Devan Hills ◆ CCTV in all rooms ◆ money changing ◆ credit card - Can Card, Diners, Citibank and affiliated cards ◆ EPABX ◆ 24 hours running hot and cold water ◆ Room service, laundry and Valet ◆ 2 speciality restaurants offering Indian, Continental and Chinese cuisine ◆ Well stocked Bar ◆ Conference / Banquet Hall with a confering facility for 120 pax ◆ car rental ◆ Doctor on call ◆ 24 hour security service ◆ safe deposit facility.

Your Home in the Hills

With Best Compliments From:

TATA TEA LTD

PRODUCERS OF
BEST QUALITY TEA

Printed at Samareka Impressions Ernakulam. Ph: Off: 336373. Resi: 557040